இந்தியா—நாடும் மக்களும்

# மூலிகைகள்

சுதான்சு குமார் ஜெயின்

28935



# மூலிகைகள்

இந்தியா—நாடும் மக்களும்

# மூலிகைகள்

டாக்டர். எஸ். கே. ஜெயின்

தமிழாக்கம்
டாக்டர். இராம. சுந்தரம்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

ISBN 81-027-0482-8

முதற்பதிப்பு : 1994 (சக 1915)
மறுஅச்சு : 1996 (சக 1918)
© டாக்டர் எஸ்.கே. ஜெயின், 1968
தமிழாக்கம் © நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
Medicinal plants (Original Title in English)
Moolikaikal (Title in Tamil)
ரூ. **38.00**
வெளியீடு : இயக்குனர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
ஏ-5, கிரீன் பார்க், புது டில்லி - 110016

# உள்ளடக்கம்


முகவுரை ix

முன்னுரை 1

தாவர விளக்கம்

1. குப்பைமேனி 8
2. அகோனைட் 10
3. வசம்பு 12
4. ஆடாதோடை 15
5. வில்வம் 16
6. பேரரத்தை 18
7. பாலை 21
8. நிலவேம்பு 22
9. பெருமருந்து 24
10. புழுவிதை 25
11. பெல்லடோனா 27
12. வேம்பு 29
13. சாம்பிராணி இலை 32
14. மரமஞ்சள் 33
15. மூக்கரட்டை 37
16. பலாசு 38
17. கொன்றை 40
18. சுடுகாட்டு மல்லிகை 43
19. வல்லாரை இலை 45
20. காட்டுச்சீரகம் 46
21. இபிகாக் 48
22. சின்கோனா 49
23. இலவங்கப்பட்டை 51
24. இரணியதுத்தம் 54
25. கோப்டிஸ் 56
26. மரமஞ்சள் 57
27. குராரம் 58
28. சிம்போபோகன் 60
29. ஊமத்தை 62

| | | |
|---|---|---|
| 30. | டிஜிட்டாலிஸ் | 64 |
| 31. | டியோஸ்கோரியா | 65 |
| 32. | ஏலக்காய் | 67 |
| 33. | எம்பிலியா | 69 |
| 34. | நெல்லிக்காய் | 71 |
| 35. | எஃபெட்ரா | 74 |
| 36. | அம்மான்பச்சரிசி | 77 |
| 37. | பெருங்காயம் | 83 |
| 38. | கூதிர்பச்சை | 85 |
| 39. | நீலமலர்ச்செடி | 86 |
| 40. | அதிமதுரம் | 87 |
| 41. | நன்னாரி | 89 |
| 42. | இந்திரபம் | 91 |
| 43. | மரவட்டை | 93 |
| 44. | நீர்முள்ளி | 94 |
| 45. | ஹியோஸியாமஸ் | 96 |
| 46. | சிரிக்கி | 97 |
| 47. | மருதோன்றி | 104 |
| 48. | காட்டுப் புகையிலை | 105 |
| 49. | இலுப்பை | 107 |
| 50. | கபிலப்பொடி | 110 |
| 51. | புதினாக்கீரை | 113 |
| 52. | சடாமஞ்சில் | 114 |
| 53. | துளசி | 116 |
| 54. | சிவதை | 118 |
| 55. | சீமையரவந்தி | 120 |
| 56. | உத்தாமணி | 122 |
| 57. | கடுகுரோகணி | 123 |
| 58. | சீமைத்தேவதாரி | 124 |
| 59. | பிப்பிலி (வால்மிளகு) | 126 |
| 60. | இஷப்குல் | 128 |
| 61. | இந்திய மஞ்சள் குங்கிலியம் | 130 |
| 62. | கார்போகரிசி | 131 |
| 63. | இந்திய வேங்கைமரம் | 132 |
| 64. | சர்ப்பகந்தி | 134 |

| | | |
|---|---|---|
| 65. | இரவேற்சின்னி | 136 |
| 66. | ஆமணக்கு | 138 |
| 67. | சந்தனம் | 140 |
| 68. | அசோகு | 141 |
| 69. | கோஷ்டம் | 143 |
| 70. | அரிவாள் மனைப்பூண்டு | 145 |
| 71. | கண்டங்கத்தரி | 147 |
| 72. | வெள்ளைப் பூத்தாளி | 151 |
| 73. | நிலவேம்பு | 153 |
| 74. | லோத் | 154 |
| 75. | நாகை, சம்பல் | 156 |
| 76. | புளி | 159 |
| 77. | அக்கம் தான்றி | 161 |
| 78. | அமிர்தவல்லி | 165 |
| 79. | சாறணை | 166 |
| 80. | நெருஞ்சி | 168 |
| 81. | காகித்தம் | 171 |
| 82. | நரிவெங்காயம் | 172 |
| 83. | சடாவல்லி | 174 |
| 84. | அசுவகந்தி | 175 |
| | துணை நூற் பட்டியல் | 179 |

## வண்ணப்படங்கள்

1. சிம்போபோகன் (*சிம்போ போகோன்*)
2. ஹியோஸியாமஸ் (*ஹயோஸியாமஸ் நிகெர்*)
3. துளசி (*ஒசிமம் சாங்டம்*)
4. இஷப்குல் (*பிளாண்டாகோ ஒவாட்டா*)
5. கார்போகரிசி (*சோராலேயா கோரீலி ஃபோலியா*)
6. அமிர்தவல்லி (*டினோஸ்போரா கார்டிஃபோலியா*)
7. கண்டங்கத்தரி (*ஸொலானும் ஸராத்தேன்ஸே*)
8. சர்ப்பகந்தி (*ராவுவால் ஃபியா செர்பெண்டினா*)
9. காசித்தம் (*டைலோ ஃபோரா இண்டிகா*)

## சித்திரங்கள்

1. குப்பைமேனி
2. ஆடாதோடை
3. பாலை
4. வேம்பு
5. மரமஞ்சள் (Berberis aristata)
6. மரமஞ்சள் (Bilycium)
7. கொன்றை
8. இலவங்கப்பட்டை
9. ஏலக்காய்
10. நெல்லிக்காய்
11. அம்மான் பச்சரிசி (Euphoribia hirta)
12. அம்மான் பச்சரிசி (Euphorbia antiquorum)
13. அம்மான் பச்சரிசி (Euphorbia nerifolia)
14. சிரிக்கி (Ipomoea nil)
15. சிரிக்கி (Ipomoea pestigridis)
16. சிரிக்கி (Ipomoea aquatica)
17. சிரிக்கி (Ipomoea pescaprae)
18. இலுப்பை
19. சிவதை
20. கண்டங்கத்தரி
21. சம்பல்
22. புளி
23. தான்றி
24. சாறணை
25. நெருஞ்சி
26. அசவகந்தி

# முகவுரை

மூலிகைகள் மூலம் சிகிச்சை பெறுதல் என்பது ஏதோ மந்திரம், மாயம் என்ற வகையைச் சார்ந்ததாகக் கருதுபவர்கள் இன்றும் உள்ளனர். நமது பழைய இலக்கியங்கள், கடுமையானதும் குணப்படுத்த முடியாததுமான நோய்களைக்கூட குணப்படுத்தி விடும் புகழ்பெற்ற தாவரங்களைப்பற்றி மட்டுமல்லாது, அத்தாவரங்களின் மாந்திரீகத் தன்மையைக் குறித்தும் பல குறிப்புக்களைக் கொண்டுள்ளன. மந்திரம் செபித்து சில விதைகளை ஒருவன் மீது தெளித்து அவனை வசப்படுத்துதல், சில வேர்களை மெல்லுவதன்மூலம் நீண்ட ஆயுளைப் பெறுதல், ஒரு குறிப்பிட்ட தாவரத்தின் சாற்றை எடுத்து அதன் சில துளிகளை இறந்தவன் வாயில் விட்டு அவனைப் பிழைக்க வைத்தல்-என்று நாம் படித்த சிலவற்றை இதற்கு உதாரணமாகச் சொல்லாம்.

பழங்காலத்தில், அனுபவத்துக்கும் சோதனைக்கும் உட்படுத்தப்பட்ட மருந்துகளைவிடவும் ஒரு துறவியால் (பக்கிரி) தரப்பட்ட மருந்து பெரிய வரவேற்பையும் புகழையும் பெற்றது. , அக்கால மனநிலைக்கு அவ்வகையான நம்பிக்கைகள் பொருத்தமே.

காலங்கள் மாறின. மனிதன் தனது பகுத்தறிவால் ஒவ்வொன்றையும் எடைபோடத் தொடங்கியதும், முற்கால நம்பிக்கைகள் பொருளற்றுப் போயின; மருத்துவ மூலிகைகளைப் பயன்படுத்துவது குறைந்து போயிற்று. இன்றைக்கு, மருத்துவ மூலிகைகளின் முக்கியத்துவமும் பயன்பாடும், பெரும்பாலும் விவாதத்துக்கும் சொற்பொழிவுக்கும் உரிய பொருளாகத்தான் உள்ளனவே தவிர, ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் உரிய பொருளாக இல்லை. ஏன் இந்த நிலைமை?

வளர்ந்த நாடுகள் தத்தம் நாட்டுத் தாவரங்கள் பற்றிய ஆராய்ச்சியில் முனைப்பாக ஈடுபட்டு, அவற்றின் சமகாலப் பயன்பாட்டையும், பயன்பாட்டுக் கூறுகளின் புதிய மூலங்களையும் கண்டுபிடித்துக்கொண்டிருக்கிற வேளையில், நாம் நமது கடந்தகாலப் பெருமையையும், அதிசய மருத்துவ மூலிகைகளையும், நமது கடந்த கால அறிவுச் செல்வத்தையும் பற்றி

மட்டும் பேசி வருகிறோம். 'இதுவே போதும்' என்ற மனநிலை உடையவர்களாக நாம் இருந்துவிட்டோம். மறுபக்கத்தில், சக்தி மிக்கவை என நன்கு நிருபிக்கப்பட்ட நமது ஆயுர்வேத, யுனானி மருந்துகளில் கூட ஆர்வத்தையும் நம்பிக்கையையும் படிப்படியாக இழந்து, அளவுக்கதிமாக அலோபதி மருந்துகளை மிக உற்சாகத்துடன் வரவேற்றோம். நமது மருத்துவத்தாவரங்கள் உண்மையிலேயே ஏதேனும் பயன்படத்தக்க குணங்களைக் கொண்டிருக்கின்றனவா என்பதைப் பற்றி அறியவோ, ஏன், நினைக்கவோகூட, நம்மில் பலர் ஒருக்காலும் முயன்றதில்லை.

ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்புவரை, நமது மருத்துவத் தாவரங்களில் சில விஞ்ஞானச் சோதனைக்கும் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டிருந்தன. ஆயினும் அவற்றின் பயன் பற்றி ஆதரவாகவோ எதிராகவோ எதையும் சொல்வது கடினமாக இருந்தது. முதலில் என்னவெல்லாம் சொல்லப் பட்டிருந்ததோ, எழுதப்பட்டிருந்ததோ, அவையே அடுத்தடுத்த வெளியீடுகளில் திரும்பத்திரும்பச் சொல்லப்பட்டன ; மொழிபெயர்க்கப்பட்டன; தழுவிக் கொள்ளப்பட்டன. ஆகவே, நம்பமுடியாத தகவல்கள் மிகப்பெரிய அளவில் நமது மருத்துவத் தாவர நூல்களில் நுழைந்தன, பரவின; நிலைபெற்றன. அம்மாதிரிப் பிரச்சினைகள் சில இந்நூலின் முன்னுரையில் விவாதிக்கப்பட்டுள்ளன.

இந்திய மருத்துவத் தாவரங்கள் பற்றிச் சிறியதும் பெரியதுமாக எண்ணற்ற நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவைகளில் பலவும் ஆயுர்வேத மருத்துவர், தாவரவியலார், மருந்தியலார் அல்லது மருந்து தயாரிப்பவர் போன்ற வல்லுநர்களுக்காக எழுதப்பட்டவை. ஆனால், சாதாரண வாசகர்களுக்கான நேஷனல் புக் டிரஸ்ட் தனது 'இந்தியா-நாடும் மக்களும்' என்ற வரிசைத் தொடரை வெளியிடுகையில் எவ்வகை வாசகர்களை மனதில் கொண்டு நூல்களைத் தயாரித்ததோ அவ்வகை வாசகர்களுக்கான ஒரு நூல் இதுவரை எழுதப்படவில்லை. இந்த நோக்கில், அவ்வகை வாசகர்களுக்கு ஏற்றதொரு பொருளாக மூலிகைச் செடிகளையும் கருதியதற்காக டிரஸ்ட் நமது பாராட்டுக்குரியதாகிறது. டிரஸ்ட் இந்த வரிசையில் வெளியிட்டுள்ள பற்பல நூல்களையும் பார்க்கும்போது, ஒவ்வொரு நூலும் தனித்தன்மை உடையதாகவும், அதே பொருளில் ஏற்கனவே வெளிவந்துள்ள நூல்களினின்றும் வேறுபட்டதாகவும் இருப்பதை வாசகன் உணரமுடியும்.

இந்த எனது நூல் ஏறத்தாழ 100 மருத்துவத் தாவரங்களைப் பற்றிக் கூறுவதோடு, மருந்தியல் மற்றும் பிற செய்முறை நூல்களின் அடிப்படையில் அமைந்த அதிகாரபூர்வத் தகவல் களை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது. மருத்துவத்தாவரம் பற்றிய நூல்கள் பலவாகப் பரந்துகிடப்பதால், அண்மையில் வெளியான சில குறிப்புகள் என் கவனத்திலிருந்து தப்பியிருக் கலாம்; எனவே பயனுள்ள எல்லாவிதக் கருத்துக்களையும் நன்றியுடன் வரவேற்கிறேன்.

வண்ணம் மற்றும் கருப்பு - வெள்ளைப் படங்களும் வரை படங்களும் பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்டிருக்கின் றன. இவற்றுக்காக நான் கீழ்க்கண்ட அமைப்புகளுக்கும் தனியாருக்கும் நன்றி செலுத்துகிறேன்; இயக்குநர், இந்திய தாவர அளவீட்டுக் கழகம்; முதன்மைப் பதிப்பாசிரியர், தகவல் மற்றும் வெளியீட்டு இயக்ககம்; சி.எஸ்.ஐ.ஆர், நியூடெல்லி; வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறைகள், மைசூர்; தாவரவியல் துறை, டெல்லி பல்கலைக் கழகம்; டாக்டர் கே. சுப்பிரமணியம்; திரு. கே. சீனிவாசன்; டாக்டர் எம்.ஏ. ராவ்; மறைந்த டாக்டர் ஹெச்.பி. சிங்; டாக்டர் ஆர்.எஸ். ராவ்; டாக்டர் டி.ஏ. ராவ் மற்றும் டாக்டர் ஏ.டி. சைனி.

மறைந்த டாக்டர் ஹெச். சாந்தாபௌ இந்த நூலின் பெரும்பகுதியைப் படித்து, பயனுள்ள பல கருத்துக்களைக் கூறினர். திரு. கே. கஷ்யப்பா திரு. ஆர்.எஸ். மித்ரா இருவரும் குறிப்பு எடுக்கும் பணியில் உதவினர். மறைந்த திரு. பி. லங்காஸ்டர் தாவரங்களின் பயன் பற்றிச் சில மதிப்பு வாய்ந்த கருத்துக்களைச் சொன்னர். இவர்கள் எல்லோருக்கும் என் நன்றி.

பல ஆண்டுகளுக்கு முன் படித்த ஒரு வாக்கியத்தோடு இந்தச் சிறு முகவுரையை முடிக்கிறேன்; மேலும் திருத்தங்கள் செய்ய முடியாத அளவுக்கு முற்ற முடிந்த ஒரு நூலை எழுதுவதற்காக ஓர் ஆசிரியன் காத்திருப்பின் எதுவும் எப்போ தும் எழுதப்பட மாட்டாது.

**எஸ்.கே. ஜெயின்.**

# முன்னுரை

மருத்துவம் மற்றும் அறுவை மருத்துவத்தின் வரலாறு மனித இனத்தின் தோற்ற காலத்துக்கே நம்மை அழைத்துச் செல்லக்கூடியது என்று கூறலாம். ஆனால், வரலாற்றுக்கு முந்திய காலக்கட்டத்திய நிகழ்வுகளைக் குறித்துவைக்க எவ்விதச் சாதனமும் இல்லாத காரணத்தால், அன்றைய சிகிச்சை முறைபற்றி அறிவதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. அக்காலத்தில் மனிதனின் துயரமும் துயர்நீக்கமும் மதம், மந்திரம், மற்றும் தெய்வக் கதைகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. இவற்றோடுகூட, அறிவுபூர்வமான ஏதோ சிகிச்சை முறையும் இருந்திருக்க வேண்டும். பழமையை அறிய விரும்பும் நமது ஆவல் நமது முன்னோர்களின் திறமைசான்ற சிகிச்சை முறை பற்றிய துண்டுத்துணுக்கான தகவல்களையே அவ்வப்போது வெளிக்கொண்டுவந்தாலும், இவை கூடச் சுவையானதாகவே அமைந்துள்ளன.

ரிக்வேதத்தில் காணப்படும் சில மூலிகைகளின் நோய் தீர்க்கும் பண்புகள் பற்றிய குறிப்புகள்தாம், தாவரங்களின் மருத்துவப் பயன்பற்றிய பழைய சான்றுகளாக இந்தியாவைப் பொறுத்தமட்டில் அமைகின்றன. ரிக்வேத சுக்தாக்களில் சுட்டப்படும் பல தாவரங்களை நம்மால் இப்போது ஓரளவு உறுதிப்பாட்டுடன் இனம் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக, சேமல், பித்வான், பலாசு, பிப்பிலி ஆகியவற்றைக் கூறலாம். ஆனால், ரிக்வேதத்தில் தாவரங்களைப் பற்றிய மிகச் சுருக்கமான குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. அதர்வண வேதத்தில் இன்னும் சிறிது விரிவான குறிப்புகள் உள்ளன. ரிக்வேத காலம் கி.மு. 3500 - 1800க்கு இடைப்பட்டதாகக் கணக்கிடப்படுகிறது. வேதங்களுக்குப் பிறகு, சுமார் 1000 ஆண்டுக் காலத்துக்கு, இந்த விஞ்ஞான வளர்ச்சி பற்றிய எவ்விதத் தகவலும் இல்லை.

அதன்பின், இந்திய மருத்துவ முறை குறித்த இரண்டு முக்கியமான நூல்கள் எழுதப்பட்டன. ஒன்று, சரகசம்ஹிதை; மற்றது, சுஸ்ருத-சம்ஹிதை. சுஸ்ருத-சம்ஹிதை 700 மருந்துகளைப் பற்றிக் கூறுகிறது; ஆனால், அவற்றுள் சில

இந்தியாவுக்கு உரியவையல்ல. காலம் செல்லச்செல்ல, இந்திய மருத்துவத்தில், மேலும் மேலும் பல தாவரங்கள் சேர்க்கப்பட்டன. இன்று மொத்தம் 1500 மருத்துவ மூலிகைகள் உள்ளன.

இந்திய மருத்துவத் தாவரங்கள் பற்றிப் பெரிதும் சிறிதுமாகப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் சில நூற்றுக்கணக்கான பக்கங்களைக் கொண்ட பல தொகுதிகளாக உள்ளன. இந்தியாவின் பல பாகங்களிலும் கிடைக்கக் கூடிய ஒரே மாதிரித் தாவரத்துக்குச் சொல்லப்படும் மருத்துவப் பண்புகள் சில நேரங்களில் பெரிதும் வேறுபடுகின்றன. இதனால், இத் தாவரங்களைப் பற்றி வட்டார மொழிகளிலும் பல நூல்கள் எழுதப்படலாயின. யு.சி. தத், ஜி. வாட், ஆர்.என். சோப்ரா (அவரது துணைவியார் மற்றும் மாணவர்கள்) கே.எம். நட்கர்னி, கே.ஆர். தீர்திகர், பி.டி. பாசு, பி. முகர்ஜி, சந்திரராஜ் பண்டாரி, கே. பிஸ்வாஸ், கே.பி. திரிவேதி, Wealth of India (Raw Materials) நூலின் பதிப்பாசிரியர்கள் ஆகியோரும் பிறரும் கடுமையாக உழைத்து எல்லாத் தகவல்களையும் ஒன்று திரட்டித் தந்துள்ளனர்.

சில ஆசிரியர்கள் தாவரங்களை இனங்காண்பதிலும் அவற்றின் பயன்களை அறிவதிலும் சரியான கவனம் செலுத்தாமல் தகவல்களைத் தொகுத்துள்ளனர். அதனால், மனிதனின் முடி முதல் அடி வரை உள்ள எல்லா நோய்களையும் சில மூலிகைகள் குணப்படுத்திவிடும் என்று சொல்லப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

பழைய இலக்கியங்கள் அபூர்வ மூலிகைகள் அல்லது அற்புத மருந்துகள் பற்றி மீண்டும் மீண்டும் குறிப்பிடுதலைக் காணலாம். அக்காலத்தில் மக்கள் அவற்றின் மாதிரிகளைப் பேணி வைத்திருப்பார்கள் என நாம் எதிர்பார்க்க முடியாது; தாவரங்களின் சரியான விளக்கம்கூட இல்லாதிருக்கின்றது. விரிவான தகவல் இல்லாததால் அந்தத் தாவரங்களை இனங்காண்பது நடைமுறையில் இயலாததாகி விடுகிறது. இந்தச் சந்தர்ப்பங்களில் நமக்கு உதவக்கூடிய மூலங்கள், அந்தத் தாவரத்துக்கு அல்லது மருந்துக்கு முந்தைய நூல்களில் வழங்கப்படும் தலப்பெயர்கள்தான் (Local names); இந்தத் தலப்பெயர்கள் சில நேரங்களில் தவறாகவும் இருக்கின்றன. சில பெயர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மூலிகைகளுக்கு வழங்கப்படுவதும் பரவலாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வெவ்வேறான தாவரங்கள்

நமது நூல்களில் புனர்னவா, பிரஹ்மி, பாலா, துதி என்கிற பெயர்களால் குறிக்கப்படுகின்றன. நமது பழைய இலக்கியங் களில் குறிக்கப்பட்டுள்ள முக்கியமான மருந்துகளை இனங் கண்டு வரையறுக்கச் சில ஆய்வாளர்கள் தற்போது முயன்று வருகிறார்கள். இது குழப்பத்தைத் தவிர்க்க உதவலாம்.

நமது பழைய மருத்துவ மூலிகைகள் பற்றி முழுமையா கவோ அரைகுறையாகவோ எழுதப்பட்ட எழுத்துச் சான்றுக ளேயன்றி, இவை பற்றித் தலைமுறை தலைமுறையாக வழங்கி வரும் செவி வழிச் செய்திகளும் உள்ளன. இவ்வகை அறிவு இன்றும் பழங்குடிச் சமூகத்தினரிடம், குறிப்பாக, தொலைதூரக் காடுகளில் வசிக்கும் ஆதிவாசிகளிடம், இருந்து வருவதைக் கூறலாம். இந்த அறிவு அவர்களது நாட்டுப்புற இலக்கியம் வழி அறியக் கூடியதாக இருக்கிறது. அந்த நாட்டுப்புற இலக்கியங்களைப் பதிவு செய்யும் முயற்சி, ஆழமாகவும் முழுமையாகவும் நடைபெறவில்லை என்றாலும், ஓரளவு நடந் துவருகிறது; இவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு இனத்தாவர இயல் (ethnobotany) என ஒரு சிறப்புத் துறையாக இப்போது வகைப்படுத்தப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன், மத்திய இந்திய ஆதிவாசிகளிடம் இவ்வகை ஆய்வை நான் தொடங்கினேன். மூலிகைகளின் மருத்துவப் பயன் குறித்து இலக்கியங்கள் இதுவரை அறிந்திராத பல செய்திகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றிலிருந்து சிலவகைத் தாவரம் பற்றிய ஆர்வமூட்டும் குறிப்புகள் இந்த நூலில் சேர்க்கப்பட் டுள்ளன. எனினும், அவை அறிவியல் பூர்வமாகச் சோதிக்கப் பட வேண்டும்.

மருத்துவ மூலிகைகளைத் தற்கால அறிவியல் வழிச் சோதனை களுக்கு உட்படுத்துவது பற்றிய வினா அடிக்கடி எழுப்பப்படு கிறது. நன்கு தெரிந்த, புகழ் பெற்ற சில மருத்துவ மூலிகைகளி லிருந்து எடுக்கப்பட்ட ஆல்கலாய்டுகள் மீதான மருந்தியல் மற்றும் ஆய்வுக்கூடச் சோதனைகள் சில சமயங்களில் மிகத் தெளிவான முறையில், எதிர்மறை முடிவுகளையே தந்துள்ளன. இந்த முடிவுகள் மிகவும் கவனமான, நுணுக்கமான முறையில் மறு மதிப்பீடு செய்வதற்கு நம்மைத் தூண்டுகிற அதே வேளையில், இந்தப் பிரச்சினையின் மற்றொரு அம்சத்தையும் நாம் பார்க்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட மூலிகையின் மருத்துவப் பண்பு அந்த மூலிகையிலிருந்து பிரித்தெடுக்கப்ப டும் சிறு சிறு பகுதிகளில் இரசாயனக் கூறுகளிலின்றி, அந்த மூலிகையின் முழுப் பகுதியையும் சார்ந்திருக்கக் கூடும்.

மேலும், மூலிகையைச் சேகரிக்கும் நேரம், அதன் வளர்ச்சி நிலை (திறந்த அல்லது மூடிய பூக்கள்; இளைய அல்லது முதிர்ந்த இலைகள்; பூக்கும் முன் அல்லது பூத்தபின் உள்ள நிலை) அது விளையும் இடத்தின் தன்மை ஆகியவையும் அதன் மருத்துவப் பண்பின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றன.

மனித நோய்களைக் குணப்படுத்த இந்தியாவில் பயன்படுத்தப்படும் சுமார் 2000 மருந்துகளில், ஏறத்தாழ 200 மருந்துகள் விலங்குகளிலிருந்தும், 200 மருந்துகள் தாதுப் பொருள்களிலிருந்தும் கிடைக்கின்றன என மதிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ளவை, அதாவது, சுமார் 1500 மருந்துகள் தாவர மூலத்தைக் கொண்டவை. நமது நாட்டுப் பரப்பையும், இங்கு விளையும் வகை வகையான தாவரச் செல்வத்தையும் கணக்கிலெடுத்தால், இந்த எண்ணிக்கை அப்படி ஒன்றும் பெரிதல்ல. இந்தியாவின் தட்பவெப்ப நிலை அளவு, (49 $^{0}$ செ.கி. முதல் –43 $^{0}$ செ.கி. வரை) மழை அளவு (100 மி.மீ. முதல் 10,000 மி.மீ. வரை) நிலத்தின் உயர் மட்டம் (கடல் மட்டத்திலிருந்து 6000 மீ. உயரம்) ஆகியவை இந்தியாவில் 15000 க்கும் மேலான உயர் வகைத் தாவரங்கள் விளைவதற்கு உறுதுணையாக உள்ளன.

1500க்கு மேற்பட்ட மருத்துவ மூலிகைகளில் சுமார் நூறை மட்டும் தேர்ந்தெடுப்பது சிக்கலாகத்தான் இருந்தது. பொதுவாக, சக்திவாய்ந்த மருத்துவப் பண்புள்ளவை என்று சோதித்தறியப்பட்ட மூலிகைகள், உதாரணமாக இந்திய மருத்துவக் குண பாடம் (Indian Pharmaceutical Codex), பிரிட்டிஷ் மருத்துவக் குண பாடம் (British Pharmaceutical Codex), ஐக்கிய அமெரிக்க மருந்தியல் நூல் (United States Dispensatony) ஆகியவற்றில் சேர்க்கப்பட்டவை, இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. பெரும்பாலும், நம் நாட்டுக்குரிய மூலிகைகளே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மருத்துவரீதியாகவும் வணிக ரீதியாகவும் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் சில புதிய வகைகளும், இந்தியாவில் தற்போது தொடர்ந்து பயிரிடப்படும் வகைகளும் இங்கு சேர்த்துக் கொள்ளப்பட்டன. அந்த வகைத் தாவர இனங்கள் தற்போது இந்த மண்ணுக்கும் இயல்பாகி விட்டன.

மருந்தின் நன்கறிந்த பெயர் அல்லது வணிகப் பெயர் அத்தியாயத் தலைப்பாகத் தரப்பட்டுள்ளது. சில இடங்களில் ஒரு பொருளின் மாற்றுப் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன. இந்த நூலின் அத்தியாய ஒழுங்குமுறை

தாவரங்களுக்கான தாவரவியல் பெயர்களது (ஆங்கில) அகர வரிசையில் அமைக்கப்பட்டுள்ளது. இயன்றவரை, அண்மைக் காலத் தாவரவியல் பெயர்கள் கையாளப்பட்டுள்ளன. இருப்பினும், பழைய பெயர்களோடு பழக்கமுள்ள வாசகர்களுக்கு வேண்டி ஆங்காங்கே இந்தப் பழைய பெயர்களும் தரப்பட்டிருக்கின்றன. தாவரங்களின் குடும்பப் பெயரைத் தொடர்ந்து அவற்றின் இந்தியப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. இந்தப் பெயர் முதலிலும், மற்ற மொழிப் பெயர்கள் அடுத்தும் அகர வரிசையில் தரப்பட்டுள்ளன. சில வட்டாரப் பெயர்கள் அல்லது சில ஆங்கிலப் பெயர்கள் இந்தியப் பெயர்களின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான இடங்களில் வணிக அல்லது அறிவியல் பெயர் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது.

தாவரம் பற்றிய ஒரு சிறு விளக்கம் தரப்படுகிறது; ஒரு தாவரம் மற்றும் அதன் பகுதிகளின் பொது அமைப்பு, பயிராகும் இடம் பற்றி வாசகர்கள் அறிந்து கொள்ள உதவக்கூடிய பண்புகள் மட்டும் அதில் குறிக்கப்படுகின்றன. கலைச் சொற்களும் விளக்கவுரைகளும் கூடுமானவரை விலக்கப்பட்டுள்ளன. சில இடங்களில், தடுமாற்றத்தைத் தவிர்க்க வேண்டி, கலைச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தாவரங்களை விளக்கும்போது 'தந்தி மொழி' கையாளப்படுவது மரபு; அந்த மரபு இங்கும் பின்பற்றப்பட்டுள்ளது. மூலிகைப் பண்ணையிலுள்ள பலதரப்பட்ட தாவர மாதிரிகளை அடியொற்றியே விளக்கங்கள் அமைந்துள்ளன.

இந்தியாவில் தாவரங்கள் விளையுமிடம் பற்றிய செய்தி, மிகவும் பொதுப்படையாக இருப்பினும், இயன்றவரை, மூலிகைப் பண்ணை மற்றும் நம்பத்தகுந்த இலக்கியக் குறிப்புகளோடு ஒத்துப் பார்க்கப்பட்டுள்ளது.

மருந்தும் அதன் பண்பும் பற்றிய தகவல்கள் நம்பத்தகுந்த வெளியீடுகளிலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் பிரிட்டிஷ் மருத்துவ குணபாடம், ஐக்கிய அமெரிக்க மருந்தியல் நூல் முதலியவற்றில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது விலங்குகளிடத்தும் சோதனைக் கூடங்களிலும் சோதித்தறியப்பட்ட மருத்துவ மூலிகையின் பயன்கள் மட்டுமே இங்கு விளக்கப்பட்டுள்ளன. இதற்காக, கடந்த 30 ஆண்டுகளில் வெளிவந்த இதோடு தொடர்புடைய முக்கியமான நூல்களைப் படிக்கும் வாய்ப்பு ஆசிரியருக்குக் கிடைத்தது. மிகச்சிறிய அளவிலேயே மருத்துவ மூலிகைகள் மருந்தியல் மற்றும் பிற சோதனை

களுக்கு உட்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன என்ற உண்மை இந்த நூல் வேட்டையின்போது தெரியவந்தது. வருவாய் மூலங்களை நாம் நன்கு பயன்படுத்தி, அதைப் பெருகச் செய்ய வேண்டுமானால் அவற்றின் மீதான சோதனைகளும் ஆய்வுகளும் முடுக்கிவிடப் பட வேண்டும்.

மருத்துவ மூலிகைகளின் பொதுவான பொருளாதார முக்கியத்துவம் குறித்து வாசகர்கள் அறிந்துகொள்வது நல்லது என்கிற கருத்தில், தாவரங்களின் தண்டு மதிப்பு, உணவு மதிப்பு மற்றும் பிற மதிப்புகள் பற்றியும் 'மற்ற பயன்கள்' என்கிற தலைப்பில் சில வாக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன.

'மற்ற வகைகள்' என்கிற தலைப்பில் குறிப்பிட்ட சில தாவரங்களின் மருத்துவ மதிப்புடைய மற்ற வகைகளும் கூடுதலாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் பல்வகை மருந்துகளின் ஆண்டுத் தேவைபற்றிய விவரம் துல்லியமாகத் தெரியவில்லை; சில மருந்துகளின் ஆண்டுத் தேவை பற்றி இங்குத் தரப்பட்டுள்ள தகவல் சில ஆண்டுகளுக்கு முன் மத்திய-அரசு தந்த மதிப்பீட்டை அடியொற்றியதாகும்.

பல்வகை நோய்களுக்குரிய மருந்துகளைப் பற்றி எழுதுவது இந்த நூலின் நோக்கம் அன்று; சில புகழ்பெற்ற இந்திய மருத்துவத் தாவரங்களைப் பற்றி வாசகர்களுக்குத் தெரிவிப்பதே இதன் நோக்கம். தாவரங்களை ஆதாரமாக வைத்துத் தயாரிக்கப்படும் பல மருந்துகள் ஒன்றுக்கு மேற்பட்ட தாவரங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட மருந்துகளையும் உள்ளடக்கியவையாகும்; மேலும், பலவகை மருந்துக் கலவையின் அளவு, மருந்து செய்முறை, தரப்பட வேண்டிய மருந்தின் அளவு, ஆகியவையும் சிகிச்சை முறையில் முக்கியமான பகுதிகளாகும். இந்த நூலில் குறிக்கப்பட்ட எந்த தாவரத்தையும் இதற்காகப் பயன்படுத்த வாசகர் தாமே முயலமாட்டார் என நம்பப்படுகிறது. நிலைமைக்கேற்ப குறிப்பிட்ட வகை மருந்துகள் தேவைப்படுகின்றன. அவற்றைத் தருவது வல்லுநர் தொழிலாகும்.

நவீன மருத்துவம், அறுவைச் சிகிச்சை ஆகியவற்றின் விரைவான வளர்ச்சி மற்றும் பரவல் காரணமாக, மூலிகை மருத்துவத்திலுள்ள நம்பிக்கையும், அதன் பெருமையும் படிப்படியாகக் குறைந்துவிட்டன என்பது நன்கறியப்பட்ட செய்தி. ஆனால் நாட்டு மருத்துவ மூலிகைகள் மற்றும் நாட்டு மருத்துவ முறைக்கு ஆதரவாக எவ்வளவோ சொல்லலாம். இது சம்பந்தமாக விரித்துரைக்க இடமில்லை. ஒருநாட்டில்

80% மக்கள் சிறிய, சேய்மையிலுள்ள பல குக்கிராமங்களில் வசிக்கிற நிலையில், அவர்களது ஒரு நாளைய தனிநபர் வருமானம் 80 அல்லது 90 பைசாவாக உள்ள நிலையில் அதிக விலையுள்ளதும், கிடைப்பதற்கு அருமையானதும், சிக்கலுள்ளது மான மருந்துகள் அந்த மக்கள் திரளுக்கேற்ற ஒரு பொருளாக இருக்க முடியாது என்று சொல்லுவதே போதுமானதாகும்.

# 1. குப்பைமேனி (Indian Acalypha)

**விஞ்ஞானப் பெயர் :** அகலிபா இண்டிகா
(Acalypha Indica L) சித்திரம் 1

குடும்பம் : ஈபோர்பியேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — கோகலி, குப்பி |
| வங்காளி | — முக்தஜ்ஹுரி, முக்தபர்சி |
| குஜராத்தி | — வேஞ்சி கான்டோ |
| மலையாளம் | — குப்பமணி |
| மராத்தி | — கோகலி |
| ஒரியா | — இந்திரமரிஸ் |
| சமஸ்கிருதம் | — ஹரித்தமஞ்சரி |
| தெலுங்கு | — குப்பமணி |

இதன் வணிகப் பெயரான அகலிபா என்பது இந்தச் செடியின் அறிவியல் பெயரை அடியொற்றி அமைந்துள்ளது.

**விளக்கம்:**

ஆண்டு முழுவதும் காணப்படும் மூலிகையான இது சுமார் 75 செ.மீ. உயரம் உள்ளது. 3 முதல் 8 செ.மீ. நீளமுடைய இதன் இலைகள் மூன்று நரம்புகளுடன், மெல்லிதாக, முட்டை வடிவத்தில் அமைந்திருக்கும். இலைகள் ஓரங்களில் பற்களுடன் காணப்படும். இலைத்தண்டு இலையைவிட நீளமாக இருக்கும். கவடுகளில் செங்குத்தான காம்பிளம் பூக்கள்; பெண் பூக்கள் தெளிவாகத் தெரிகிற ஆப்பு வடிவ பூச்சிதில்களை உடையதாக இருக்கும்; ஆண் பூக்கள் நுண்ணியதாகவும் காபிலியின் மேற்பகுதியை நோக்கியதாகவும் அமைந்திருக்கும். பழங்கள் சிறியதாகவும், மயிரிழைகளை உடையதாகவும், பூவடிச்சிதலால் மூடப்பட்டும் இருக்கும்.

**விளையும் இடம்:**

இந்தியா முழுவதும் சமவெளிப் பகுதிகளில் பரவலாகக் காணப்படும். தோட்டங்களிலும், வயல்வெளிகளிலும் களைச்




குப்பைமேனி

செடியாக அல்லது சாலை ஓரங்களிலும் புறம்போக்குப் பகுதிக ளிலும் சாதாரணச் செடியாகக் காணப்படும்.

***மருத்துவப் பண்புகள்:***

இது பூக்கும் பருவத்திலேயே முழுவதுமாகச் சேகரித்து உலர்த்தப்பட்டு அகல்டா என்ற மருந்து தயாரிக்கப் பயன்படுத் தப்படுகிறது.

இது மருத்துவப் பண்புகளில் இபிகாக்கை ஒத்திருக்கும். இது மார்ச்சளி, சுவாச காசம், கபவாதம், கீல் வாதம் முதலியவற்றைப் போக்கப் பயன்படுகிறது. இதன் இலைக ளும், வேர்களும் பேதி மருந்தாகப் பயன்படுகின்றன. இதன் சாறு வாந்தியை உண்டாக்கும் மருந்தாகப் பயன்படுகிறது. இதன் இலைத் தளிர்களைப் பதவாடையாக வைத்துக் கட்டுவது குடற் புண்களை நீக்கும்.

## 2. அகோனைட் (Aconite)

அகோனிட்டம் வகை
குடும்பம் : ரானன்குலேஸி

***இந்தியப் பெயர்கள்:***

அகோனிட்டம் சாஸ்மாந்தம் ஸ்டாப்ஃப் எக்ஸ் ஹோம்ஸ். காஷ்மீரி; மொஹ்ரா (Aconitum Chasmanthum stapf ex Holmes)

(அ) டைஞேரைசம் ஹோம்ஸ் எக்ஸ் ஸ்டாப்ஃப்: காஷ்மீரி: தூதியா-பிஷ், ஃபேத்-பிஷ் மோஹ்ரா:

(ஆ) ஹெதெரொஃபில்லம் வால் (heterophyllum Wall) காஷ்மீரி; அதீஸ், அதிவிஷ், பதிஸ்.

**விளக்கம்:**

அகோனைட் என்னும் வணிக அல்லது பொதுப்பெயர், இத்தாவரத்தின் அறிவியல் பெயரைக் குறிப்பதாகும்.

இத்தாவரத்தின் வேர் முண்டுகளிலிருந்து அகோனைட் மருந்து தயாரிக்கப்படுகிறது. இதன் நச்சுத் தன்மைக்காக இது மருத்துவத் துறையில் மிகவும் புகழ் பெற்றதாகும். அகோனைட் நபேல்லஸ் (A. nappellus) என்னும் தாவர வகையிலிருந்து அகோனைட் மருந்து கிடைப்பதாக ஆங்கில மருத்துவக் குணபா

டப் புத்தகம் குறிப்பிடுகிறது. இந்த வகைத் தாவரம் இந்தியாவில் இல்லை. ஆனால் இந்திய வகையில் இதற்குச் சமமான மருத்துவப் பண்பு காணப்படுகிறது.

அகோனைட் ஹெடிரோபில்லம் - (அதிஸ்) இமயமலையில் 2000-4000 மீ. வரை உயர்ந்த வடமேற்கு மலைச் சரிவுகளில் காணப்படுகிறது. இதிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து குறைந்த நச்சுத் தன்மை உடையது. காய்ச்சல், காய்ச்சலுக்குப் பின் ஏற்படும் உடல் பலவீனம், வயிற்றுக் கடுப்பு, வயிற்றுப் போக்கு முதலியவைகளைப் போக்க இது பயன்படுகிறது. இதைச் சத்து மருந்தாக (tonic) உட்கொள்வது ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பினும் காய்ச்சலுக்கு இது மிகவும் உபயோகமானதாகக் கருதப்படுவதில்லை.

அ. சாஸ்மான்ந்தம் (பன்பல்நாக்) - (அதிஸ்) காணப்படும் இடங்களில் இதுவும் கிடைக்கிறது. இதிலிருந்து தயாரிக்கப்படும் அகோனைட் (நச்சுப் பொருள்) அ. நபேல்லஸ்க்கு சமமாகக் கருதப்படுகிறது. இதன் கார குணம் ஐரோப்பிய வகை அகோனைட்டைவிட 10 மடங்கு அதிகமாயிருப்பினும், இதன் மருத்துவ ஆற்றல் அவ்வளவு சிறப்பானது அல்ல. அ. டீனேரீசும்மும் மற்றும், சில இந்திய வகை அகோனைட்களும் மருந்தாகப் பயன்படுவதிலிருந்து விலக்கப்பட்டன. வணிகரீதியாக இந்திய அகோனைட் என்றழைக்கப்படும் அகோனைட் தாவரம் இரண்டு, மூன்று வகைகளின் கலப்பாகும்.

அகோனைட் தாவரத்தின் காரத்தன்மையானது மிகுந்த நச்சுத் தன்மையுடையதாதலால் குறிப்பிட்ட அளவுக்கு மேல் உட்கொண்டால் ஆபத்தான துணை விளைவுகளை ஏற்படுத்தும்.

மலைப்பிரதேசங்களில் காணப்படும் தாவரங்களில் அகோனிடைன் மிகுந்து உள்ளது. அகோனிடைன் தவிர மற்ற கூட்டுப் பொருள்களே இதன் நச்சுத் தன்மைக்குக் காரணம்

இதன் நச்சுத் தன்மை காரணமாக இது மிகுந்த கவனத்துடன் கையாளப்படுகிறது. இது தற்போது உடலின் வெளியே பூச்சு மருந்தாக ஒற்றைத் தலைவலி போன்ற நோய்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

# 3. வசம்பு (Calamus)

*(இனிப்பு-இலை)*

**விஞ்ஞானப் பெயர்: அகோரஸ் காலாமஸ்** (Acorus calamus L.)

குடும்பம் : அராசியெ

**இந்தியப்பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | — | *கோடா பச், ஸபேத் பச்.* |
| அஸ்ஸாமி | — | *தேமேப்ரி* |
| வங்காளி | — | *பச்* |
| குஜராத்தி | — | *கந்திலோவஜ்* |
| கன்னடம் | — | *வஜேகிடா* |
| மலையாளம் | — | *வசம்பு* |
| மராத்தி | — | *வேகண்ட்* |
| சமஸ்கிருதம் | — | *பூத-நாசினி* |
| தெலுங்கு | — | *வசா* |

இதன் வணிகப் பெயரான காலாமஸ் இந்த மூலிகையின் அறிவியல் பெயரை அடியொற்றி அமைந்துள்ளது.

**விளக்கம்:**

இது நீண்ட, அதிகமான கிளைகளுடன் படர்ந்து வளரும், மணமுள்ள வேர்த்தண்டுகளை உடைய ஒரு மூலிகையாகும். பூமொட்டுக்கள் இலைபோன்ற மடல்களிலிருந்து காக்கப்படுகின்றன. பூக்கள் சிறியவைகளாகவும் 5-10 செ.மீ நீளமுடையதாகவும் வெளிறிய பச்சை நிறத்தில் பாளை என்றழைக்கப்படும் உருளை வடிவக்காம்பிலிகளில் காணப்படும். பழங்கள் மஞ்சள் நிறமாக இருக்கும்.

**விளையும் இடம்:**

பரவலாக இந்தியா முழுவதும் 200மீ. உயரத்தில் காணப்படுகிறது. இது அதிகமாகச் சதுப்பு நிலங்களிலும், ஈரப்பசை நிறைந்த இமயமலையின் கிழக்கு, வடக்கு பகுதிகளிலும், காணப்படுகிறது. கர்நாடகம், மற்றும் இதர பகுதிகளிலும் பயிரிடப்படுகிறது.

*மருத்துவப் பண்புகள்:*

இத்தாவரத்தின் உலர்ந்த வேர்த்தண்டுகளில் காலாமஸ் (Calamus) என்னும் நறுமண மருந்துப் பொருள் காணப்படுகிறது. இது மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

வசம்பில், தாவரத்திற்கு நறுமணம் ஊட்டக்கூடிய சில எண்ணெய்ப் பொருள்கள் கலந்துள்ளதால் இது வயிற்று உப்புசத்திற்கும் வயிற்றுப் பொருமலுக்கும், வயிறு கனமாக இருக்கிறதென்ற உணர்வுக்கும் மருந்தாகப் பயன்படுவதுடன் பசியைத் தூண்டுவதாகவும் உள்ளது. வயிற்றுப் பொருமலுடன் கூடிய கடும் வயிற்று வலிக்கும் இது வீட்டு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. இதில் கலந்துள்ள முக்கியமான எண்ணெய்களால், கபத்தை வெளிக்கொணர உதவுவதன்மூலம் ஆஸ்துமாவைக் குணப்படுத்தப் பயன்படுகிறது. இதன் பதத்துவர் வயிற்றுப்போக்கு, வயிற்றுக் கடுப்பு ஆகியவற்றினை நீக்கப் பயன்படுகிறது. வாந்தி எடுக்க வைக்கும் மருந்தாகப் பயன்படும் வசம்பு அதிக அளவில் உட்கொள்ளப் பட்டால் கடுமையாக வாந்தியெடுக்கும் நிலைக்குக் காரணமாகி விடும்.

இதன் இலைகளும், வேர்முண்டுகளும் பான வகைகளுக்கு நறுமணமூட்டவும், வாசனைப் பொருளாகவும், பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கவும் பயன்படுகின்றன. பொடியாக்கப்பட்ட இதன் வேர்கள் கீரைப்பூச்சி ஒழிப்பு மருந்தாகப் பயன்படுகின்றன.

இதன் வேர்முண்டுகளிலுள்ள எண்ணெய்ப் பொருள் நரம்புகளுக்குக் கிளர்ச்சியூட்டித் தூண்டக்கூடிய ஒரு நல்ல பொருளாகவும், இந்த முக்கிய எண்ணெய்ச் சத்து நீக்கப்பட்ட சாராயக் கலவை, அமைதிப்படுத்தும் மருந்தாகவும் வலி நீக்கியாகவும் பயன்படுகிறது. இதனுல் இது மனநோய்க்குப் பயன்படுத்தப் படுகிறது. இதன் வேர்முண்டுகளிலுள்ள நுண்ணுயிர் எதிர்ப்புச் சக்தி, சோதனைகள் மூலம் அண்மையில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

1975-76இல் ரூ.1.3. லட்சம் மதிப்புள்ள சுமார் 280 குவிண்டால் வசம்பு வேர் முண்டுகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.




ஆடாதோடை

## 4. ஆடாதோடை (Vasaka)

**விஞ்ஞானப் பெயர் : ஆடாதோடா ஜைலானிகா**
(Adhatoda Zeylanica) *சித்திரம் 2*

குடும்பம் : அகான்தேசி

**இந்தியப்பெயர்:**

| | | |
|---|---|---|
| இந்தி | — | *பான்சா, வாசிகா* |
| அஸ்ஸாமி | — | *பஹாகா, ஹெர்புக்ஷா, தீசாயே* |
| வங்காளி | - | *வாசகா* |
| குஜராத்தி | — | *அல்துரஸா, அர்துரஸி* |
| கன்னடம் | — | *ஆடுசோகே* |
| மலையாளம் | — | *ஆடலோடகம்* |
| மராத்தி | — | *அதுரல்ஸா* |
| சமஸ்கிருதம் | — | *வாசகா* |
| தெலுங்கு | — | *அடாஸரமு* |
| (டெல்லி | — | *பியா-பான்சா)* |

இதன் வணிகப் பெயரான வாசகா என்பது இத்தாவர வகையின் சமஸ்கிருதப் பெயரைச் சார்ந்து வழங்குகிறது. இதன் அறிவியல் பெயர்கூடச் சமஸ்கிருதப்பெயரைச் சார்ந்தாகும்.

**விளக்கம்:**

இக்குத்துச் செடி உயரமானது; அதிகக் கிளைகளை உடையது; அடர்த்தியானது. எப்பொழுதும் பசுமையாக இருப்பது; பெரிய ஈட்டி போன்ற இலைகளை உடையது. பூக்கள் அடர்ந்த, குறுகிய காம்பிலிகளில் காணப்படும். காம்பிலிகளின் அடித் தண்டு, இலைகளைவிடச் சிறியதாய் இருக்கும். இலைகளைப் போன்ற அமைப்புடைய பூவடிச்செதில்கள் காம்பிலிமீது காணப்படும். இதில் நரம்புகள் தெளிவாகத் தெரியும். பூவிதழ் வட்டம் அல்லது அல்லி வட்டம் சில பழுப்புக்குறியோடு வெண்மை நிறத்தில் இருக்கும். பழங்கள், 4 விதைகளுடன், உலர்ந்து வெடிக்கும் வகையைச் சேர்ந்தவை.

**விளையும் இடம்:**

இந்தியாவில் சமவெளிகளிலும், மலையடிவாரங்களிலும்

காணப்படுகிறது; மக்கள் வாழுமிடங்களின் அருகிலும் பரவலாகக் காணப்படக்கூடிய ஒன்றாகும்.

**மருத்துவப் பண்புகள்:**

இத் தாவரத்தின் புதிய அல்லது உலர்ந்த இலைகள் மருந்து தயாரிக்கப்பயன்படுகின்றன. இலைகளில் ஒரு முக்கியமான எண்ணெயும், 'வாசிசீன்' என்னும் அல்கலாய்டும் உள்ளன. இதன் தலையாய பண்பு கபத்தை வெளிக்கொண்டுவருதலாகும். இது சாறாகவும் கூழ்ப்பத நீராகவும் கஷாயமாகவும் கொடுக்கப் படுகிறது. சளியை இளக்கி வெளிக்கொணருவதன் மூலம் மார்புச் சளி நோயை விரைவில் குணப்படுத்துகிறது. மூச்சுக் குழல்-சுரப்பிகளைப் தூண்டி, அதன் மூலம் கபத்தை வெளிக்கொணருகிறது இம் மூலிகை. இதை அதிகமான அளவில் உட்கொண்டால் எரிச்சலும், வாந்தியும் உண்டாகும். சமீபத்திய ஆய்வுகள் ஆடாதோடையின் பயன்களை உறுதி செய்துள்ளன.

**வேறு பயன்கள்:**

இதன் இலைகள் பசுந்தாள் உரமாகவும் மஞ்சள் நிறச் சாயம் தயாரிக்கவும் பயன்படுகின்றன. இலைகளிலுள்ள சில வகைக் காரச் சத்துக்களால் இது பூச்சியாலோ காளான்களாலோ பாதிக்கப்படுவதில்லை. அதனால் பழங்களைச் சேகரித்துப் பாதுகாக்கவும், பொதிந்துவைக்கவும் இவ்விலைகள் பயன்படுகின்றன. இதன் இலைகளிலிருந்து வெளிப்படும் தீநாற்றம் இதை மற்ற விலங்குகளிடமிருந்து காக்கிறது. இச்செடிகளை நடுதல் மண்மேம்பாட்டுத் திட்டத்திற்குப் பயனுள்ளதாக இருக்கும்.

## 5. வில்வம் (Bel)

**விஞ்ஞானப் பெயர் :** ***ஏக்லே மார்மிலாஸ்***
(Aegle marmelos (L) Correa)

குடும்பம் : ரூடேசி

**இந்தியப்பெயர்கள் :**

| | | |
|---|---|---|
| இந்தி | — | பேல் |
| அஸ்ஸாமி | — | பேல் |
| வங்காளி | — | பேல் |
| குஜராத்தி | — | பீலி |

| | | |
|---|---|---|
| கன்னடம் | — | *பில்பத்ர* |
| மலையாளம் | — | *வில்வம்* |
| மராத்தி | — | *பேல்* |
| சமஸ்கிருதம் | — | *வில்வ, ஸ்ரீஃபல்.* |
| தெலுங்கு | — | *மாரேடு* |

இத்தாவரத்தின் வணிகப் பெயர் பெருவழக்கிலுள்ள இந்தியப் பெயரை அடிப்படையாகக் கொண்டு வைக்கப்பட்டுள்ளது.

**விளக்கம்:**

சுவடுகளில் கடினமான முட்களைக் கொண்ட இம்மரம் ஆண்டுதோறும் பருவத்தில் இலையுதிர்க்கக்கூடியது; நடுத்தர உயரம் கொண்டது. இலை மூன்று அல்லது ஐந்து சிற்றிலைகளைக் கொண்டிருக்கும். பூக்கள் சுமார் 2.5 செ.மீ. குறுக்களவில் சிறிய கொத்துக்களாக இனிய மணத்துடன் பசுமை கலந்த வெள்ளை நிறத்தில் இருக்கும். பழங்கள் 8 முதல் 20 செ.மீ. குறுக்களவில், கோள வடிவில், முதலில் பச்சையாகவும், இறுதியில் சாம்பல் நிறத்திலும் இருக்கும். பழத்தோல் கடினமானது. பழச்சதை ஆரஞ்சு நிறம்; மணமும் சுவையும் கொண்டது.

**விளையும் இடம்:**

இந்தியாவெங்கும் சமவெளிகளிலும், மலையடிவாரங்களிலும் பரவலாகக் காணப்படுகிறது. சில இடங்களில் இம்மரம் நடப்படுதலுமுண்டு.

**மருத்துவப் பண்புகள்:**

'பேல்' என அழைக்கப்படும் இதன் மருந்து (பெலே ஃபிரக்டஸ்) இம் மரத்தின் புதிய, பழுத்த அல்லது பாதி பழுத்த பழங்களைக் கொண்டது. பசைப் பொருளாக்கவும் பழப்பசைச் சத்துக்காகவும் இது அதிகமாக விரும்பப்படுகிறது. இது நாள்பட்ட வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு ஆகியவற்றிற்கும், முக்கியமாக, மலச்சிக்கலுக்கு மாற்றாகும் பேதியைத் தீர்க்கவும் பயன்படுகிறது. இம்மரத்தின் பழச்சாற்றினால் தயாரிக்கப்படும் பானங்கள் நுண்கிருமிகளால் ஏற்படும் வயிற்றுப் போக்கிலிருந்து அப்போதுதான் குணமடைந்த நோயாளிகளின் குடலுக்கு இதம் தரும் மருந்தாகச் செயல்

படுகின்றன. பாதி பழுத்த பழங்கள் பசியையும், ஜீரண சக்தியையும் அதிகரிக்கின்றன. சமீபத்திய பரிசோதனைகளின் மூலம் இதன் .இலை, பழம், வேர் ஆகியவற்றின் நோய் எதிர்ப்புச் சக்தி உறுதிபடுத்தப்பட்டுள்ளது. (பஸ்தர் பழங்குடி கள் வேர்ப்பட்டைகளைச் சாறு வடித்து அதைக் காய்ச்சலுக்கு மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்).

**வேறு பயன்கள்:**

வில்வ மரக்கட்டைகள் எரிவாயு தயாரிப்பு நிலையங்களுக்குத் தேவையான கரி தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. விதை கள் நிறைந்த இதன் பசைச்சத்து ஒட்டும் பொருளாகவும் வார்னிஷ், சிமென்ட் கலவையாகவும் பயன்படுகிறது. பாதி பழுத்த பழத்தின் பழத்தோல் மஞ்சள் சாயம் தயாரிக்கப் பயன்படுகிறது.

## 6. பேரரத்தை (Greater Galangal)

*(ஜாவா - கலங்கல்; கலங்கா மேஜர்)*

**விஞ்ஞானப் பெயர் : ஆல்பனியா கலங்கா**
(Alpinia galanga(L) Willd)

குடும்பம் : ஜின்ஜிபெரேசி

**இந்தியப்பெயர்**

| | | |
|---|---|---|
| இந்தி | — | குலின்ஜன், சுகந்தபச் |
| வங்காளி | — | குலன்ஜன் |
| கன்னடம் | — | துமபராஸ்மே |
| மராத்தி | — | கோஷ்ட குலின்ஜன் |
| சமஸ்கிருதம் | — | குலின்ஜன் |

காலங்கல் என்னும் வணிகப் பெயர், இதன் அறிவியல் பெயரை ஒட்டி வழங்கப்படுகிறது. சிறிய காலன்கலிலிருந்து (சிறிய பேரரத்தை) பிரித்து வகைப்படுத்துவதற்காக இது பெரிய காலங்கல் (பெரிய பேரரத்தை) என்றழைக்கப்படுகி றது.

**விளக்கம்:**

இது 2 மீ. உயரமுள்ள மூலிகைச் செடியாகும். இலைகள் நீண்டும், குறுகலாகவும் மேல்பகுதி பசுமையாகவும், கீழ்ப் பகுதி வெளிறியும், ஓரங்களில் வெள்ளையாகவும், நடுவில் பலமான நரம்புடனும் காணப்படும். பூக்கள் 3 செ.மீ. நீளத்தில், பசுமை கலந்த வெண்மை நிறத்துடன் அடர்த்தியாக வும் கொத்தாகவும் காணப்படும். அல்லி வட்டத்தின் இதழ் வெண்மையாக, சிவந்த கீற்றுகளுடன் காணப்படும். பழங்கள் சிறிய செர்ரிபழ அளவில், சிவப்பும், ஆரஞ்சும் கலந்த நிறத்தில் காணப்படும்; வேர் முண்டுகள் மிதமான மணமுடை யவை.

**விளையும் இடம்:**

இமயமலையின் கிழக்குப் பகுதிகளிலும், மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும் இது இயல்பாகக் காணப்படுகிறது. சில இடங்களில் இது பயிரடவும் படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இச்செடியின் உலர்ந்த வேர்முண்டுகள் கீல் வாதத்திற்கும், சிறப்பாக, குழந்தைகளுக்கு ஏற்படும் சுவாசக் கோளாறுகளுக் கும், மூக்கடைப்பை நீக்கவும் பயன்படுகின்றன. இம்மருந்து வயிற்றுக் கோளாறுக்குப் பயன்படுவதுடன், சத்து மருந்தாக வும் துர்நாற்றம் நீக்கியாகவும் தொற்றுநோய்த்தடுப்பு மருந்தா கவும் பயன்படுகிறது. இது இஞ்சியைப் போன்று கிளர்ச்சியூட் டும் நறுமணப்பொருளாகும்.

1970 - 71இல் இந்தியா ரூ.5 லட்சம் மதிப்புள்ள இச்செடி யின் வேர்முண்டுகளை இறக்குமதி செய்தது. ஆனால் 1977-78இல் இது ரூ.2 லட்சமாகக் குறைந்ததுடன், ஏற்றுமதி யும் செய்யப்பட்டது.

**மற்ற வகைகள்:**

இதன் மற்றொரு முக்கியமான வகை அல்பினியா அபிசினியா (சிறிய பேரரத்தை), இது சீனத்தைப் பிறப்பிடமாகக் கொண்டது. இதன் வேர் முண்டுகள் மிகுதியான நறுமணமும், சுவையும் உடையன. இது இப்போது இந்தியாவின் வட பகுதிகளிலும், வங்காளத்திலும் அதிகமாகப் பயிரிடப்படுகி றது.




பாலை

## 7. பாலை (Chhatim)

*(டிட்டா-பார்க்)*

**விஞ்ஞானப் பெயர் :** *அல்ஸ்டோனியா ஸ்கோலரிஸ்* (Alstonia Scholaris (L) Br.) *சித்திரம் 3*

குடும்பம் : அபோசயினேசி

**இந்தியப்பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | — | சாதின் |
| அஸ்ஸாமி | — | சாயிதென் |
| வங்காளி | — | சாத்திரம் |
| கன்னடம் | — | மத்தாலே |
| மலையாளம் | — | பால |
| மராத்தி | — | சாத்வின், ஸைத்தூர்ன் |
| ஒரியா | — | சாதியாணு |
| சமஸ்கிருதம் | — | ஸப்தபர்ணு |
| தெலுங்கு | — | பாலைக் |
| | — | |

வணிகப் பெயர் பெருவழக்கிலான இந்தியப் பெயரைக் கொண்டது. இதன் சமஸ்கிருதப்பெயர் ஒரு சுற்றில் ஏழு இலைகளைக் கொண்டது எனப்பொருள்படும்.

**விளக்கம்:**

25மீ. உயரம் வரை வளரக் கூடிய இம்மரம் எப்போதும் பசுமையாக இருக்கும்; கசப்பான பாலைக்கொண்டது. மரப் பட்டை கடினமானது; கருஞ்சாம்பல் நிறம் உடையது. கிளைகள் வட்ட அடுக்காய் இருக்கும். மரத்தின் அடிப்பக்கம் முட்டுக்கொடுக்கப்பட்டிருக்கும். இலைகள் 4-7 வரை வட்ட அடுக்காகவும், 10-20 செ.மீ. நீளத்தில் தோல் போன்றும் காணப்படும். பூக்கள் சிறியதாக, பசுமை கலந்த வெள்ளை நிறத்தில், நறுமணம் மிகுந்து, பல பூக்களையுடைய கொத்துக்களாய் இருக்கும். பழங்கள் மிகவும் நீளமாகவும் (30-60 செ.மீ) குறுகியும், ஒடுங்கியும் காணப்படும். அவை இணைஇணையாகத் தொங்குவதுடன் அடர்த்தியான கொத்துக்களையும் அமைத்துக்கொள்ளும்.

**விளையும் இடம்:**

இம்மரம் இந்தியா முழுவதும் ஈரபபசை அதிகமான இடங்களில் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

சாத்திம் (Chhatim) என்பது இம்மரத்தின் உலர்ந்த பட்டை யாகும். இம்மருந்து நாட்பட்ட வயிற்றுப் போக்கு, வயிற்றுக்க டுப்பு ஆகியவற்றிற்கு உடனடியாகக் குணமளிக்கக்கூடியது. இது மற்ற மருந்துகளைப் போலன்றி மலேரியா காய்ச்சலைப் படிப்படியாக, வியர்வையோ, சோர்வோ ஏற்படாமல் குறைக் கிறது. இம்மருந்து தோல் வியாதிக்கும் ஏற்றது.

இம்மருந்து இயங்கு நரம்புகளைத் தாக்கி வாதத்தையும், பின்பு இரத்தக் கொதிப்பையும் ஏற்படுத்தும் எனக் கூறப்படுகி றது. சில பரிசோதனைகள் இம்மருத்தின் நோய் எதிர்ப்புச் சக்தியையும் உடலியக்கவினைகளையும் மறுத்துப் பேசுகின்றன.

**மற்ற பயன்கள்:**

இந்த மரமானது மட்டரகமான மரச்சாமான்கள் செய்யவும் கட்டுமான பெட்டிகள் செய்யவும், தேயிலை டப்பாக்கள், பென்சில், தீக்குச்சிகள் செய்யவும் பயன்படுகிறது. முன்னாட்க ளில் இது மர சிலேட்டுகள் செய்யவும் பயன்பட்டது. இதனால் இது ஸ்காலரிஸ் (Scholaris) என்ற சிறப்புப் பெயரால் வழங்கப்பட்டது.

## 8. நில வேம்பு: (Kalmegh)

*(ஆந்திரோகிராபிஸ்)*

விஞ்ஞானப் பெயர் : ஆந்த்ரோகிராபிஸ் பானிகுலாட்டா (Ahdrographis paniculata (Burmf) Wall. cx Nes)

குடும்பம் : அகான்தேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | — | கிரியாத், குலும்ப்நாத் |
| வங்காளி | — | அலுயி; கால்மேக் |
| குஜராத்தி | — | லீலுா கரியாத்தூ(ன்) |
| கன்னடம் | — | நெலபேவு |

| | | |
|---|---|---|
| மலையாளம் | — | நில வேபு |
| மராத்தி | — | ஓலிகிரயாத் |
| சமஸ்கிருதம் | — | கிராதா |
| தெலுங்கு | — | நெலவேமு |
| (மத்தியபிரதேசம் | — | சிரேட்டா) |

இதன் வணிகப் பெயர் வங்காளப்பெயரான கால்மேக் என்பதிலிருந்து பெறப்பட்டது. ஆங்கிலத்தில் ஆந்த்ரோகிரா பிஸ் என்பது அறிவியல் பெயர்.

**விளக்கம்:**

ஆண்டு முழுவதும் காணக்கூடிய மூலிகைகளான இது 4 கிளைகளுடன் செங்குத்தான நிலையில் காணப்படும். இலைகள் ஈட்டி போன்று காணப்படும். பூக்கள் சிறியதாக, படர்ந்து, அடர்த்தியற்று, ஆனால் அதிகமாகக் காணப்படும்; இளஞ்சி வப்பு நிறத்தில், சுமாராக 1 செ.மீ. நீளமுடையவை. 1.5-2 செ.மீ. நீளமுள்ள இதன் பழங்கள் மூடிய நிலையிலிருக்கும்.

**விளையும் இடம்:**

இந்தியா முழுவதும், குறிப்பாக, சமவெளிகளில் காணப் படுகிறது.

**மருத்துவ பண்புகள்:**

வேர்களைத் தவிர்த்து மற்ற அனைத்துப் பகுதிகளிலிருந்தும கால்மேக் மருந்து தயாரிக்கப்படுகிறது. இது ஒரு கசப்பான சத்துமருந்து. புழுக்கள், காய்ச்சல், வயிற்றுப்போக்கு, சோர்வு, வயிற்றில் ஏற்படும் வாயு கோளாறுகள் ஆகியவற்றைக் குணப்படுத்தக்கூடியது. இது குழந்தைகளுக்கு உண்டாகும் சீரணக் கோளாறுகளையும் ஈரல்குலை நோய்களையும் போக்கவல் லது.

வங்காளத்தில் 'ஆலுய்' என்று வீட்டு மருந்தாகத் தயாரிக்கப் பட்டு குழந்தைகளுக்கு வயிற்றில் ஏற்படும் நோய்களைத் தீர்க்க உபயோகப்படுத்தப்படுகிறது.

பாம்புக்கடிக்கும் இது பயன்படும் என்று ஒரு நம்பிக்கையி ருந்தது. ஆனால் பரிசோதனைகள் இதை மறுத்து விட்டன. சமீபத்திய பரிசோதனை இதற்கு நோய் எதிர்ப்புச் சக்தியும், டைபாய்டு எதிர்ப்புச் சக்தியும் இருப்பதை நிரூபித்துள்ளது.

(பஸ்தர் பழங்குடிகள் இதனைக் கடுகு எண்ணையுடன் சேர்த்துப் பொடித்து உடல் எரிச்சலைத் தடுக்கப் பயன்படுத்து கின்றனர்).

## 9. பெருமருந்து (Indian Birthwort)
### (அரிஸ்டோலோகியா)

**விஞ்ஞானப்பெயர் : அரிஸ்டோலோகியா இண்டிகா**
(Aristolochia Indica L.)

குடும்பம் : அரிஸ்டோலோகியேஸி

**இந்தியப்பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | — | ஈச்வரி |
| வங்காளி | — | ஈசுர்முல் |
| குஜராத்தி | — | அர்கமுல் |
| மராத்தி | — | ஸாப்ஸன் |
| சமஸ்கிருதம் | — | ஈச்வரிமுல் |
| தெலுங்கு | — | குண்டகன்ஜிரா |

இதன் வணிகப் பெயர் இதன் பொதுவான ஆங்கிலப் பெயரையும், அறிவியல் பெயரையும் சார்ந்தது.

**விளக்கம்:**

சுற்றிக் கொள்ளும் குத்துச்செடி; தண்டு கீழே பருத்து, கனமாகவும், மேலே மெலிதாகவும் மென்மையாகவும் இருக்கும். ஆணிவேர் கனமானது. இலைகள் பல்வேறு அளவுகளிலும், வடிவங்களிலும் குறுகலாகவும், நீளமாகவும், நுனியை நோக்கி அகன்றும் இருக்கும். பூக்கள் சிறிதாக, பசுமை கலந்த வெள்ளை நிறத்தில், சிறிய கொத்துக்களாக இலைகளின் காம்புக் கவடுகளில் காணப்படும். பூக்கள் வெளிறியும், ஊதுகொம்பு வடிவத்திலும் இருக்கும். பழங்கள் 5.செ.மீ அளவில் நீளமாக வும், ஆறு அறைகளாக, கீழிலிருந்து மேலாகத் திறந்தும் இருக்கும்.

**விளையும் இடம்:**

சமவெளிகளிலும், உயரம் குறைவான மலைப்பகுதிகளிலும் இந்தியா முழுவதும் காணப்படுகிறது. கிழக்கு மற்றும் தென் இந்தியாவில் மிகச் சாதாரணமாகக் காணப்படுகிறது.

***மருத்துவப் பண்புகள்:***

*காய்ந்த நடுத்தண்டும், வேர்ப்பகுதியும் அரிஸ்டோலோகியா தயாரிக்கப் பயன்படுகிறது.*

*இதைக் குறிப்பிட்ட அளவில் உட்கொள்வது மிகுந்த பயனைத் தரும். இது மாதவிலக்கைச் சீர்செய்யவும், செரிமான சக்தியை அதிகரிக்கவும் செய்கிறது. இது ஒரு சத்து மருந்து; ஆனுல் இதை அதிக அளவில் உட்கொண்டால் செரிமான மண்டலத்திலும் சிறுநீரகங்களிலும் பயங்கர எரிச்சலேயும், கட்டுப்பாடில்லாத வாந்தியையும், குமட்டலையும், கருச்சிதைவையும், வேறு சில குறைகளையும் உண்டாக்கும்.*

*குறிப்பிட்ட அளவில் உட்கொண்டால் இது கிளர்ச்சியூட்டவும், காய்ச்சலேக் குணப்படுத்தவும், இரத்தக் கொதிப்பைக் கட்டுப்படுத்தவும் உதவும்.*

***மற்ற வகைகள்:***

*இதன் மற்ருெரு வகையான 'ஆடுதின்னுப்பாளே' (அரிஸ்டோலோகியா பிராக்டியோலாட்டா-* Aristolochia braceteolata- *சமஸ்கிருதம்: தும்ரபத்ரா; ஹிந்தி: கந்தன்; கன்னடம்: காலா குர்க்கி) இந்தியா முழுவதும் சமவெளிகளிலும், குறிப்பாகக் கருமண் பிரதேசங்களிலும் காணப்படுகிறது. நாற்றமெடுக்கும் குடல் புண்களுக்கும், புழுக்களேக் கொல்லுவதற்கும் பயன்படுகிறது.*

## 10. புழுவிதை (Wormseed)

*(ஆர்தெ மிஸியா)*

***விஞ்ஞானப்பெயர் : ஆர்தெமிஸியா மாரிடிமா*** (Artemisia Maritima)

குடும்பம் : கம்போசிடி

***இந்தியப் பெயர்:***

| | | |
|---|---|---|
| *இந்தி* | — | *சுஹ்ரி அஜ்மூத், கிர்மலா.* |
| *காஷ்மீரி* | — | *மூர்னி* |
| *மராத்தி* | — | *கிர்மானி ஓவா* |
| *பஞ்சாபி* | — | *பில்லௌர்* |
| *சமஸ்கிருதம்* | — | *கதாதர்* |

இம்மருந்து ஸான்டோனின் என்றும் அழைக்கப்படும். இது இத்தாவரத்தின் செயல்படும் உயிர்மக் கூறான ஆர்தெமிஸியா வைக் குறிக்கும்.

**விளக்கம்:**

சுமார் 1 மீ. உயரத்துடன், அதிகக் கிளைகளுடன், ஆண்டுக்க ணக்கில் வாழக்கூடிய நறுமணமுடைய குத்துச் செடியாகும் இது. இலைகள் 2 முதல் 5 செ.மீ வரை நீளத்துடன், வெண்ணிறமாக, எண்ணிலடங்காத நுண்ணிய பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருக்கும். மேற்பகுதி இலைகள் சாதாரணமாகப் பிளவுபடாது இருக்கும். மையத்தண்டில் ஒட்டிக்கொண்டிருக் கும் காம்பில்லாச் சிறு மலர்கள் குறுங்காம்பிலிகளில் காணப்ப டும்.

**விளையும் இடம்:**

வட இந்தியாவில் 2000-3000 மீ. உயரத்தில் காஷ்மீர் முதல் குமாவோன் வரை காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இம்மருந்து மையத்தண்டில் ஒட்டிக்கொண்டிருக்கும் காம் பில்லாச் சிறு மலர்களிலிருந்தும் உலர்ந்த, வளர்ச்சியடையாத இலைகளிலிருந்தும் தயாரிக்கப்படுகிறது. வேனிற் காலத்திற்கு முன்பாகவும், பின்பனிக்காலத்திலும், பூங்கொத்துக்கள் முழு வதும் வளர்ச்சியடையாத நிலையில் சேகரிக்கப்படுகின்றன.

இதன் மருத்துவப் பண்பு முழுவதும், முக்கியமாக, இளந்த ளிர்களிலும் பூங்கொத்துக்களிலும் உள்ள சாந்தோனினைச் சார்ந்து உள்ளது. பூக்கள் மலர்வதற்கு முன் சாந்தோனின் அதிகமாகவும் மலர்ந்த பின்னர் விரைவாகவும் மறைந்துவிடும்.

இது முக்கியமாக வயிற்றிலிருந்து பூச்சிகளை வெளியேற்ற (நாடாப்புழு, பட்டப்புழு) பயன்படுகிறது. இவை மலக்குட லுக்குத் தள்ளப்பட்டு, பின் அங்கிருந்து பேதிமருந்தின் உதவியால் அகற்றப்படுகின்றன. இது காய்ச்சலுக்கும், மகோத ரத்திற்கும் பயன்படுத்தப்பெறும் கிளர்ச்சியூட்டும் திரவமாக வும் பயன்படுகிறது.

**மற்ற வகைகள்:**

ஆர்தெமிஸியாவின் வேறு சில வகைகளும் மருந்து தயாரிக்கப்பயன்படுகின்றன. ஆர்ட்டெமிசியா நீலகிரிகா (cl) pamp (இந்தி, வங்காளி - நாகதோனு; சமஸ்கிருதம்-நாக்தம்னி; தமிழ்-மலைத்தகரை) மலைப்பிரதேசங்களில் கிடைக்கிறது. இது புழுக்களை வெளியேற்றவும், காசநோயைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது. ஆர்ட்டிமிசியா ஆப்சின்தியம் (அப்சன்தின்) காஷ்மீர்ப் பகுதியில் கிடைக்கிறது. இது ஜீரணத்துக்கு சத்து மருந்தாகவும் பயன்படுகிறது.

சந்தோனினைக் கொண்டிருக்கிற ஆர்ட்டெமிசிய வகைகளை இந்தியாவில் பயிரிடுவதின் தேவை பற்றி அவ்வப்பொழுது கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. நமது ஆண்டுத்தேவை 1000 குவிண்டாலுக்கு அதிகம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இமயமலையின் உட்பகுதிகளான காஷ்மீர், பஞ்சாப், ஹிமாசல பிரதேசம், உத்திரபிரதேசம் ஆகிய இடங்களில் 2000-3000 மீ. உயரத்தில் இது பயிரிடப்படுகிறது. தற்போது காஷ்மீரில் 5000-10000 குவிண்டால் ஆர்ட்டெமிசியா ஆண்டுதோறும் விளைகிறது.

## 11. பெல்லடோனு (Belladona)

**விஞ்ஞானப் பெயர் :** ஆட்ரோபா ஆக்மினட்டா (Atropa acuminata Royle ex Lindley)

குடும்பம் : சொலனேசி

**இந்தியப் பெயர்கள்:**

இந்தி — அங்கூர்ஷெஃபா, ஸங்க் - அங்கூர்
காஷ்மீரி — ஸங்க் - அங்கூர்

பெல்லடோனு என்னும் வணிகப்பெயர் (இந்தியன் பெல்லடோனு) ஐரோப்பாவிலுள்ள இதன் மற்ெருரு வகையான ஆட்ரோபா பெல்லடோனு என்னும் பெயரிலிருந்து கிடைத்ததாகும். இது இந்தியாவில் பயிர் செய்யப்படுகிறது.

**விளக்கம்:**

ஆண்டு முழுவதும் காணப்படக்கூடிய, 60-90 செ.மீ. உயரமுள்ள நீண்ட, கிளைகளுடன் கூடிய மூலிகையாகும், இது. இலைகள் 7-15 செ.மீ. நீளத்தில் இரு முனைகளிலும்

குறுகலாக, பழுப்புப்பச்சை நிறத்தில் காணப்படும். பூக்கள் இலைகளின் காம்புக் கவடுகளில் தனித்தோ இணைந்தோ 2.5 செ.மீ நீளத்தில் மணி வடிவத்தில் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் இருக்கும். பழங்கள் உருண்டையாக 1.5 செ.மீ. குறுக்குவெட்டில் ஊதாக்கருப்பு நிறத்தில் இருக்கும்.

**விளையும் இடம்:**

காஷ்மீரில் 2000-3500மீ. உயரத்தில் காணப்படும் இது, பயிர்செய்யவும் படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

பெல்லடோனா மருந்து அதன் உலர்ந்த இலைகளையும், செடியின் மற்ற காற்றோட்டப் பகுதிகளையும் வேரையும் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

இதன் காரகுணம் செடியின் வளர்ச்சிப் பருவத்தைப் பொறுத்து அமைகிறது. பூக்கும் சமயத்தில் குறைவாகவும், முற்றுக்கனிகளைப் பெறும்போது மிகுதியாகவும் காணப்படுகிறது.

இலைகளிலிருந்தும், காற்றோட்டமுள்ள பிற பகுதிகளிலிருந்தும் தயாரிக்கப்படும் மருந்து உமிழ்நீர், வியர்வை, மற்றும் இரைப்பை நீர்ச்சுரப்பு ஆகியவற்றை குறைக்கப் பயன்படுகிறது. இது சிறுகுடல் சூலைப்பிடிப்பையும் உடம்பின் மற்றப் பகுதியில் ஏற்படும் பிடிப்பையும் நீக்கப் பயன்படுகிறது. ஆஸ்துமா, கக்குவான் ஆகியவற்றை நீக்கவும் பயன்படுகிறது.

வேரிலிருந்து தயாரிக்கப்படும் மருந்தும், இலை மற்றும் குறுங்கிளையிலிருந்து தயாரிக்கப்டும் மருந்தினைப் போன்ற பண்புகளை உடையது. வேரில் சில நச்சுப் பொருட்கள் கலந்திருக்கும் என நம்பப்படுவதால் இதன் மூலம் தயாரிக்கப் படும் மருந்துகள் கீல்வாதம், ஒற்றைத் தலைவலி, கட்டி, அழற்சி, ஆகியவற்றுக்கு வெளியே பூசிக் கொள்வதற்குப் பயன்படுகிறது.

1977-78இல் ஏறத்தாழ 60 குவிண்டால் இலைகளும் வேர்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

**வேறு வகைகள்:**

ஐரோப்பாவைத் தாயாகமாகக்கொண்டதும் _இதனுடைய இன்னொரு முக்கிய வகையுமான ஆட்ரோபா பெல்லடோனா இந்தியாவில் மலைப்பகுதிகளில் பயிர் செய்யப்படுகிறது.

இதன் வேர்களும் (வாணிபத் துறையில் -பெல்லடோனு ராடிக்ஸ்) இலைகளும் (பெல்லடோனு போலியம்) மருத்துவப் பண்பு மிக்கவை. இவை சத்துமருந்தாக, பிடிப்பு நீக்கி மருந்தாக, அமைதிப்படுத்தும் மருந்தாகப் பயன்படுகின்றன. கண்ணிலுள்ள பாவையை விரியச் செய்யவும் இதன் மருந்துவப் பண்பு உதவுகிறது. கண்களைப் பரிசோதிக்கக் கண்களில் விடும் சொட்டு மருந்தாகவும், கண்சிகிச்சைக் களிம்பாகவும் கூடப் பயன்படுகிறது. சில நச்சு நோய்களைத் தீர்க்கவும் உதவுகிறது.

1970-71இல் ரூ.1 லட்சம் மதிப்புள்ள இத் தாவரத்தின் காரகுணம் மிகுந்த இலைகளும் வேர்களும் ஏற்றுமதி செய்யப் பட்டன.

## 12. வேம்பு (Nim)

*(மார்கோசா மரம்)*

**விஞ்ஞானப் பெயர் :** அஜடிராக்டா இண்டிகா (Azadirachta Indica A. Juss) சித்திரம்-4

குடும்பம் : மீலியேசி

**இந்தியப்பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — *நீம்* |
| வங்காளம் | — *நீம்* |
| குஜராத்தி | — *லீம்படோ* |
| மலையாளம் | — *வேப்ப* |
| கன்னடம் | — *பேவு* |
| மராத்தி | — *நிம்ப, லிம்ப* |
| ஒரியா | — *நீம்* |
| சமஸ்கிருதம் | — *நிம்ப* |
| தெலுங்கு | — *வேப்ப* |

இதன் வணிகப் பெயர் பெருவழக்கிலுள்ள இந்தியப் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

வேம்பு இந்தியா முழுவதும் நன்கு அறியப்பட்டுள்ள மரமாகும். இலைகள் இறகு வடிவானவை; அதாவது இலைகள்



வேம்பு

எண்ணிலடங்காச் சிறிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, பல சிற்றிலைகளைக் கொண்டவை. ஒவ்வொரு சிற்றிலையும் ஒரு சாதாரண இலை போன்று காணப்படும். பூக்கள் சிறியவை; வெண்மையானவை; கவடு சார்ந்த சிறு கொத்துக்களாகக் காணப்படும். பழங்கள் 1.2-1.8 செ.மீ. நீளம்; பச்சை அல்லது மஞ்சள் நிறம்; ஒவ்வொரு பழத்திலும் ஒரு விதை காணப்படும்.

**விளையும் இடம்:**

தக்காணத் தீபகற்பத்தில் இயல்பாக விளைகிறது; இந்தியா முழுவதும் சாலையோரங்களிலும்; மக்கள் வாழுமிடங்களிலும் பரவலாகப் பயிரிடப் படுகிறது.

**மருத்துவ பண்புகள்**

உலர்ந்த நடுத்தண்டின் பட்டைகள், இலைகள், வேர்ப்பட்டைகள் ஆகியவை மருந்து தயாரிக்கப் பயன்படுகின்றன.

இம்மரப்பட்டை கசப்புச் சுவையுடையது; முறையடக்கியாக மலேரியா போன்ற முறைக்காய்ச்சலைக் குறைக்கவும் தோல் வியாதிக்கும் பயன்படுகிறது. இலைகள் கசப்பானவை; இவை தோல் நோய்களுக்கும், கொப்புளங்களுக்கும் பயன்படுகின்றன. இதன் கஷாயம் உள்மருந்தாகக் கொடுக்கப்படுகிறது.

இதன் இலைகள் மற்றும் வேர்களின் நோய் எதிர்ப்புச் சக்தியும், தோல் நோய்களைக் குணப்படுத்தும் சக்தியும் பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன.

**மற்ற வகைகள்:**

வேப்ப மரம் மிகவும் உறுதியானதாகையால் வீடு கட்டவும், வேளாண் கருவிகள் செய்யவும்; வேறு சில தச்சு வேலைகளுக்கும் பயன்படுகிறது. வேப்பம்புண்ணுக்கும், பட்டையிலிருந்து எடுக்கப்படும் பசையும், பயனுள்ள பொருட்களாகும். இதன் சருகுகள் அந்துப் பூச்சிகளிடமிருந்து துணிகளைப் பாதுகாக்கப் பயன்படுகின்றன.

## 13. சாம்பிராணியிலை (Brahmi)

*(பாகோபா)*

**விஞ்ஞானப் பெயர் :** பாகோபா மொனியெரி
(Bacopa Monnieri (L)
Syn. Herpestis Monniera (L)
L.H.B.K., Monniera
cuneifolia Mich)

ஆங்கிலப் பெயர் : தைம் லீவ்ட் கிராட்டியோலா

குடும்பம்: ஸ்க்ரோஃபுலேரியேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | — | *பிராஹ்மி, சம்பத் சம்னி* |
| குஜராத்தி | — | *ஜல்பிராஹ்மி, ஜல்நெர்வி* |
| மலையாளம் | — | *பர்ணு, நீரபிரஹ்மி* |
| மராத்தி | — | *கோல்* |
| சமஸ்கிருதம் | — | *சௌமியலதா* |
| தெலுங்கு | — | *சாம்பிராணி அக்லு* |

இதன் வணிக மற்றும் அறிவியல் பெயரான பிராஹ்மி, மற்றும் பாகோபா முறையே அதன் இந்தியப் பெயரையும் அறிவியல் பெயரையும் கொண்டுள்ளன.

**விளக்கம்:**

தரைமீது படர்ந்திருக்கும் இம்மூலிகைகளின் தண்டும், சிறிய இலைகளும் தசைப்பற்றுடையவை. தண்டின் கணுக்களிலிருந்துகூட வேர்கள் கிளம்பும். பூக்கள் இலைகளின் காம்புக் கவடுகளிலிருந்து கிளம்பி, குறும்பூந்தண்டுகளில் முகிழ்க்கும்-வெளிவரும். 5 புற இதழ்களில் ஒன்று மற்றவற்றைவிடப் பெரியது. பூவிதழ்வட்டம் 1 செ.மீ குறுக்களவுடனும் நீலம் கலந்த வெண்மை நிறத்துடனும் இருக்கும்.

**விளையும் இடம்:**

இந்தியா முழுவதும், கால்வாய் ஓரங்கள், கிணறுகள், நீர்ப்பாசனமுள்ள வயல்கள் முதலான ஈரப்பதமுடைய எல்லா இடங்களிலும் காணப்படுகிறது.

**மருத்துவ பண்புகள்:**

தாவரத்தின் முழுப் பகுதியும் மருந்து தயாரிக்கப் பயன்படுகிறது. மருத்துவத் துறையில் இது நரம்புகளுக்குத் சத்து மருந்தாகிறது. இசிவு மற்றும் மயக்க நிலையுடன் கூடிய நரம்பு சம்பந்தமான நோய்களை நீக்கவும் மனக் கோளாறுகளைச் சரிசெய்யவும், மலச்சிக்கலைக் குறைக்கவும், சிறுநீரை எளிதில் வெளிக்கொணரவும் பரிந்துரைக்கப்படுகிறது. இலைச்சாறு சுவாசக் கோளாறுல் சிரமப்படும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. அது வாந்திவரச் செய்து, குடலைச் சுத்தப்படுத்துகிறது. இதனுல், மூச்சு முட்டலுக்கு விடுதலை கிடைக்கிறது. பெட்ரோலியத்துடன் இலைச்சாறு கலந்து கீல்வாதத்திற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. இதை வேகவைத்து உண்டாக்கும் களி குழந்தைகளின் மார்ச்சளியை நீக்கப்பயன்படுகிறது. இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் தாவரமாகவும் கருதப்படுகிறது. இதன் அமைதிப்படுத்தும் தன்மை மிருகங்களுக்குக் கொடுத்து பரிசோதிக்கப்பட்டுள்ளது. இத்தாவரத்தில் உள்ள பிராமின் என்ற காரகுணம் இருதயத்திற்கான சத்து மருந்து தயாரிக்கவும், இருதயத்தை வலுப்படுத்தவும் பயன்படுகிறது.

## 14. மரமஞ்சள் (Indian Barberry)

***(பெர்பெரிஸ்)***

***விஞ்ஞானப் பெயர் : பெர்பெரிஸ் அரிஸ்டாட்டா.டி.சி*** (Berberis Aristata DC) *சித்திரம் - 5*

குடும்பம்: பேர்பேரிடேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | — | *தாரு-ஹல்தி, கிங்கோரா, கில்மோரா.* |
| வங்காளி | — | *தாரு ஹல்தி* |
| காஷ்மீரி | — | *ரஸ்வத்* |
| மலையாளம் | — | *மரதரிசிஞ* |
| மராத்தி | — | *தாருஹல்த்* |
| பஞ்சாபி | — | *கஷ்மல்* |
| சமஸ்கிருதம் | — | *தாரு ஹரித்ர* |

**விளக்கம்:**

நீண்ட, முட்கள் நிறைந்த குத்துச்செடி; திண் மரப்பகுதி மஞ்சள் நிறமுடையது. கிளைகள் வெண்மையாகவோ, வெளிறிய சாம்பல் நிறத்திலோ இருக்கும். இலைகள் தோல்போன்று




மரமஞ்சள்




மரமஞ்சள்

நன்கு அமைந்த நரம்புகளுடனும் கூர்மையான பற்களுடனும் தண்டு முட்களுடனும் காம்புக் கவடுகளில் காணப்படும். பூக்கள் மஞ்சள் நிறத்தில் குறுங்கொத்துக்களாக இருக்கும். பழங்கள் நீள் வட்டமாக பழுப்பு கலந்த நீலநிறத்தில் சில சிறு விதைகளுடன் காணப்படும்.

**விளையும் இடம்:**

இமயமலையில் 2000-3000 மீ. உயரத்தில் காணப்படுகிறது. தென்னிந்தியாவில் நீலகிரி மலையில் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த வேர்த்தண்டுகளும், இத்தாவரத்தின் வேறுசில வகைகளான பெர்பெரிஸ் ஆசியாடிகா, பெர்பெரிஸ் லைசியம் ராயல் ஆகியவையும் மருந்து தயாரிக்கப் பயன்படுகின்றன.

இதன் முக்கிய மருந்துப் பொருள் காரச்சத்து நிறைந்த பெர்பெரின் ஆகும். வேர்கள், வேர்ப்பட்டைகள் மற்றும் தண்டின் கீழ்ப்பகுதி ஆகியவை அரைக்கூழ் நிலை அடையும் வரை நீரில் கொதிக்க வைத்து, களியாக்கப்படுகின்றன. இது ரசௌத் என்று அழைக்கப்படும். இது தண்ணீரில் எளிதில் கரையக்கூடியது.

ரசௌத் வெண்ணெய் மற்றும் படிகாரத்துடனோ அபின் மற்றும் எலுமிச்சம்பழச் சாற்றுடனோ கலந்து கண்நோயைக் குணப்படுத்தப் புருவத்தில் தடவும் களிம்பாக உபயோகிக்கப் படுகிறது. குடல் புண்ணைக் குணப்படுத்தவும் ரசூத் பயன்படு கிறதென்பதும் சோதனை மூலம் செய்து காட்டப்பட்டுள்ளது. வீக்கங்களின் ஓரங்களில் ஊசிமூலம் செலுத்தப்படுகிறது. ரசௌத் காய்ச்சலைக் குணப்படுத்தவும், மென்மையான மலமி ளக்கியாகவும் சத்து மருந்தாகவும் பயன்படுகிறது. இது வயிற்றுக் கோளாறுகளுக்கு நல்ல மருந்து; காலரா மற்றும் நாள்பட்ட வயிற்றுக் கடுப்புக்கும் இது உபயோகமானது என்பது முயல்களைக்கொண்டு பரிசோதித்ததின் மூலம் தெரிய வந்துள்ளது.

இது சிலகாலம் மலேரியா காய்ச்சலுக்குக் கொடுக்கப்பட்டு வந்தாலும் இதன் குணப்படுத்தும் தன்மை நிரூபிக்கப்பட வில்லை. இருப்பினும் மலேரியாவின் ஆரம்பக் கூறுகளைக் கண்டுபிடிக்க இது பயன்படுகிறது. இதயத்துடிப்பு, சுவாசம் இவற்றைக் கட்டுப்படுத்துவதுடன், காசநோய் எதிர்ப்புச் சக்தியும் இம்மருந்துக்குண்டு.



படம் 1 சிம்போபோகன் (சிம்போ போகோன்)



படம் 2   ஹியோஸியாமஸ் (ஹயோஸியாமஸ நிகெர்)



படம் 3 துளசி (ஓசிமம் சாங்டம்)



படம் 4   இஷப்குல் (பிளான்டாகோ ஓவாட்டா)



படம் 5 கார்போகரிசி (சோராலேயா கோரீலி ஃபோலியா)



படம் 6 அமிர்தவல்லி (டினோஸ்போரா கார்டிஃபோலியா)



படம் 7   கண்டங்கத்திரி (ஸொலானும் ஸராத்தேன்ஸே)



படம் 8 சர்ப்பகந்தி (ராவுவால் ஃபியா செர்பென்டினா)



படம் 9 காகித்தம் (டைலோ ஃபோரா இண்டிகா)

***மற்ற பயன்கள்:***

பெரிபெரிஸ் அரிஸ்டாடாவின் வேர்களும், நடுத்தண்டும் கொடுக்கும் ஒரு வுகை மஞ்சள் நிறச் சாயம் தோல் பொருட்களுக்கு நிறமளிக்கவும், பதப்படுத்தவும் பயன்படுகிறது.

ஆண்டுதோறும் 2000-3000 குவிண்டால் பெர்பெரிஸ் வேர்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## 15. மூக்கரட்டை (Punarnava)

**விஞ்ஞானப் பெயர் :** போயர்ஹாவியா டிஃப்யூஸா
(Boerharia diffusa. L)

ஆங்கிலப் பெயர் : ஹார்ஸ் - பர்ஸ்லேன், ஹாக்வீட்

குடும்பம்: நிக்டாஜினேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | —*ஸான்டி, விஷகோப்ரா, சுர்வரி* |
| வங்காளி | —*புனர்னவா* |
| குஜராத்தி | —*மோட்டோ ஸாத்தோடோ, நாஹறே வஸேடோ, ஜீண்ட்கோ வஸேடோ* |
| மராத்தி | —*தம்பாடிவசு* |
| சமஸ்கிருதம் | —*ரக்தகாந்தா, புனர்னவா* |
| தெலுங்கு | —*அடகி, அடிக் மமீடி* |
| (மத்தியப்பிரதேசம் | —*பதர்சத்தா, கோடியா)* |

வணிகப் பெயர் இதன் சமஸ்கிருதப் பெயரை அடிப்படையாகக் கொண்டது.பழைய இந்திய இலக்கியங்களில் இது 'சோதக்ஞ' (அதாவது நீர்வீக்கத்தை அழிக்கவல்லது) என்று குறிக்கப்படுகிறது.

**விளக்கம்:**

அதிகக் கிளைகளுடன் படர்தாவரமாகவோ கொடியாகவோ காணப்படும் மூலிகையாகும். ஒவ்வொரு கணுவிலும் இரண்டிரண்டு இலைகளாகக் காணப்படும். ஒன்று மற்றொன்றைவிடப்

பெரியது. இலையின் அடிப்பகுதி உள்வளைந்த விளிம்புடையது. கீழ்ப்பகுதி வெண்மையாகவும், மேற்பகுதி பச்சையாகவும் இருக்கும். நீளமான தண்டின் கவடுகளில் குறுங்கொத்துக்களாக, சிவந்த, சிறிய பூக்கள் காணப்படும். பழங்கள் சுரப்பிகளுடன் ஐந்து விளிம்புக்கோடுகளை உடையன.

**விளையும் இடம் :**

இந்தியா முழுவதும்.

**மருத்துவப் பண்புகள் :**

முழுத் தாவரமும், சிறப்பாக வேர்கள், இலைகள் மற்றும் விதைகள் மருந்து தயாரிக்கப் பயன்படுகின்றன.

இதன் மருந்துப் புனர்னவின் என்னும் காரச்சத்தைக் கொண்டுள்ளது. இதன் முக்கியப் பண்பு சிறுநீரை அதிக அளவில் வெளியேற்றுவதாகும். அதாவது, நீர்வீக்கம், மஞ்சள் காமாலை, மேகவெட்டை (கொனோரியா) நோயால் அவதிப்படும் போது சிறுநீர் எளிதில் வெளியேற இது உதவுகிறது. இது மலமிளக்கியும் கூட. குறைந்த அளவில் கொடுத்தால் காச நோய்க்கும் நல்லது. அதிக அளவில் உட்கொண்டால் வாந்திக்கு வழிவகுக்கும். சிறுநீரை வெளிப்படுத்தும் திறன் பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

## 16. பலாசு (Butea)

### (பலாஸ், காட்டுத்தீயொளி)

விஞ்ஞானப் பெயர் : பூட்டே ஆ மோனோஸ்பெர்மா
(Butea monosperma)

**குடும்பம் : பாப்பிலியோனேசி**

**இந்தியப் பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | - | *தேசு, டாக்* |
| வங்காளி | - | *பலாஸ்* |
| குஜராத்தி | - | *காக்ரோ* |
| சமஸ்கிருதம் | - | *பலாச* |
| தெலுங்கு | - | *பலாசமு* |
| உருது | - | *பலாஸ் பாப்ரா* |
| (அஜ்மீர், மேர்வாரா | - | *சவுரா)* |

இதன் வணிகப் பெயர் இதன் அறிவியல் பெயரை அடிப்ப டையாகக் கொண்டது. பலாஸ் மற்றும் காட்டுத்தீயொளி என்பது இதன் இந்திய மற்றும் ஆங்கிலப் பெயரை அடிப்ப டையாகக் கொண்டது.

**விளக்கம்:**

இந்தியா முழுவதும் பலாசு பிரபலமானது. இதன் சிவப்பு மற்றும் ஆரஞ்சு நிறப்பூக்களால் இது காட்டுத்தீயொளி என் னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறது. இம்மரம் சராசரி உயரத்துடன், கூட்டிலைகளுடன், ஒவ்வொரு இலையி லும் மூன்று சிற்றிலைகளுடன் காணப்படும். இலைகள் பட்டுப் போன்று சடைக்குஞ்சத்துடன் கீழ்ப்பக்கம் உறுதியான நரம்புக ளுடன் காணப்படும். இலைகள் குளிர்காலத்தில் உதிர்ந்துவி டும். பிப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் பூக்கள் அடர்த்தியாக, சிறு மொட்டுகளுடன் இலைகளின்றி கிளைகளில் காணப்படும். பழங்கள் ஒருவிதையுடைய வெடிக்கும் விதைப்பையுடன் காணப்படும். இதன் மற்றொரு பெயரான மோனோஸ்பெர்மா (Monosperma) என்பது ஒரு விதையுடையது என்பதைக் குறிப்பதாகும்.

**விளையும் இடம்:**

இம்மரம் இந்தியா முழுவதிலும், முக்கியமாக மத்திய, மற்றும் மேற்கு இந்தியாவிலுள்ள இலையுதிர் மரக்காடுகளில் காணப்படும். சமவெளிகளிலும் உயரம் குறைவான மலைச் சரிவுகளிலும் இம்மரம் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

பெங்கால் கினோ அல்லது பூட்டேஆ பசை என்றழைக்கப் படும் சிவப்பு நிறப்பசையும், இம்மரத்தில் விதைகளும் மருத்து வக் குணமுள்ளவை. இப்பசையிலிருந்து எடுக்கப்படும் பதத் துவர் வயிற்றுப் போக்கிற்கு நல்ல மருந்தாகும். விதைகள் வட்டப்புழுக்களையும் நாடாப் புழுக்களையும் கொல்லும் புழுக் கொல்லியாகப் பயன்படுத்துகின்றன. வட்டப் புழுக்களை இவ்விதை குணப்படுத்துவது சமீபகால மருத்துவப் பரிசோத னைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இம்மரத்தின் விதைகள் சாந்தோனினுக்குப் பொருத்தமான ஒரு மாற்றுப் பொருளா கும். சலவை செய்யப்பட்ட துணிகளால் ஏற்படும்

அரிப்பிலிருந்து காப்பாற்ற இவ்விதையை இடித்துப் பொடியாக்கி எலுமிச்சைச் சாறுடன் சேர்த்து உபயோகிப்பர். கொக்கிப் புழுக்களைக் கொல்லவும் இதன் விதைகள் பயன்படுகின்றன. இம்மரத்தின் வேர்ப் பட்டை இரத்த அழுத்தத்தை ஓரளவு கட்டுப்படுத்தும் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

**வேறு பயன்கள்**

இம்மரம் அரக்கு போன்ற சில திரவங்களைச் சுரக்கும் ஒட்டுண்ணிப் பூச்சிகளுக்கு ஏற்பு மரமாகப் பயன்படுகிறது. இம்மரத்தின் பூக்கள் மஞ்சள் நிறச்சாயம் தயாரிக்கவும், மரங்கள் நீரினால் அதிகம் பாதிக்கப்படாமல் இருப்பதால் நீரிறைக்கும் சக்கரப் பொறிகள் தயாரிக்கவும், கிணற்றின் விளிம்புக் கட்டைகள் தயாரிக்கவும் பயன்படுகின்றன. இது வேறுசில கட்டிட வேலைகளுக்கும் பயன்படுவதுடன் எரிபொருளாகவும் பயன்படுகிறது. இலைகள் குவளைகள், தட்டுக்கள் செய்யவும் பயன்படுகின்றன.

**மற்ற வகைகள்:**

பூட்டேஆ சூபர்பா (Butea superba ; இந்தி—பலாஸ்லதா) மிகப் பெரிய மரத்தில் படரும் கொடியாகும். இது இந்தியா முழுவதும் காணப்படுகிறது. இதன் இலையிலிருந்து எடுக்கப்படும் சாறு குழந்தைகளுக்கு வெயிற்காலத்தில் ஏற்படும் கொப்புளங்களின் மீது தடவ ஏற்றது.

## 17. கொன்றை (Cassia)

**விஞ்ஞானப் பெயர் :** காஸியா ஃபிஸ்டுலா (Cassia fistula)
ஆங்கிலப் பெயர் : இந்தியன் லாபர்னம்
குடும்பம் : சீஸல்பினியேசி
**இந்தியப் பெயர்கள் :**

| | |
|---|---|
| இந்தி | - கில்வலி, கிரால், ஸினார் |
| அஸ்ஸாமி | - சொனாறு |
| வங்காளி | - சொனாலி, பந்தர்லாட்டி, ஸோந்தால் |
| குஜராத்தி | - கர்மாடோ |




கொன்றை

| | | |
|---|---|---|
| கன்னடம் | - | கக்கெகிடா |
| மலையாளம் | - | கிருதமலம், கொன்னை |
| மராத்தி | - | பேகாவா, ஜம்பா |
| சமஸ்கிருதம் | - | சுவர்னகா |
| தெலுங்கு | - | ரேலா |

இதன் வணிகப் பெயர் இதன் பொதுவான அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது. இதன் மற்றொரு சிறப்பு பெயரான ஜபிஸ்துலா (இடையனின்குழல்) என்பது இம்மரத்தினுடைய பழத்தின் அமைப்பை ஒட்டி அமைந்ததாகும்.

**விளக்கம் :**

இம்மரம் சிறிய அல்லது நடுத்தர உயரத்துடனும், கூட்டு இலைகளுடனும் பெரிய. பளபளப்பான, நல்ல பச்சை நிறமுடைய சிற்றிலைகளுடனும் காணப்படும். பூக்கள் பளபளப்பாக, மஞ்சள் நிறத்துடனும், பெரிதாக, கொத்துக் கொத்தாகத் தொங்கியவாறும் காணப்படும். பழங்கள் 50-60 செ.மீ. நீளத்தில் கருப்பாகவோ, பளபளக்கும் கரும்பழுப்பாகவோ நீள் உருளை வடிவில் காணப்படும். காட்டில், இம்மரத்தை வெகு தூரத்தலிருந்தே இதன் பழங்கள் மற்றும் பூக்களின் மூலம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். இம்மரம் முன் வேனிற்காலத்தில் (மார்ச்—மே) இலையுதிர்க்கக் கூடியது; அந்த நேரத்தில் அது முழுவதும் மலர்ந்து காணப்படும்.

**விளையும் இடம் :**

இம்மரம் இந்தியா முழுவதும் சுமார் 1500 மீ. உயரம் உள்ள இடங்களிலும் ஈரப்பசை நிறைந்த இடங்களிலம், பசுமையான காடுகளிலும் காணப்படும். இது சாலை ஓரங்களிலும், தோட்டங்களிலும் அதிகமாக விரும்பி வளர்க்கப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள் :**

இம்மரத்தின் எல்லாப் பாகங்களும் மருத்துவப் பண்பு நிரம்பியவையாய் இருப்பினும் முக்கியமாகப் பழம் இந்திய மருத்துவக் குணபாட நூலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. பழங்களிலிருந்து கிடைக்கும் விதைப் பருப்பு (காஸியா பல்ப்) ஒரு மிகச் சிறந்த மலமிளக்கி மருந்தாகும். இதை அதிக அளவில் உட்கொள்வது பேதி, குமட்டல், கடும் வயிற்றுவலி

ஆகியவற்றுக்குக் காரணமாகும். இது தனியாகப் பயன்படுத்தப் படாமல் நிலவாவரை (Senna) இலைகளுடன் சேர்த்துப் பயன் படுத்தப்படுகிறது.

**வேறு பயன்கள் :**

'சுமரி' (Sumari) என்றழைக்கப்படும் இம்மரத்தின் பட்டை பதத்துவர் நிறைந்தது. கொன்றை மரம் அதிக உறுதியானதா கையால் வீடுகள், பாலத்தூண்கள், மற்றும் விவசாயக் கருவி கள் தயாரிக்கப்பயன்படுகிறது.

**வேறு வகைகள் :**

காஸியா அன்குஸ்டிபோலியா (Cassia anguistifolia; தகட்டுப் படம்-3), இந்தி—ஸனுய்; சமஸ்கிருதம்—பூபத்ம; மலையாளம்— நீலவாக. இது ஒரு சிறிய குத்துச் செடி; அரேபியா மற்றும் சோமாலி நாடுகளில் காணப்படும் இது தென்னிந்தியாவிலும் வெற்றிகரமாகப் பயிரிடப்படுகிறது. இதன் இலைகளும், பழங்களும் மலச்சிக்கலுக்கு வீட்டு மருந்தாகப் பயன்படுகின்றன. இம்மருந்தை தாய்மார்கள் உட்கொண்டால் அவர்களது முலைப்பால் மலமிளக் கும் தன்மையைப் பெறுவது தெரிய வந்துள்ளது. இதன் வேறு சில வகைகள் வரையறுக்கப்பட்ட மருத்துவ மதிப்புடையன. 1970-71இல் ரூ. 54 இலட்சம் மதிப்புள்ள நிலவாவரையின் இலைகளை யும் விதை நெற்றுக்களையும் இந்தியா ஏற்றுமதி செய்தது. இது 1977-78இல் ரூ. 1,20,00,000 ஆக உயர்ந்துள்ளது.

## 18. சுடுகாட்டு மல்லிகை (Catharanthus)

விஞ்ஞானப் பெயர் : கதாரான்தஸ் ரோஸஸ்
(Catharanthus rosus (L) G. Don)

குடும்பம் : அப்போசை னஸியாயி

**இந்தியப் பெயர்கள் :**

| | | |
|---|---|---|
| இந்தி | - | சதாபஹார் |
| வங்காளி | - | நயன்தாரா, குல் ஃபெரிங்கி |
| மலையாளம் | - | உஷாமாலாரி |

| | | |
|---|---|---|
| மராத்தி | - | சதாம்பல் |
| ஒரியா | - | அபன்ஸ்காதி |
| தெலுங்கு | - | பில்லாகன்னேரு |
| பஞ்சாபி | - | ரத்தன்ஜோத் |

**விளக்கம் :**

இது 1 மீ. உயரம் செங்குத்தாக வளரக்கூடிய மூலிகையாகும். இலைகள் நீள்வட்ட வடிவில் எதிர் எதிராக அமைந்திருக்கும். பூக்கள் 2 அல்லது 3 கொத்துக்களாக கவட்டுச் சார்பாகக் காணப்படும். பூவிதழ் வெண்மை நிறத்திலோ இளஞ்சிவப்பு நிறத்திலோ இருக்கும். சில வகைகளில் வெண்மையாக, இதழ்களின் அடி ஓரத்தில் இளஞ்சிவப்பு அல்லது ஊதாத் திட்டுடன், காணப்படும். பழங்கள் நிறைய விதைகளையுடையவை. கீழ்ப்புறமாகத் திறக்கும் வகையைச் சார்ந்தவை.

**விளையும் இடம் :**

மலகாஸ்கரைத் தாயகமாகக் கொண்ட இது பூமியின் இரு அரைக் கோளங்களுக்கு இடையே வெப்பமண்டலப் பிரிவு முழுவதும் காணப்படுகிறது. இது விரைவில் அழிந்துவிடுவதால், பயிர் செய்யப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள் :**

இதன் வேர்கள் மருத்துவப் பண்புடையவை. இது செரிமான மருத்துவத் தன்மையையும் நச்சுத்தன்மையையும் உடையது. ஆனால் சமீப காலங்களில் இது ராவுல்ஃபியா வகைகளைப் போன்று காரச்சத்து நிறைந்த பொருட்களைக் கொண்டுள்ளதால் அதிக மதிப்புடையதாக விளங்குகிறது. *ராவுல்பியா ஸெர்பென்டினா* வைவிட இதன் வேர் அதிகமாக அஜ்மாலிசினையும் செர்பன்டினையும் கொண்டுள்ளது. இத்துடன் இதில் 'ரெசர்பைன்' - உம் கலந்துள்ளது. காரச் சத்துக்கள் குறைந்த இரத்த அழுத்தம், மயக்கம், அமைதியூட்டல் ஆகிய பண்புகளையும் கொண்டுள்ளது. இதை மிருகங்களுக்குக் கொடுத்துச் சில பரிசோதனைகளை மேற்கொண்டதில் வெள்ளைரத்தப் புற்று நோயைக் குணப்படுத்தும் என்று தெரிய வந்துள்ளது.

**மற்ற பயன்கள் :**

இது ஆண்டு முழுவதும் பூக்கக் கூடிய, தோட்டத்திற்கு அழகைத் தரும் தாவரமாகும். இதனால், இது ''சதாபஹார்''

என அழைக்கப்படுகிறது. இச்செடி வன்மையானது. அலங்கார மாக வளர்க்கப்பயன்படுகிறது.

ஏறத்தாழ 6000 குவிண்டால் வேர்களை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.

**மற்ற வகைகள் :**

கதாரான்தஸ் புஸில்லஸ் Catharanthus pusillus (சமஸ்கிரு தம்-சங்காஃபலி; தமிழ்-மிளகாய்ப்பூண்டு) களைச் செடியாக வளரும்; இடுப்பு வலிக்கு மிகுந்த பயனளிக்கக் கூடியது.

## 19. வல்லாரை இலை (Centella)

**விஞ்ஞானப் பெயர் :** செண்ட்டெல்லா ஆசியாடிகா (Centella asiatica (L))

ஆங்கிலப் பெயர் : இந்தியன் பென்னிவர்ட்

குடும்பம் : அம்பேலிஃபேரி

**இந்தியப் பெயர்கள் :**

| | | |
|---|---|---|
| இந்தி | — | பிரும்பி |
| குஜராத்தி | — | டான்குரியா |
| கன்னடம் | — | பண்தெலகா |
| மராத்தி | — | பிரஹ்மி |
| பஞ்சாபி | — | பிரஹ்மி - பூட்டி |
| சமஸ்கிருதம் | — | மண்டூக பர்ணி |
| தெலுங்கு | — | பொக்குடு, தாங்க்கு அகல் நாயெலெ |
| நாகலாந்து, அஸ்ஸாம் | — | அகின்யா |
| சில்ச்சார் | — | துரணிமான்கோணி |
| சிக்கிம் | — | கொர்தாபரி |

இதன் சமஸ்கிருதப் பெயரான மாண்டூகபர்ணி என்பது இத்தாவரத்தின் இலைகள் தவளையின் பாதம் போன்ற அமைப் பையுடையவை என்பதைக் குறிப்பதாகும்.

**விளக்கம் :**

இத்தாவரம் தரையில் படர்ந்து பரவும், அதனுடைய படரும்

தண்டிலுள்ள அணுக்களிலிருந்து வேர்கள் புறப்படுகின்றன. இலைகள் சிறிதாகவும், 2.5.செ.மீ. குறுக்குவாட்டிலும், சில இடங்களில் வட்ட வடிவாகவோ சிறுநீரக வடிவிலோ, அதன் ஓரங்களில் பற்களுடன் காணப்படும். பூக்கள் மிகச் சிறிதாக வும் இளஞ்சிவப்பு நிறத்துடனும் 3-6 பூக்களைக் கொண்ட கொத்தாகக் காணப்படும். பழங்கள் சிறியவையாக பார்லி விதை அளவில், 7-9 விளிம்புக் கோடுகளுடன் காணப்படும்.

**விளையும் இடம்:**

இச்செடி இந்தியா முழுவதும் ஈரப்பசை நிறைந்த இடங்களி லும், பெரும்பாலும் ஆற்றோரங்களிலும், ஓடைகள், குளங்கள் மற்றும் நீர்ப்பாசனப் பகுதிகளிலும் வயல் வெளிகளிலும் காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

இச் செடியின் தளிர்களும், சருகுகளும், தண்டும் மருத்துவப் பண்புகளைக் கொண்டுள்ளன. வேர்களும் விதைகளும் கூட மருந்து தயாரிக்கப் பயன்படுகின்றன. இத் தாவரத்தை முழு மையாகவோ இலைகளை மட்டுமோ நன்கு நீரில் கொதிக்க வைத்து அதன் சாற்றை எடுத்துத் தொழுநோய்க்கு மருந்தாகக் கொடுக்கலாம். இத்தாவரத்தில் கலந்துள்ள ஆஷியாடிகோசைடு (asiaticocide) தொழுநோயைக் குணப்படுத்துவதற்குக் காரண மாக உள்ளது. மிருகங்களுக்குக் கொடுத்துப் பரிசோதித் தில் தோல், முடி, மற்றும் நகங்களின் வளர்ச்சியைத் தூண்டு வது தெரிய வந்துள்ளது. சில வகையான காசநோய்களுக்குப் பயன்படுவதுடன் மூளைக்குத் தேவையான சத்து மருந்தாகவும் பயன்படுகிறது.

## 20. காட்டுச் சீரகம் (Centratherum)

***(சோம்ராஜ்)***

**விஞ்ஞானப் பெயர் :** சென்ட்ராதீரம் அன்தல்மின்டிகம் (Centratherum anthelminticum)

மறுபெயர் : வெர்னோனியா அந்தேல்மின்டிகா (Vernonia anthelmintica)

குடும்பம் : கம்போசிட்டி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — சோம்பராஜ், சோம்ராஜி, பன்ஜிரா |
| வங்காளி | — சோம்ராஜ் |
| குஜராத்தி | — காலி ஜீரி |
| கன்னடம் | — காடுஜீரிகெ |
| மலையாளம் | — காட்டுச் சீரகம் |
| மராத்தி | — காலன்ஜீரி |
| பஞ்சாபி | — சோம்ராஜ் |
| சமஸ்கிருதம் | — சோமராஜி |
| தெலுங்கு | — அடவிஜீலகரா |
| உருது | — ஜங்கலி ஜீரி |
| கர்வாலி | — காலா ஜீரா |

இதன் வணிகப் பெயரான சென்ட்ராதிரம் மற்றும் சோம்ராஜ் என்பன முறையே இதன் அறிவியல் பெயரையும், சமஸ்கிருதப் பெயரையும் சார்ந்துள்ளன. அன்தல்மின்டிகம் என்னும் அறிவியல் பெயர் புழுக்களைக் குணப்படுத்தும் இத்தாவரத்தின் மருத்துவப் பண்பைக் குறிப்பதாகும்.

**விளக்கம்:**

செங்குத்தாக, உயரமாக வளரக்கூடிய மூலிகை. தண்டும் இலைகளும் நுண்ணிய மயிரிழைகளுடன் காணப்படும். இலைகள் 6-10 செ.மீ. நீளத்துடனும் ஓரங்கள் பற்களுடனும், நுனிப்பகுதி சிறுத்தும், இலைக் காம்புடனும் காணப்படும். காம்பில்லாச் சிறு மலர்கள் 1.5. செ.மீ-2.5 செ.மீ குறுக்களவில் சிறுசிறு கொத்துக்களுடன், ஒவ்வொரு பூங்கொத்தும் 30-40 பழுப்புநிறப் பூக்களைக் கொண்டு காணப்படும். அறிவியல் முறையில் அக்கீன் (achene) என வழங்கப்படும் பழங்கள் 4.5-6 செ.மீ. நீளத்தில், நீள் உருளை வடிவில், நுண்ணிய மயிரிழைகளுடன், 10 குறுகலான விளிம்புக் கோடுகளுடன் காணப்படும். 'அக்கீனி'ன் உச்சியிலுள்ள மயிர்க்குடுமி சிவப்பு நிறத்தில் இருக்கும்.

**விளையும் இடம்:**

இத்தாவரம் இந்தியா முழுவதும் 1,500 மீ. வரை உயரமுள்ள இடங்களிலும் மக்கள் குடியிருக்கும் இடங்களுக்கு அருகிலுள்ள ஒதுக்கப்பட்ட இடங்களிலும் பெரும்பான்மையாகக் காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

இத்தாவரத்தின் புத்தம் புதிய உலர்ந்த விதைகள் மருத்துவப் பண்பு கொண்டவை. இதன் அறிவியல் பெயர் குறிப்பிடுவது போல் மருத்துவ ரீதியாக மிக முக்கியமான புழுக்கொல்லியா கப் பயன்படுகிறது. நாடாப்புழுத்தொற்றுக்களைக் குணப்படுத் துகிறது. பழைய இலக்கியங்களில் இத்தாவரம் நரம்புகளைத் தூண்டிப் புத்துணர்வு தருவதாகவும், சீழ் எதிரியாகவும் சிறுநீரை எளிதில் வெளியேற்றக் கூடியதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் பரிசோதனைகள் மூலம் அத்தகைய குணம் இதற்கு இல்லை என நிரூபிக்கப்பட்டுள்ளது. நாடாப்புழுத் தொற்றுக்களைக் குணமாக்கும் இதன் குணம் மருத்துவமனை களில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 21. இபிகாக் (Ipecac)

**விஞ்ஞானப் பெயர் :** ஸெஃபாயெலிஸ் இபெகாகுவான்ஹா (Cephaelis ipecacuanha)

குடும்பம் : ரூபியேசி

**விளக்கம்:**

சிறிய தோகைபோன்று காணப்படும் மூலிகையாகும். வேர் கள் ஒடுங்கி பக்கவாட்டில் பரந்து காணப்படும். வளர்ச்சியுற்ற வேர்கள் கழுத்துமாலை போன்ற வடிவுடன் கொத்தாகக் காணப்படும். இலைகள் எதிர் எதிர் இணையாகவும், அவற்றின் நுனிப்பகுதி கூர்மையாகவும், ஓரங்கள் முழுமையகாவும் காணப்படும். பூக்கள் வெண்மையாக, சிறிதாக, சிறு கொத்துக் களாகக் காணப்படும்.

**விளையும் இடம்:**

இத் தாவரம் தென் அமெரிக்காவின் பிரேஸிலைத் தாயகமாகக் கொண்ட போதிலும், இந்தியாவில் அஸ்ஸாம், வங்காளம் ஆகிய இடங்களிலும், சோதனை முயற்சியாகத் தென்னிந்தியா விலும் பயிர் செய்யப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இத்தாவரத்தின் வேர் முண்டுகளில் இபிகாக் மருந்து உள்ளது. இம்மருந்து வயிற்றுவலியுடன் கூடிய வயிற்றுப் போக்கிற்கும் பசியின்மைக்கும் பயன்படுகிறது. அதிக அள வில் உட்கொண்டால் வாந்தியெடுக்கச் செய்யும்; இதனுடைய இப்பண்பு சளியைக் குறைப்பதற்குப் பயன்படுகிறது. மேலும் இது உடம்பை வியர்க்கச் செய்வதற்கும் பயன்படுகிறது.

உலகிலேயே அதிக அளவு இபிகாக் மேற்கு வங்காளத்தில் பயிரிடப்படுகிறது. இது இந்தியாவின் தேவையை நிறைவு செய்கிறது. இத்தாவரத்தின் வேர்கள் ஆண்டுக்கு 500 குவிண் டால் சேகரிக்கப்பட வேண்டும் என்பது மே.வங்கத்தில் வரையறுக்கப்பட்டுள்ள குறியீடு ஆகும். இத்தாவரத்தின் வேர்கள் ஏற்றுமதியில் முக்கிய இடம் வகிப்பதால் இது அதிகமாகப் பயிர் செய்யப்பட வேண்டியது-இன்றியமையாததா கும்.

## 22. சின்கோனு (Cinchona)

சின்கோனு வகை
குடும்பம் : ரூபியேசி
**இந்தியப்பெயர்கள்:**

குனேன் என்பது பொதுவான பெயர். இது குவினேன் என்பதை அடிப்படையாகக் கொண்டது. இதன் முக்கியப் பொருள் இம்மரத்தின் மரப்பட்டையாகும்.

இதன் வணிகப்பெயர் அறிவியல் பெயரான சின்கோனுவை அடிப்படையாகக் கொண்டது.

இது இந்தியாவைச் சேர்ந்ததன்று; இதன் எந்த வகையும் இயற்கையாக இங்கு வளர்வதில்லே. ஆனுல் இதன் பல வகைகளும் இங்கு இப்போது பயிரிடப் படுகின்றன. அவைக ளுள் கீழ்வரும் நான்கும் மிகவும் முக்கியமானவை.

1. சின்கோனு காலிசாயா: (Cinchona calisaya)
   (வணிகப் பெயர்-காலிசாயா பார்க்; பெருவியன் பார்க்)
   நீலகிரியிலும் சிக்கிமிலும் பயிரிடப்படுகிறது.
2. சின்கோனு லெட்ஜரியானு (Cinchona ledgeriana)

(லெட்ஜர் பார்க்) வங்காளம், அஸ்ஸாம், மற்றும் தென் இந்தியாவில் வளர்க்கப்படுகிறது. இதுவே பொதுவாக இந்தியாவில் வளரும் சின்கோனு ஆகும்.

3. சின்கோனு ஆஃபீஸிநாலிஸ் (Cinchona Officinalis) (கிரவுன் பார்க், லோக்ஸாபார்க்) நீலகிரியில் வளர்க்கப்படுகிறது.

4. சின்கோனு சுக்கிருப்ரா: (ரெட் பார்க்) சாத்பூரா மலைகளிலும், சிக்கிம், மற்றும் தென் இந்தியாவிலும் காணப்படுகிறது. இந்தியாவில் வளர்க்கப்படும் சின்கோனு மரங்கள் சுமாரான உயரத்துடனே, மிக உயரமாகவோ காணப்படும். சின்கோனு லெட்ஜரியானு வளைந்து செல்லும் மரமாகும்.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த மரப்பட்டைகளில் சின்கோனு மருந்து தயாரிக்கப்படுகிறது. சின்கோனு மரப்பட்டை தரும் செயலூக்கிகளில் குவினைன் மிகவும் முக்கியமானது. மலேரியாக் காய்ச்சலைக் குணப்படுத்தும். இதன் சக்தி அனைவரும் அறிந்ததே. இம்மருந்து உடனடியாகக் காய்ச்சலைக் குறைப்பதுடன் அடிக்கடி குறிப்பிட்ட அளவில் இம்மருந்தைக் கொடுப்பது மலேரியாக் காய்ச்சல் மீண்டும் ஏற்படுவதைத் தடுக்கும். குவினைன் சில நுண்ணுயிர்களால் ஏற்படும் நோயைப் போக்குகிறது; சளிக் காய்ச்சலுக்கும் வயிற்றுவலியுடன் கூடிய வயிற்றுப் போக்குக்கும் நல்லது; கண்களுக்கான கழுவு நீர்மம் தயாரிக்கவும் பயன்படுகிறது.

குவினைன் தயாரிப்புக்கள் மூட்டுவலிகளுக்கும், கொப்புளங்களுக்கும் களிம்பாகப் பயன்படுகின்றன. அதிக அளவில் இதை உபயோகப்படுத்துவது தற்காலிக (சில சமயங்களில் நிரந்தர) செவிட்டுத் தன்மையையும், குருட்டுத் தன்மையையும், நடுக்கத்தையும், ஒற்றைத் தலைவலியையும் ஏற்படுத்தும். கர்ப்பிணிப் பெண்களுக்கும், இதய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் குவினைன் கொடுப்பதில்லை.

**மற்ற பயன்கள்:**

குவினைன், மற்றும் சின்கோனு மரப்பட்டையின் கடுகிச் செயல்படும் இதர பண்புகளை ஒட்டித் தயாரிக்கப்படும் மருந்துகள் பூச்சிக் கொல்லியாகவும், இறகுகள், விலங்கின் மென்மயிர்கள், துணிகள் முதலியவற்றைப் பாதுகாக்கவும்,

அந்துப் பூச்சியைத் தவிர்க்கவும், முடி கழுவு நீர்மம் தயாரிக்க வும் பயன்படுகின்றன.

குவினைன் எடுக்கப் பயன்படும் சின்கோனு மரப்பட்டை பதத்துவர் தயாரிக்கவும் பயன்படுகிறது.

## 23. இலவங்கப்பட்டை (Cinnamon)

**விஞ்ஞானப்பெயர் :** ஸின்னுமோமும் ஜெயிலானிகும் (Cinnamomum Zeylanicum)

சித்திரம் 8

குடும்பம் : லாரெசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — தால்சீனி |
| வங்காளி | — தால்சீனி |
| குஜராத்தி | — தால்சீனி |
| கன்னடம் | — லவங்கப்பட்டா |
| மராத்தி | — தால்சீனி |
| ஒரியா | — தால்சீனி |
| பஞ்சாபி | — தால்சீனி |
| சமஸ்கிருதம் | — தாருசிலா |

ஜெயிலானிகும் என்னும் இதன் அறிவியல் பெயர் ஸிலோன் அல்லது ஸ்ரீலங்காவைக் குறிக்கும். அங்கு இது இயற்கை யாகவே வளர்கிறது.

**விளக்கம்:**

எப்பொழுதும் பசுமையாக காணப்படும் மரம். இது எந்தக் காலத்திலும் முற்றிலும் இலையுதிர்ப்பது இல்லை. 6-8 மீ. உயரம் உடையது. இலைகள் பெரிதாகவும் நீள்வட்ட வடிவிலும், கனமாகவும், தோல் போன்றும், நுனியில் கூர்மையாகவும், பளபளக்கும் பசுமை நிறத்துடனும், அடியில் மென்மையான வண்ணங்களுடனும் காணப்படும். இலையின் அடிப்பகுதியில் இருந்து நுனிப்பகுதியை நோக்கி 3-5 முக்கிய நரம்புகள் செல்லும். பூக்கள் சிறிதாக, நீண்ட மயிரிழைகளுடன் கொத்தா கக் காணப்படும். பழங்கள் நீள்வட்டமாகவும், 1.5-2 செ.மீ குறுக்களவில், அடர்ந்த பழுப்பு நிறத்துடனும் ஒரு விதையுட னும் காணப்படும்.




இலவங்கப்பட்டை

**விளையும் இடம்:**

இம்மரங்கள் 200 மீட்டருக்கும் குறைவான உயரத்திலிருந்து 1500 மீ. உயரம் வரை உள்ள இடங்களில் காணப்படும். இந்தியாவின் சில பகுதிகளில் இது பயிர் செய்யப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இம்மரத்தின் கிளைகள் உலர்த்தப்பட்டு, அவற்றின் பட்டைகள் நீக்கப்படும். மரப்பட்டையின் உலர்ந்த உட்பகுதியில் இலவங்க மருத்துவப் பண்பு உள்ளது.

இது வயிற்றுப்போக்கு, ஒற்றைத் தலைவலி, வாந்தி எடுத்தல் போன்றவைகளுக்கு உபயோகப்படுத்தப் படுகிறது. ஆனால் பொதுவாக உணவுப் பொருட்களுக்கு சுவையூட்டப் பயன்படுகிறது.

இம்மரப்பட்டையிலிருந்து கிடைக்கும் இலவங்க எண்ணெய் இதே குணங்களைக் கொண்டிருப்பினும், பட்டையை விடவும் அதிகமான ஆற்றலைக் கொண்டது.

இது பசியைத் தூண்டவும், வயிற்று உப்புசத்தை அகற்றவும், வாயுக் கோளாறைக் குணப்படுத்தவும், மேலும் சில காளான்களையும், கிருமிகளையும் கொல்லவும் பயன்படுகிறது.

**மற்ற பயன்கள்:**

இதன் இலைகளிலிருந்து கிடைக்கும் எண்ணெய் இனிப்புக்கள், சோப்புக்கள் ஆகியவற்றிற்கு வாசனையூட்டவும், மூட்டு வலியைப் போக்கவும் பயன்படுகின்றது.

இந்தியாவில் ஆண்டுதோறும் தேவைப்படும் மரப்பட்டை 40,000 குவிண்டால் ஆகும். தென் இந்தியா, வங்காளம், அஸ்ஸாம், அந்தமான் ஆகிய இடங்கள் பயிர் செய்ய ஏற்ற இடங்களாகும்.

**மற்ற வகைகள்:**

இலவங்கப்பட்டையின் வேறுசில வகைகளும் அதிகம் பயன்படக்கூடியவை.

ஸின்னமோமம் காம்ஃபொரா (Cinnamomum Camphora)

(சூடமரம்) - இது இந்தியாவில் நீலகிரி மலையிலும், வட இந்தியாவின் சில தாவரவியல் தோட்டங்களிலும் பயிரிடப் படுகிறது. மரக்கட்டை மற்றும் இலைகளைக் காய்ச்சி வடிப்பதன் மூலம் சூடம் (கற்பூரம்) தயாரிக்கப்படுகிறது. இது

முக்கியமாக, சுளுக்கு, கட்டி, புண், வாத நோயால் ஏற்படும் வலி இவற்றைப் போக்கக் களிம்பாகப் பயன்படுகிறது. இது வயிற்றுப் போக்கிற்கும், இதயதுடிப்பைத் தூண்டவும் உள்ளுக்கு கொடுக்கப்படுகிறது.

சூடம் மற்றும் பலவகைகளில் பயன்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 5000 குவிண்டால் சூடம் இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படுகிறது. (சூடம் தற்போது துளசி இலையிலிருந்தும் தயாரிக்கப் படுகிறது).

தலிஸ்பத்திரி என்னும் மற்றொரு வகை (இந்தி - தேஜ்பத், சமஸ்கிருதம்-தாமல்பத்ர) இமயமலையின் மத்திய மற்றும் வெளிப் பகுதிகளிலும், ஓரளவு அஸ்ஸாம், வங்காளம் ஆகிய இடங்களிலும் கிடைக்கிறது. இலைகள் நறுமணமூட்டும் பொருள்களாகவும், பசியைத் தூண்டவும், சூலை, வயிற்றுப் போக்கு ஆகியவற்றை நீக்கவும் பயன்படுகின்றன.

1976-77 ஆம் ஆண்டுகளில் ரூ. 1.3 லட்சம் மதிப்புள்ள இலவங்க இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

## 24. இரணியதுத்தம் (Colchicum)

**விஞ்ஞானப் பெயர் :** கால்சிக்கும் லூட்டேஉம்
(Colchicum luteum)

குடும்பம் : லிலியேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — ஹிரன்தூத்தியா |
| காஷ்மீரி | — இர்க்கிம், மூண்ட் |
| பஞ்சாபி | — சுரன்ஜாம், கட்வி |
| சமஸ்கிருதம் | — ஹிரண்யதூத் |

வணிகப் பெயர் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது. இதன் இருபகுதிகளான விதைகளும், தண்டுக் கிழங்கும் வணிக ரீதியாக இரணியதுத்த விதை என்றும் இரணிய துத்தத் தண்டுக் கிழங்கு என்றும் அழைக்கப் படுகின்றன.

**விளக்கம்:**

ஆண்டு முழுவதும் காணப்படும் மூலிகைச்செடி; தண்டுக் கிழங்கு பழுப்பு நிறத்திலும், பெரும்பாலும் முக்கோண வடிவிலும், ஒரு பக்கம் தட்டையாகவும், மற்றொரு பக்கம் உருண்டும் இருக்கும். இலைகள் மிகவும் குறுகியவையாக, நுனி நோக்கி அகலமாக இருக்கும்; பழுக்கும் பருவத்தில் இவை வளர்ந்து 15.30 செ.மீ. நீளத்திலும் 0.8 - 1.5 செ.மீ. குறுக்கு வெட்டில் அகன்றும் காணப்படும். பூக்கள் பெரியவை யாக 2.5-4 செ.மீ. குறுக்கு வெட்டிலும், 7-10 செ.மீ. நீளத்திலும், மஞ்சளாகவும் காணப்படும். பழங்கள் 2.5 - 4 செ.மீ. நீளத்திலும், பழத்தின் நுனிப் பகுதி உள் வளைந்தும் காணப்படும்.

**விளையும் இடம்:**

இது இமயமலையின் வடமேற்குப் பகுதியில் 700 - 2800 மீ. உயரம் வரை உள்ள பகுதிகளிலும் பொதுவாகக் காட்டின் வெளிப்பகுதிகளிலும் அல்லது பசுமையான திறந்தவெளிப் பிரதேசங்களிலும் காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

பூக்கும் காலத்திற்கு முன்பே இளம் தண்டுக் கிழங்குப் பகுதிகளிலிருந்தும், பின்னர் பழுத்து உலர்ந்த விதைகளிலிருந் தும் மருந்து தயாரிக்கப்படுகிறது.

தண்டுக் கிழங்குகளில் கோல்சிசின் என்னும் கடுகிச் செயல் புரியும் மூலப்பொருள் அடங்கியுள்ளது. இது சூலை நோய், கீல்வாதம் முதலியவற்றால் ஏற்படும் வலியை அழற்சியையும் தடுக்க உதவுகிறது. இதைக் குறிப்பிட்ட அளவு நீண்ட நாட்களுக்கு கொடுத்து வந்ததில் 60 சதவீத நோயாளிகள் பயனடைந்துள்ளனர் என்று மருத்துவப் பரிசோதனைகள் கூறு கின்றன. இருப்பினும், இதைத் தனியாக உபயோகித்தால் குடலில் கடுமையான எரிச்சல் உண்டாவதால் இது பெல்ல டோனாவுடனோ ஹையோசியமஸ்ஸுடனோ சேர்த்துக் கொடுக் கப்படுகிறது.

விதைகளில், முக்கியமாக விதையின் மேலுறையில், கோல் சிசின் உள்ளது. இதுவும் தண்டுக்கிழங்கைப் போலவே செயல் புரிகிறது. கோல்சிசின் புற்றுநோய்த் திசுக்களை பிரியாமல் தடுப்பதுடன், அத்திசுக்களை எக்ஸ்ரேயின் மூலம் நன்கு

பார்க்கவும் உதவி செய்கிறது. இத்தகைய சோதனை முயற்சிகள் சில சோதனைக் கூடங்களில் மேற்கொள்ளப் பட்டிருப்பினும், நடைமுறையில் இன்னும் இதை உபயோகப்படுத்த ஆரம்பிக்க வில்லை.

இந்தியாவின் தற்போதைய ஆண்டுத் தேவை 25 குவிண்டால் ஆகும். இது 1500 - 3000 மீ. வரை உயரம் உள்ள இமயமலைப் பகுதிகளிலும் வளர்க்கப்படக்கூடும்.

**மற்ற பயன்கள்:**

தாவரப் பரிசோதனைக் கூடங்களில் கோல்சிசின் அதிகம் உபயோகப்படுத்தப்படுகிறது. இது அடிப்படை குரோமசோம அதிகரிக்க உதவுகிறது'

## 25. கோப்டிஸ் (Coptis)

**விஞ்ஞானப் பெயர் :** கோப்டிஸ் டீட்டா வால் (Coptis teeta Wall)

குடும்பம் : ரானன்குலேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — மாமிரா, மிஷ்மி டீட்டா |
| அஸ்ஸாமி | — டீட்டா |
| வங்காளி | — டீட்டா |
| மிஷ்மி | — அராங்க், பாவா |

சாதாரணமாக வழங்கும் இடப் பெயரை ஒட்டியே இதன் பொதுப்பெயர் அமைந்துள்ளது.

**விளக்கம்:**

சிறிய, தண்டில்லாத மூலிகையாகும். தண்டுக்கிழங்கு மரம் போன்று கடினமாகவும், தங்க மஞ்சள் நிறத்திலும், அடர்த்தி யான வேர் முடிகளுடனும், கசப்பாகவும் இருக்கும். இலைகள் கூட்டாகவும், சிற்றிலைகள் 5-7.5 செ.மீ. நீளத்திலும், நீள் வட்ட வடிவில், ஈட்டித்தலை போன்றும் இறகு வடிவிலும் காணப் படும். சிறிய, ஒழுங்காக அமைந்த வெள்ளை நிறமுள்ள 1-3 பூக்களைக் கொண்டிருக்கும். பழங்கள் பல விதைகளுடன்

விதையுறைகளையுடையவை; விதைகள் கருப்பாய் இருக்கும்.

**விளையும் இடம்:**

அருணாசலப் பிரதேசத்தைச் சேர்ந்த பிஷ்மி மலைப் பகுதியில் வெப்பமான பகுதிகளில் காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

'டீட்டா' என்றழைக்கப்படும் உலர்ந்த வேர் முண்டுகளிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இது சத்து மருந்தாகவும், பசியைத் தூண்டக் கூடியதாகவும் பலஹீனத்தைப் போக்கக் கூடிய மருந்தாகவும் பயன்படுகிறது. இடைவிட்டு இடைவிட்டு வரும் காய்ச்சலுக்கும் நல்ல பலன் தரக்கூடியதாகும்.

இதன் தீவிரச் செயலுக்குக் காரணம் இதிலுள்ள பெர்பெரின் வகையைச் சேர்ந்த் காரகுணமே ஆகும். இது ஏற்றுமதி மதிப்பு உடையது. இயற்கையாகக் கிடைக்கும் இதன் உற்பத்தி குறைந்துவிட்டதால் தற்போது ஏற்றுமதி செய்வது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. இதற்கு முன் இதன் ஆண்டு உற்பத்தி 40 குவிண்டால் ஆகும்.

தாலிக்டிரமும்(Thalictrum) பிக்ரோரிஸாவும் (Picrorhiza) இதில் பெரும்பாலும்' கலப்படம் செய்யப்படுவதுண்டு.

## 26. மரமஞ்சள் (Coscinium)

**விஞ்ஞானப் பெயர் :** காஸினியம் ஃபெனெஅஸ்ட்ரரட்டும் (Cosinium fenestratum)

குடும்பம் : மெனிஸ்பேர் மசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — ஜாடி ஹல்தி |
| வங்காளி | — ஹல்திகாச் |
| கன்னடம் | — மரமஞ்சலி |
| மராத்தி | — வெனிவேல் |
| சமஸ்கிருதம் | — தாருஹரித்ரா |
| தெலுங்கு | — மனுபசுபு |

**விளக்கம்:**

மிகப் பெரிய மரங்களைப் பற்றிப் படரும் குத்துச் செடியாகும். பட்டை மஞ்சளாகவும், இளஞ்செடியில் அடர்த்தியான மயிரிழைகளுடனும் காணப்படும். இலைகள் தோல்போன்றும், பளபளப்பாகவும், மேல்பகுதி மென்மையாகவும் கீழ்ப்பகுதி லேசான மயிரிழைகளுடனும், 5-7 நரம்புகளுடனும், வட்ட வடிவிலும், நுனிப்பகுதியை நோக்கிச் சிறுத்தும் காணப்படும். பூக்கள் சிறியவையாகவும், சிறு சிறு கொத்தாகவும் காணப் படும்

**விளையும் இடம்:**

இது தென்னிந்தியாவில், முக்கியமாக மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இச்செடியின் உலர்ந்த நடுத்தண்டிலிருந்து மருந்து தயாரிக் கப்படுகிறது. இதில் பெர்பெரின் கலந்துள்ளது.

இம்மருந்து காய்ச்சலுக்கும், பொதுவான உடல் பலகீனத் திற்கும், சில வகை அஜீரணத்திற்கும் பயன்படுகிறது. இது சீழ் எதிரியாகக் கருதப்படுவதால் காயங்களுக்கு மேற்பூச்சாக உபயோகிக்கப்படுகிறது.

இச்செடியின் வேர்களுக்கும் சீழெதிர்த்தன்மை உள்ளது நிரூபிக்கப் பட்டுள்ளது.

**மற்ற பயன்கள்:**

இதன் நடுத் தண்டிலிருந்து மஞ்சள் சாயம் தயாரிக்கப்பட்டு, அது தனியாகவோ மஞ்சளுடன் சேர்த்தோ உபயோகிக்கப் படுகிறது.

## 27. குராரம் (Costus)

**விஞ்ஞானப் பெயர் :** கூஸ்டஸ் ஸ்பீசியோஸஸ் (Costus speciosus)

குடும்பம் : ஜின்ஜிபெரேசியே

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — கீயு |
| வங்காளி | — குஸ்ட் |
| குஜராத்தி | — பொகராமுல் |
| கன்னடம் | — செங்கல்வகோஸ்து |
| மலையாளம் | — கோயட்டம் |
| மராத்தி | — பென்வா |
| பஞ்சாபி | — கியோலி |
| சமஸ்கிருதம் | — குஷ்ட |
| தெலுங்கு | — கிமுகா |

**விளக்கம்:**

பக்கவாட்டில் காணப்படும் வேர் முண்டுகளுடன் கூடிய நீண்டு, செங்குத்தாகக் காணப்படும் மூலிகையாகும். இலைகள் 15-30 செ.மீ. நீளத்துடனும், இலைக் காம்பு இல்லாமலும் மென்மயிருடனும் பூக்கள் வெண்மையாக, பூவடிச் செதிலு டன், நீள் உருளை வடிவில் 5-13 செ.மீ. நீளமுள்ள காம்பிலிகளு டன் அடர்த்தியாகக் காணப்படும். பழங்கள் சிவப்பாக, முக்கோண வடிவில் (2 செ.மீ. குறுக்களவு) காப்புறைகளுடன் காணப்படும்; விதைகள் கரியவை.

**விளையும் இடம்:**

இத்தாவரம் இந்தியா முழுவதும், சிறப்பாக, சமவெளிகளி லும் 1200 மீ வரை உயரமுள்ள இடங்களிலும் காணப்படு கிறது. புறம்போக்கு மற்றும் உபயோகத்திலுள்ள நிலங்களி லும் இதைக் காணலாம். இது அழகிற்காகவும், இதன் வேர் முண்டுகளுக்காகவும் வளர்க்கப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

புதிய மற்றும் உலர்ந்த வேர் முண்டுகளிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இதன் வேண்முண்டுகள் வழவழப்பாக வும், லேசான துவர்ப்புடனும் கூடியவை. இது பேதி மருந்தாக வம், சத்து மருந்தாகவும் உபயோகப்படுத்தப் படுகிறது. இதன் வேர்கள் பேதியைக் கட்டுப்படுத்தக் கூடியதென்பர். உத்தரப் பிரதேசத்தில் சத்து மருந்தாகவும் புழுக்கொல்லியாகவும் மேலும் இணைவிழைச்சினைத் தூண்டும் பொருளாகவும் பயன் படுகிறது. இதன் வேர் சளிக்காய்ச்சலுக்கும் இருமலுக்கும்,

அஜீரணத்திற்கும், புழுக்கள், தோல் வியாதிகள், பாம்புக் கடி ஆகியவற்றிற்கும் கூடப் பயன்படுகிறது.

இது ஸ்டிராய்டு உற்பத்திக்குப் பயன்படும் தனிப்பட்ட ஒரு ரகமாகும். எனினும் இதில் டையோஸ்ஜெனின் டையோஸ் கோரியா ரகத்தில் உள்ளதை விடவும் குறைவு.

மலட்டுத் தனத்தை அதிகரித்தல், எரிச்சலூட்டாத தன்மை மற்றும் வாதத்தைக் குறைத்தல் (arthritis) ஆகிய இயல்புகளை இம்மருந்தில் உள்ள ஸ்டிராய்டுகள் பெற்றிருப்பதுடன், அவை மயக்கத்தை உண்டு பண்ணக் கூடியவையென்றும், பரிசோதனைகள் மூலம் தெரிய வந்தள்ளது.

வேர் முண்டுகளில் உள்ள காரகுணங்கள் பிடிப்பைத் தளர்த்தவும், இதய சத்து மருந்தாகவும், ஹைடிரோ குளோரைடை அதிகப்படுத்தவும், சிறுநீரைப் பெருக்கவும் செய்கின்றன. மேலும் நடு நரம்பு மண்டலத்தில் ஏற்படும் அழுத்தத்தைக் குறைக்கவும் பயன்படுகின்றன.

**மற்ற பயன்கள்:**

வேர்முண்டுகள் சமைத்தபின் சாப்பிடக் கூடியவை; இதில் மாவுச் சத்து நிறைந்துள்ளது. ஆனால், பிற கிழங்குவகை உணவோடு ஒப்பிடும்போது இதிலுள்ள நார்ப்பொருள் அதிக மானது.

## 28. சிம்போபோகன் (Cymbopogon)

**விஞ்ஞானப் பெயர்** : சிம்போபோகோன் (Cymbopogon martinii) வண்ணப்படம்: 1

குடும்பம் : கிராமினியே

சிம்போபோகோனின் சில வகைகள் இந்தியாவில் வளர்கின்றன; மேலும் சில வகைகள் பயிரிடப்படுகின்றன. இவ்வகைகளின் மருத்துவப் பண்புகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ள போதிலும், இவை அதிக முக்கியத்துவமில்லாதவை.

சிம்போபோகோன் வகையைச் சேர்ந்த புற்கள் நீண்டு வளரும் மூலிகைகளாகும். இவை வாசனையுடன் கூடியவை. இதிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் மணமூட்டும் பொருளாகப் பயன்படுகின்றது. மருத்துவ ரீதியாக முக்கியமான சில

வகைகள் பின்வருமாறு.

**சிம்போபோகோன் சிட்ராட்டஸ்** (Cymbopogon citratus)

இந்தியாவின் பல பகுதிகளிலும் ஸ்டாப் வளர்கிறது. இதிலிருந்து கிடைக்கும் எண்ணெய் மேற்கு இந்திய எலுமிச்சைப் புல் எண்ணெய் ஆகும். இதன் இலேயின் வடிசாறு தேநீருக்கு மாற்ருக ஓர் உற்சாகமூட்டும் பானமாகக் கருதப்படுகிறது.

**சிம்போபோகன் ஃப்ளெக்சுவோஸஸ் வாட்சன்** (Cymbopogon flexuosus)

இது தென்னிந்தியாவிலும் உத்தரப்பிரதேசத்திலும் காஷ்மீரிலும் கிடைக்கிறது. இதிலிருந்து எலுமிச்சைப் புல் எண்ணெய் எடுக்கப்படுகிறது. இதில் வைட்டமின் ஏ நிறைந்துள்ளது. கேரளாவில் இவ்வகைப் புல் தோட்டங்கள் உள்ளன. வாசனைத் திரவியமாகவும் உபயோகப்படுத்தப் படுகிறது

**சிம்போபோகன் மார்ட்டினி வாட்சன்** (Cymbopogon martinii)

இந்தியில் ரோகிண், கந்தேல், மிர்ச்சியாகந்த் என அழைக்கப்படும் இது இந்தியாவின் வறண்ட பகுதிகளில் காணப்படுகிறது. இதிலிருந்து கிடைக்கும் ரோஷா எண்ணெய் இடுப்பு வலி, தலே வழுக்கை மற்றும் தோல் வியாதிகளேப் போக்கப் பயன்படுகிறது. பித்தக் கோளாறுகளேக் குறைக்க இது உட்கொள்ளப்படுகிறது. இது கொசுத் தொல்லேயிலிருந்து பாதுகாக்க மேற் பூச்சாகப் பயன்படுகிறது.

**சிம்போபோகஸன் நார்டுஸ்** (Cymbopogon nardus)

ரெண்டில் இந்தியாவின் பல பகுதிகளிலும், முக்கியமாக தென்னிந்தியாவிலும் காணப்படுகிறது. இதிலிருந்து கிடைக்கும் சிட்ரொனெல்லா எண்ணெய், பூச்சிக் காப்புக்கான மேற்பூச்சாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் ஆண்டுதோறும் தேவைப்படும் சிட்ரோனெல்லா எண்ணெய் 200 குவிண்டால் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ரூ. 1 கோடி 10 லட்சம் மதிப்புள்ள எலுமிச்சம் புல் எண்ணெய் 1976-77ல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

## 29. ஊமத்தை (Datura)

**விஞ்ஞானப் பெயர் :** தத்தூரா ஸ்ட்ராமோனியம்
(Datura Stramonium L.)

குடும்பம் : சோலனேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | — | *தத்தூரா* |
| வங்காளி | — | *ஷேட் தத்தூரோ* |
| குஜராத்தி | — | *தேலோ தத்தூரோ* |
| மலையாளம் | — | *ஊமத்தை* |
| பஞ்சாபி | — | *தத்தூரா* |
| சமஸ்கிருதம் | — | *தத்தூரா* |
| தெலுங்கு | — | *தத்தூரமு* |

இதன் வணிகப் பெயரான ஊமத்தை, ஸ்டிராமோனியம் ஆகியவை இதன் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டவை. பழைய இந்திய இலக்கியங்களில் இது சிவசேகரம் எனக் குறிக்கப்பட்டுள்ளது; ஏனென்றால், இதன் பூ சிவபெருமானுடன் தொடர்புடையதாகக் கருதப்பட்டது.

**விளக்கம்:**

*1 மீ.* உயரமுள்ள புதர் போன்று வளரும் தாவரமாகும். இலைகள் பெரியவையாக நீள்வட்ட வடிவில் பற்களுடன் காணப்படும். பூக்கள் மிகப் பெரியதாகவும் வெண்மையாகவும் காணப்படும். பழங்கள் நீள் வட்ட வடிவில் நான்காகப் பிரிக்கப்பட்டு, பெரிய அல்லது சிறிய முள் கற்றைகளுடன் காணப்படும்.

**விளையும் இடம்:**

இத்தாவரம் இமயமலையில் 2500 மீ. உயரம் வரையிலும், மத்திய மற்றும் தென் இந்திய மலைப் பிரதேசங்களிலும் காணப்படும்.

*மருத்துவப் பண்புகள்:*

உலர்ந்த இலைகள், பூக்கும் மேற்பகுதி, விதைகள் ஆகியவற்றிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது.

இதன் முக்கிய மூலப்பொருள் இலைகளிலுள்ள ஹைஹயோசயமின் ஆகும். எனவே, இது மருத்துவ ரீதியாக பெல்லடோனு அல்லது ஹைஹயோசாயமஸ் போன்றே பயனுகிறது. இது மூச்சுக் குழல் அழற்சி அல்லது காசநோய்க்கு ஏற்றது. உமிழ்நீரைக் கட்டுப்படுத்தவும் பயன்படுகிறது. பசியைக் குறைக்கவும், மரமரப்பூட்டவும் பயன்படுகிறது. இலைகளை எரித்துப் புகையை உள்ளிழுப்பதும் காசநோயைக் குறைக்க உதவும். விதைகளிலும் ஹைஹயோசயமின் உள்ளதால் அதுவும் இலையைப் போன்றே பயன்படுகிறது.

*மற்ற வகைகள்:*

இதன் மற்ற இரு வகைகளும் கூட மருத்துவப் பயனுள்ளவை.

*(1) கருப்பு ஊமத்தை:*

இது இந்தியா முழுவதும் புறம்போக்கு இடங்களில் காணப்படுகிறது. இதன் பூக்கள் வெள்ளையாகவோ மஞ்சளாகவோ (சில சமயங்களில் வெளிப் புறத்தில் ஊதா நிறமாக) இருக்கும். பழங்கள் குறுமுட்களுடன் கூடியவை. பயிர் செய்யப்படும் இடங்களில் பூவின் அல்லிவட்டம் இரண்டு சுற்றுக்களை உடையது.

மார்பில் அதிகப் பால் சுரப்பதால் ஏற்படும் எரிச்சலை இதன் இலைகளைக் கொண்டு கட்டிய பதவாடை குணப்படுத்தும். இலைகளும், விதைகளும் ஸ்டிராமோனியத்தைப் போன்று அதே குணங்களைக் கொண்டவை.

*(2) இனுக்ஷியா ஊமத்தை:*

இது இந்தியாவிற்கு வெளியில் இருந்து கொண்டு வரப்பட்ட போதிலும், இந்தியா முழுவதும் இன்று காணப்படுகிறது. அல்லி வட்டம் 10 இதழ்களையும், பழங்கள் மெல்லிய முட்களையும், பழுப்பு நிற விதைகளையும் கொண்டது. இதன் இலைகளும் ஸ்டிராமோனியத்தைப் போன்ற குணம் கொண்டவை. இதனை மிகுதியாகப் பயிர் செய்வது வற்புறுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் இதன் ஆண்டுத் தேவை 40 குவிண்டால் ஆகும்.

# 30. டிஜிட்டாலிஸ் (Digitalis)

**ஆங்கிலப் பெயர்:** ஃபாக்ஸ்கிளவ் (Foxglove)
**விஞ்ஞானப் பெயர் :** டிஜிட்டாலிஸ் பூர்பூரேஆ (Digitalis purpurea)
**குடும்பம் :** ஸ்க்ரோஃபுலரியேசி (Scrophulariaceae)
**இந்தியப் பெயர்:** இந்தி — தில்புஷ்பி

வணிகப் பெயர் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது. இதன் இந்திப் பெயரான தில் புஷ்பி, இது தில் தாவரத்தை (சிசாமம் இன்டிகம் Sesamum indicum) ஒத்திருப்பதை வைத்து அழைக்கப்படுகிறது.

**விளக்கம்:**

1.2 மீ உயரமுடைய, ஆண்டு முழுவதும் அல்லது ஆண்டிற்கு இருமுறை வளர்கிற மூலிகையாகும். கீழ்ப்பகுதி இலைகள் நீண்ட காம்புடனும், நீள்வட்ட வடிவுடனும், 15-30 செ.மீ. நீளத்துடனும், மேல்பகுதி இலைகள் காம்பு இல்லாமலும், மேல் நோக்கிச் சிறியவையாகவும் காணப்படும். பூக்கள் 5-8 செ.மீ. நீளத்துடனும் வெள்ளை அல்லது பழுப்பு நிறத்துடனும், மடல்கள் மயிரிழைகளுடனும் 30-60 செ.மீ. நீளத்தில் ஒரு பக்கக் கொத்தாகக் காணப்படும். பழங்கள் நீள் வட்ட வடிவானவை.

**விளையும் இடம்:**

இது இந்தியாவிற்கு உரியதன்று. இது முக்கியமாக வட இந்தியாவின் மலைப் பகுதிகளில் (காஷ்மீர்) பயிர் செய்யப்படுகிறது. இது டார்ஜிலிங்க், நீலகிரி முதலிய இடங்களில் பயிர் செய்யப்பட்டாலும், இப்போது இது வளர்ப்பது கைவிடப்பட்டுள்ளது. இதை வளர்ப்பது கைவிடப்பட்டாலும், சில இடங்களில் இது தானகவே வளரத் தொடங்கியுள்ளது.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த இலைகள் மருத்துவப் பண்புடையவை. இலைகள் சேகரிக்கப்பட்டவுடன் $60^{o}C$ சூடுபடுத்தப் படுகின்றன.

இது இதய நோய்களுக்கு முக்கியமாகப் பயன்படுகிறது. இம்மருந்து எல்லாத் .தசை திசுக்களேயும் செயல்புரியத் தூண்டுகிறது: மட்டுமீறிய குருதித் திரட்சியுடன் கூடிய இதய நோய்களுக்கு இம்மருந்து பயன்படுகிறது.

டிஜிட்டாலிஸ் அதிக ரத்தத்தை நெஞ்சுப் பகுதிக்கு அனுப்பி, இதயத்திற்கு வலுவூட்டுகிறது. ரத்தச் சுழற்சி கெட்டு, மகோதரம் ஏற்படும்போது, இது இதயத்தின் செயலே ஒழுங்குபடுத்தி மீண்டும் பணிபுரியச் செய்கிறது.

சிறு நீரகங்களுக்கு அதிக ரத்தத்தை அளித்து சிறுநீரை அதிக அளவில் வெளியேற்றுவதன் மூலம் சிறுநீரகத்தில் ஏற்படும் தடைகளே நீக்குகிறது. டிஜிட்டாலிஸ் களிம்பாகச் சில காயங்களுக்கும், தீப்புண்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும் இம்மருந்தின் நீண்ட கால உபயோகத்திஞல் தலேவலி, நடுக்கத் தன்மை முதலியவை ஏற்படக்கூடும். இந்த பக்க விளேவுகள் கவனிக்கப்பட வேண்டியவை.

**மற்ற வகைகள்:**

மற்ற வகையான டிஜிட்டாலிஸ் லாஞட்டா காஷ்மீரில் தோட்டச் செடியாக வளர்க்கப்படுகிறது. இதன் பூக்கள் சிறியவையாகவும், மயிரிழைகளுடன் கூடியதாகவும் மஞ்சள் அல்லது பழுப்பு நிறத்துடனும் காணப்படும். இத்தாவரம் வலிமையான மருத்துவ குணம் கொண்டது. மேலும் இதன் பக்க விளேவுகள் டிஜிட்டாலிஸ் புர்புரேஆவைப் போன்று தீங்கிழைப்பதில்லே.

இந்தியாவில் இதன் மொத்த தேவை ஆண்டுக்கு 30 குவிண்டால் ஆகும்.

## 31. டியோஸ்கோரியா (Dioscorea)

**விஞ்ஞானப் பெயர் :** டியோஸ்கோரியா (Dioscorea)
குடும்பம்: டியோஸ்கோரியேசி

இது ஒரு பெரிய சுற்றி வளரும் மூலிகையாகும். சில வகைகளில் இதன் தண்டு வலது பக்கமாகவும் சிலவற்றில் இடது பக்கமும் சுற்றிக் காணப்படும். இலேகள் தனியாகவோ, கூட்டாகவோ காணப்படும். பெரும்பாலும் நரம்புகள் தெளிவாகத் தெரியும். நிலத்தண்டு பெரும்பாலான வகைகளில் முகிழுரு வேர்களேயும் கிழங்கு போன்று வட்ட வடிவமான

அல்லது வெவ்வேறு வகை அமைப்புடைய குமிழ்மொட்டுக் களையும் இலைக் காம்புகளில் கொண்டிருக்கும்.

50 வகைகளுக்கு மேற்பட்டவை இந்தியாவில் காணப்படு கின்றன. வள்ளிக் கிழங்கு போன்ற சில வகைகள் உணவுக் காகப் பயிரிடப்படுகின்றன.

டையோஸ்ஜெனினைப் போன்று இதிலும் அதிகமான 'ஸ்டி ராய்டோ-ஸபோஜெனின்' உள்ளதால் இது அதிகம் விரும்பப் படுகிறது. பாலியல் சுரப்பிகள் தயாரிக்கவும், கீல் வாதத்திற் குப் பயன்படும் மருந்துகள் தயாரிக்கவும் பயன்படும் கார்டி சோன் தயாரிக்க இது நம்பகமான மூலப்பொருளாகக் கருதப் படுகிறது.

**டியோஸ்கோரியா டெல்ட்டோய்டியா**

(பஞ்சாப்-கிரிஸ், கித்ர; காஷ்மீரி - கின்ஸ், கித்தி, கில்ட்ரி) வடமேற்கு இமயமலையிலிருந்து மத்திய இமயமலை வரை பரவியுள்ள படரும் கொடியாகும். இதன் தண்டுக் கிழங்கு களில் டையோஸ்ஜெனின் அதிகம் உள்ளது.

**டையோஸ்கோரியா பிரேஜேரி' (D. prazeri)**

கிழக்கு இமயமலைப் பகுதிகளிலும், வட பகுதிகளான பீகார், வங்காளம், நேபாளம், சிக்கிம், பூட்டான், அஸ்ஸாம் ஆகிய இடங்களிலும் கிடைக்கிறது. இது இந்தியாவின் மற்றப் பகுதிகளிலும் வெற்றிகரமாகப் பயிர் செய்யப்படுகிறது. இவற் றில் டையோஸ்ஜெனின் நிறைய உள்ளது.

**மற்ற பயன்கள்:**

வள்ளிக் கிழங்குகள் ஏழைகளுக்கும், மலைவாசிகளுக்கும் உணவாகவும் பயன்படுகின்றன.

**டியோஸ்கோரியா அலாட்டா (D. alata)**

(இந்தி & வங்காளி - கமாலு, சுப்ரி ஆலு; கன்னடம் - ஒந்தலேகாசு, துங்-கெனசு; மலையாளம் - காவத்து; தமிழ் - பெருவள்ளிக்கிழங்கு; தெலுங்கு - பெந்தாலமு)

மிகப் பெரிய படர் கொடியாகும்; உண்ணுதற்குரிய தண்டுக் கிழங்குகளுக்காக வளர்க்கப்படுகிறது. டியோஸ்கோரியா பல் பிஃபேரா (D. bulbifera) ஹிஸ்பிதா டென்னிஸ்ட் (hispida Dennst) மற்றும் டி. பெந்தாபில்லா (D. pentaphyalla) இந்தியா முழுவதும் காணப்படுகின்றன. இவற்றின் தண்டுக் கிழங்குப்

பகுதிகள் உண்பதற்கு, முறையான பக்குவத்துக்குப்பின் உபயோகிக்கப் படுகின்றன.

இதன் சில வகைகள் தொழில் முறையில் மாவுப் பொருள் தயாரிக்கப் பயன்படுகின்றன.

## 32. ஏலக்காய் (Cardamom)

**விஞ்ஞானப் பெயர் :** எலிட்டாரியா கார்டமோமம்
(Elettaria Cardamomum)

குடும்பம் : ஜின்ஜிபெரேசி

சித்திரம்-9

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — சோட்டி இலாய்ச்சி |
| வங்காளி | — சோட்டோ ஏலாச் |
| மலையாளம் | — ஏலம் |
| மராத்தி | — வெல்தொடே |
| சமஸ்கிருதம் | — ஏலம், உப்குன்சிகா |
| தெலுங்கு | — ஏலாகி |

**விளக்கம்:**

செங்குத்தான, தடித்த, சதைப்பற்றுடன் கூடிய கிளைகளான வேர் முண்டுகளைக் கொண்ட 3 மீ உயரம் வரை வளரக் கூடிய மூலிகையாகும். 30-90 செ.மீ. நீள இலைகள், குறுகியும், நடுவில் ஒரு பெரிய நரம்பும் கணக்கற்ற மெல்லிய பக்க நரம்புகளும் கொண்டவை; பூக்காம்பு பூமியையொட்டித் தண்டின் கீழ்ப்பகுதியில் ஆரம்பிக்கிறது. பூக்கள் 4 செ.மீ. நீளத்துடனும், வெண்மையாகவோ, வெளிறிய பசுமை நிறத் துட ஞ 30-90 செ.மீ. நீளமுள்ள கொத்துக்களில் காணப்படும். பழங்கள் 1.5 செ.மீ. நீளத்தில், வெளிறிய பசுமை நிறம் அல்லது மஞ்சள் நிறத்துடன், நீள்வட்ட வடிவில் 3 பிரிவுகளு டனும், பல விதைகளுடனும் காணப்படும். விதைகள் முக் கோண வடிவிலும், கரும்பழுப்பு நிறத்துடனும் காணப்படும். இச்செடியின் அளவு இடத்திற்குத் தக்கவாறும், பயிரிடப்படும் வகைக்கு ஏற்றவாறும் மாறுபடும். பழங்களும், விதைகளும்



ஏலக்காய்

ஏறக்குறைய ஒரே மாதிரியிருக்கும். பெரும்பாலும் கடைகளில் விற்கப்படும் ஏலம் கந்தகத்தால் சுத்தம் செய்யப்படுவதால் வெண்மை நிறத்தில் இருக்கும்.

**விளையும் இடம்:**

இது பெரும்பாலும் தென்னிந்தியாவில் மைசூர், கேரளா ஆகிய இடங்களில் மலைச் சரிவுகளிலும், ஈரக் காற்றுக் காடுகளிலும் கிடைக்கிறது. இது இந்தியாவில் வேறு சில இடங்களிலும் பயிரிடப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இச்செடியின் உலர்ந்த பழங்களிலிருந்து மருந்து தயாரிக்கப் படுகிறது. தேவைப்படும்பொழுது இப்பழத்தின் விதைகள் எடுக்கப்பட்டு அவையும் பயன்படுத்தப் படுகின்றன. இது பெரும்பாலும் செரிமான சக்தியை அதிகரிக்கவும், பேதி மருந்தாகவும், வாசனைப் பொருளாகவும் பயன்படுத்தப் படுகிறது. கிராம்பு, இஞ்சி, பெருஞ்சீரகம் ஆகியவற்றுடன் சேர்த்து இதைப் பொடியாக்கி உட்கொள்வது அசீரணக் கோளாறை நீக்கும்.

**மற்ற பயன்கள்:**

ஏலம் சமையலுக்கும், கேக் மற்றும் உணவுப் பொருட்கள் தயாரிக்கவும். ஏலக்காய் எண்ணெய் பானங்களுக்கு வாசனை ஊட்டவும் பயன்படுகின்றன.

1978-79இல் ரூ. 5 1/2 கோடி மதிப்புள்ள ஏலக்காய் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

## 33. எம்பிலியா (Embellia)

**விஞ்ஞானப் பெயர் :** எம்பெலியா - த்ஸ்ஜேரியம் கோட்டாம். எ.டிசி.
(Embelia tsjcriam cottam A.DC)

குடும்பம் : மீர்ஸினேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — *கயியா, புங்கி* |
| வங்காளம் | — *தாட்கீ - ஜான்ட்டீ* |
| மராத்தி | — *அம்பாடி, வாயிவடுங்க்* |
| ஒரியா | — *நூநூனியா* |
| சாந்தால் | — *பாப்ரி* |

வணிகப் பெயர் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

இது ஒரு குத்துச் செடி அல்லது சிறிய மரம். இளம் கிளைகள் பழுப்பு நிற மயிரிழைகளால் மூடப்பட்டிருக்க, வளர்ச்சியடைந்த கிளைகள் வழவழப்பாகக் காணப்படும். கிளைகள் கொழுப்புடன் கூடிய வெண்ணிறச் சுரப்பிகளுடையவை. இலைகள் 12 செ.மீ. நீளத்தில், இரு பக்கங்களிலும் குறுகலாகவும், சுரப்பி முழுவதும் புள்ளிகளுடனும், ஓரங்கள் பற்களுடனே, ஒரே மாதிரியாகவோ கீழ்ப் பகுதியில் சிவப்பாகவும், நரம்புகளில் மயிரிழைகளுடனும் காணப்படும். பூக்கள் சிறியவையாக வெளிறிய பசுமை நிறத்தில், குட்டையாகவும், இலைக் காம்புகளுடனும் அடர்த்தியான முடிகளுடனும் காணப்படும். பழங்கள் சிறியவை. உருண்டையாகவும் கூர்ப்பாகவும் பழுத்தவுடன் சிவப்பாகவும் இருக்கும்.

**விளையும் இடம்:**

இத்தாவரம் கிழக்கு இந்தியாவிலும், தக்காணப் பீடபூமியிலும் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த பழங்களிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இது நாடாப் புழுச் சிகிச்சைக்குப் பயன்படுகிறது. குறிப்பிட்ட அளவு இம்மருந்தைக் கொடுப்பதன் மூலம் நாடாப் புழுக்கள் கொல்லப்பட்டு, பேதி மருந்தின் மூலம் வெளியேற்றப்படுகின்றன. இது ஒரு மென்மையான மலமிளக்கி மருந்தாகும். சமீபத்திய பரிசோதனைகள் மூலம் இது நாடாப் புழுக்களுக்கே அன்றி உருண்டைப் புழுக்களுக்கும் கொக்கிப் புழுக்களுக்கும் ஏற்றதன்று என்பது கண்டறியப்பட்டது. இது மண் புழுக்களைக், கொல்வதுடன், 'அஸ்காரியாஸிஸ்'-உக்கு நல்ல ஒரு

மருந்தாகவும் பயன்படுகிறது. இம்மருந்து நுண்ணுயிர் எதிரி யாகும். க்ஷய ஒழிப்புக்கும் பயன்படுத்தப் படுகிறது.

**மற்ற வகைகள்:**

இதன் மற்றொரு வகையான எம்பெலியா ரீபெஸ் (Embelia ribes) இந்தியா முழுவதும் காணப்படுகிறது. எம்பெலியா ஜீரியம் கோட்டம் எந்தப் பெயர்களால் பொதுவாக அழைக்கப் படுகிறதோ, அதே பெயர்களால் இதுவும் அழைக்கப்படு கிறது. இதன் பழங்கள் இதே குணங்களைக் கொண்டுள்ளன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட எம்பெலியா மருந்தாகவும் இது பயன்படுத்தப் படுகிறது.

## 34. நெல்லிக்காய் (Emblica)

**(எம்பிலிக் மைரோபலான்)**

சித்திரம் - 10

**விஞ்ஞானப் பெயர் :** எம்பிலிகா அஃபிசினாலிஸ் அல்லது பைலான்தஸ் எம்பிலிகா (Emblica Officinalis Gaertn. syn. Phyllanthus emblica L.)

குடும்பம் : யூ ஃபார்பியேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — அயொன்லா |
| அஸ்ஸாமி | — சுக்ஞ ஆம்லகி |
| வங்காளி | — ஆம்லோகி |
| குஜராத்தி | — ஆம்டா, ராய் ஆம்லா(ன்) |
| மலேயாளம் | — ஆம்லகம், நெல்லி |
| மராத்தி | — ஆம்லா |
| ஒரியா | — ஆவ்டா |
| சமஸ்கிருதம் | — ஆம்லிகா |

இதன் வணிகப் பெயர் இதன் அறிவியல் பெயரை அடிப்ப டையாகக் கொண்டது. எம்பிலிக் மைரோபலான் என்பது இதன் மூன்று முக்கிய வகைகளும் ஒன்றாகும்.



நெல்லிக்காய்

**விளக்கம்:**

குறிப்பிட்ட காலத்தில் இலையுதிர்க்கக் கூடிய, சிறிய அல்லது நடுத்தர உயரமுடைய மரம். இலைகள் சிறியவையாக 10-13 மி.மீ. நீளத்துடனும், 2-3 மி.மீ. அகலத்துடனும் காணப்படும். நெருக்கமாகக் காணப்படும். இறகு வடிவிலான இலைகளையுடையவை; கிளைகள் இறகுகளைப் போன்ற தோற்ற முடையவை; ஆண், பெண் பூக்கள் ஒரே மரத்தில் காணப் படும்; பூக்கள் வெளிறிய பசுமை நிறத்தில் பொதுவாக இலைகளுக்குக் கீழ்ப்புறத்தில் சிறிய அடர்த்தியான கொத்தாகக் காணப்படும். ஆண் பூக்கள் சிறியவையாகவும் சிறிய இலைக் காம்புகளுடனும் கணக்கற்றும் காணப்படும். பெண் பூக்கள் குறைவாக, சிறிதாகக் காணப்படும். பழங்கள் 1.5-2.5 செ.மீ. குறுக்களவிலும் சதைப்பற்றுடனும், உருண்டையாகவும் ஆறு பிரிவாகப் பிரிந்தும் வெளிறிய பசுமை நிறத்திலோ மஞ்சளாகவோ, 6 விதைகளுடன் காணப்படும். விளை நிலங்களில் காணப்படும் பழங்கள் பெரியவை.

**விளையும் இடம்:**

இந்தியாவின் வெப்ப மண்டலப் பிரதேசத்தில் நில நடுக் கோட்டுக்கு அருகில் காணப்படுகிறது. இது அதிகமாக மத்தியப் பிரதேசத்தின் இலையுதிர் காடுகளில் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இதன் புதிய மற்றும் உலர்ந்த பழங்களிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இதன் பழங்கள் இந்தியாவின் புகழ் பெற்ற ''த்ரிஃபலம்'' எனப்படும் மும்மருந்து அடங்கிய (மற்ற இரண்டு பஹேடா, ஹர்ரா) கூட்டுப் பொருள் தயாரிக்கப் பயன்படுகிறது. இது பேதி மருந்தாகவும், ஈரல் பெருக்கம், மூலம், வயிற்றுக் கோளாறுகள், கண்வலி போன்றவற்றை நீக்கவும் பயன்படுகிறது.

இம்மருந்து ஒரு நல்ல ஈரல் சத்து மருந்தாகும். புதிய பழங்கள் குளிர்ச்சியையும், சிறிதளவு பேதித்தன்மையையும் ஏற்படுத்தும். இதன் பழத்திலிருந்து புளிப்பேற்றித் தயாரிக்கப் பட்ட மருந்து அஜீரணம், ரத்தசோகை, மஞ்சள்காமாலை, சில இதய நோய்கள், தடுமன், சிறு நீர்ப்பெருக்கம் ஆகியவற்றைக் குறைக்கின்றன. இதில் உயிர்ச்சத்து 'சி' இருப்பதால் வைட்டமின் 'சி' குறைவால் ஏற்படும் ஸ்கர்வி போன்ற போன்ற நோயைத் தவிர்க்கிறது. நுரையீரல் சார்ந்த காச நோயை,

செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட வைட்டமின் 'C' மருந்தை விட இயற்கையில் நெல்லிக்காயிலிருந்து கிடைக்கும் மருந்து உடனடியாகக் குறைத்துவிட்டதை பரிசோதனைகள் மூலம் மருத்துவமனையில் கண்டுள்ளனர். இதில் உள்ள சில புதிய பொருட்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். உலர்ந்த பழங்கள் வயிற்றுப் போக்கிற்கும், வயிற்றுக் கடுப்புக்கும் சிறந்த மருந்தாகும். நெல்லிக்காய் ஊறுகாய்களும் கூட இந்திய மருத்துவத்தில் உபயோகிக்கப்படுகின்றன.

பூக்கள், வேர்கள் மற்றும் வேர்ப்பட்டைகளும் கூட மருத்துவ குணம் மிக்கவை. விதைகள் கபம் மற்றும் வயிற்றுக் கோளாறுகளைக் குணப்படுத்துகின்றன.

*மற்ற பயன்கள்:*

பழங்கள் அதிகமாக மசி தயாரிக்கவும், தலைகழுவி நீர்மம் தயாரிக்கவும், பட்டைகளுடன் சேர்த்து பதத்துவர், சாயங்கள் தயாரிக்கவும் பயன்படுகின்றன. இதன் மரங்கள் வீட்டு மராமத்து வேலைகளுக்கும் நீரால் இவை விரைவில் பாதிக்கப்படாததால் கிணறு தோண்டும்பொழுதும் பயன்படுத்தப்படுகின்றன. இலைகள் ஏலச்செடிகளுக்கு உரமாக இடப்படுகின்றன. இவை மண்ணின் அமிலச் சத்தைப் பெருக்கவும் பயன்படுகின்றன.

1977-78இல் ரூ. 1.7 லட்சம் மதிப்புள்ள இம்மரம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

## 35. எஃபெட்ரா (Ephedra)

**விஞ்ஞானப் பெயர்** : எஃபெட்ரா ஜெரார்டியானா (Ephedra gerardiana)

குடும்பம்: நீட்டேசி

***இந்தியப் பெயர்கள்:***

இந்தி — *அஸ்மானியா, ஃபோக், கந்தா*
பஞ்சாபி — *புத்சுர்*
ஜவுன்சார் — *தூத்காண்ட்டா*

வணிகப் பெயர் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

1 மீ. உயரமுள்ம சிறிய குத்துச் செடியாகும். தண்டின் கீழ்ப்பகுதி கடினமாகவும், அதிகக் கிளைகளுடனும் காணப் படும். கிளைகள் பெரும்பாலும் சுற்றடுக்காகவும் ஆரம்பத்தில் செங்குத்தாகவும், பின்னர் மேல்நோக்கி நிமிர்ந்தும் காணப் படும். இலைகள் 2 பற்களுள்ள உறைகளாகக் குறைக்கப்பட்டுள் ளன. ஆண் பூக்கள் எண்ணிக்கையில் குறைவாக நீள்வட்ட காம்பிலிகள் காணப்படும். பெண் பூக்கள் 1-2 வரை, குறுங் காம்பிலிகளில் தோன்றும் பழங்கள் 7-10 மி.மீ. நீளத்துடனும், நீள் வட்டவடிவிலும், சிவப்பாகவும், சுற்றிலும் சாறுகட்டிய பூவடிச் செதிலுடனும் காணப்படும்.

**விளையும் இடம்:**

இது இமயமலையில் 2000-4000 மீ. உயரத்தில் வறட்சியான பகுதிகளில் காணப்படுகிறது. சில இடங்களில் இது பயிரிடப் படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இதன் உலர்ந்த தண்டிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இதிலிருந்து கிடைக்கும் 'எ ஃபட்ரின்' ஆஸ்துமாவை, குறிப் பாக, மூச்சுக்குழல் ஆஸ்துமாவைக் குணப்படுத்தப் பெரிதும் பயன்படுகிறது. மூச்சுக்குழல் அழற்சியைக் குணப்படுத்த இது வாய்மூலமாக அல்லது ஊசி மருந்தின் மூலமாக உட்கொள் ளப்படுகிறது. இது இதயத் துடிப்பைத் தூண்டும் மருந்தாக வும், சில நேரங்களில் நிமோனியா, டிஃப்தீரியா ஆகியவற் றால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்கவும் உதவுகிறது. இதயத் துடிப்பைத் தூண்டுதலில் எ ஃபட்ரா மிகவும் சக்தி வாய்ந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இது ஒவ்வாமை (allergy) யால் ஏற்படும் தும்மல், சொறி ஆகியவற்றைக் குணப்படுத்தப் பயன்படுகிறது. இதிலிருந்து தயாரிக்கப்படும் பல மருந்துகள் இன்று மருத்துவத் துறையில் பயன்படுகின்றன. புரையழல் ஆஸ்துமா பாதிப்பு, சளிச் சவ்வுகளில் ஏற்படும் அரிப்பு இவற்றைப் போக்க மூக்குத் தெளிப்பான்கள் மூலமும் இம்மருந்து பயன்படுத்தப் படுகிறது.

இம்மருந்து சிறுநீரகப் பைகளில் சில மாற்றங்களை ஏற்படுத் துவதால் உறக்கத்தில் சிறுநீர் கழிக்கும் குழந்தைகளுக்குக்

கொடுக்கப்பட்டு, அது தவிர்க்கப்படுகிறது.

இதை அதிகமாக உட்கொண்டால் ஒற்றைத் தலைவலி, வியர்வை, சில தோல் வியாதிகள் முதலியன ஏற்படலாம்.

*மற்ற வகைகள்:*

எஃபெட்ராவின் மற் ருரு வகையான பெரிய எஃபட்ரா லாகூலில் (Lahul) கிடைக்கிறது. இது எஃபெட்ரா ஜெரார்டியாவை விட அதிகக் காரகுணம் கொண்டது. இவ்விரண்டின் கிளைகளும் எஃபெட்ரா மருந்து தயாரிக்கப் பயன்படுகின்றன. இம்மருந்தின் ஒழுங்கான வரத்து உறுதிப்பட, இவ்விரு வகைச் செடிகளையும் அல்லது சீன வகையான எஃபெபட்ரா எக்விஸெடிஞ (E. equisctina) மற்றும் எஃபெட்ரா ஸினிகா (E. sinica) இரண்டையும் பயிரிட வேண்டும். வட இமயமலையின் உயர்ந்த மலைச் சரிவுகளில் - காஷ்மீர், பஞ்சாப், ஹிமாசல பிரதேசம், உத்திரப் பிரதேசம் - போன்ற இடங்களில் எஃபெட்ரா வகைகள் பயிரிடப் படுகின்றன.

*1977-78இல் 30 லட்சம் ரூபாய் மதிப்புள்ள எஃபெட்ரா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.*

## 36. அம்மான் பச்சரிசி (Euphorbia)

**விஞ்ஞானப் பெயர் :** யூஃபார்பியா ஹிர்டா (Euphorbia hirta L.) *சித்திரம்: 11*

குடும்பம்: யூஃபோர்பியேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | — | *லால் தூதி* |
| வங்காளி | — | *பரகேரு* |
| குஜராத்தி | — | *துதேலி* |
| மலையாளம் | — | *நீலப்பாலை* |
| மராத்தி | — | *மோட்டி, தூதி* |
| சமஸ்கிருதம் | — | *நாகார்ஜுனி, புலிதோஆ* |
| தெலுங்கு | — | *நாஞபலா* |

வணிகப் பெயர் இதன் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது.




அம்மான்பச்சரிசி

**விளக்கம்:**

50 செ.மீ. உயரமுடைய செங்குத்தான வளர்ச்சியுடைய ஆண்டு முழுவதும் காணப்படும் மூலிகையாகும். இதன் தண்டு வட்டமாகவும் மஞ்சள் நிற முடிகளால் சூழப்பட்டும் இருக்கும். இலைகள் எதிரெதிரில் இணையாக, சிறியவையாக, 4 செ.மீ. நீளத்தில், மேற்பகுதியில் கரும்பச்சை நிறத்துடனும், கீழ்ப்பகுதியில் வெளிறியும், ஓரங்கள் மெல்லிய பற்களுடனும் காணப்படும். பூக்கள் வெண்மையாகவும், சிறியவையாகவும், இலைக் காம்புகளுடனும் கொத்தாகக் காணப்படும். பழங்கள் சிறியவையாகவும் குறுக்குவெட்டில் 1-2 மி.மீ. அளவிலும், மேல்முடிகளுடனும் இருக்கும். இதன் முக்கோண விதைகள், சுருங்கியும், இளஞ்சிவப்பு நிறத்திலும் பழுப்பு நிறத்திலும் காணப்படும்.

**விளையும் இடம்:**

இத்தாவரம் இந்தியாவில் வெப்ப மண்டலப் பிரதேசங்களில் புறம்போக்குப் பகுதிகளிலும் சில ஈரப்பதமான இடங்களிலும் காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

பூக்கும் பருவத்திலும், பழுக்கும் பருவத்திலும் இத்தாவரம் சேகரிக்கப்பட்டு, உலர்த்தப்பட்டு மருந்து தயாரிக்கப்படுகிறது. அம்மான் பச்சரிசி மூச்சுக் குழல்களைத் தளர்த்தி, இதயம், சுவாசம் இவ்விற்றில் ஏற்படும் அழுத்தத்தையும் குறைக்கிறது. இருமல், ஆஸ்துமா மற்றும் குழந்தைகளுக்குப் புழுக்களால் ஏற்படும் வயிற்றுக் கோளாறுகளிலிருந்து பாதுகாக்கிறது. இத்தாவரம் பெண்களுக்குப் பால் அதிகமாகச் சுரக்கவும், மேகவெட்டை போன்ற கொடிய நோய்களைக் குணப்படுத்தவும் சிறுநீர் உறுப்புக் கோளாறுகளைக் குணப்படுத்தவும் உதவுகிறது. இதன் வேர்கள் வாந்தியெடுப்பதைத் தவிர்க்கும். இதை அதிக அளவில் உட்கொண்டால் வயிற்றில் எரிச்சலையும், வாந்தி, குமட்டலையும் ஏற்படுத்தும். இத்தாவரத்தின் பால் மறுக்களைக் குணப்படுத்தும். இதன் நோய் எதிர்ப்புச் சக்தியும், க்ஷயரோக எதிர்ப்புச் சக்தியும் பரிசோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன.

**மற்ற பயன்கள்:**

இதன் இலைகள் காய்கறிகளைப் போன்று உணவுப் பொருளாகப் பயன்படுகின்றன.

**மற்ற வகைகள்:**

இதன் மற்ற சில வகைகளும் இதைப் போன்றே குணமுடையவை என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன் சில வகைகள் குத்துச்செடி போன்று எளிதில் இனம் காணும் வண்ணம் தடித்த, சாறு நிறைந்த, முக்கோணமாகவோ, வட்டமாகவோ அமைந்த முட்களுடன் வளைந்து, சுற்றிய தண்டுடனும், கிளைகளுடனும் காணப்படுகின்றன. இதன் பால் கசப்பும், நச்சுத்தன்மையும் உடையது. இதைக் கவனக் குறைவாகப் பயன்படுத்திஞல் தோல் மற்றும் இதர வியாதிகள் ஏற்படக்கூடும். குறிப்பிட்ட அளவு உபயோகப்படுத்தும்போது 'பேதி மருந்தாகப் பயன்படுவதுடன் மறுக்களைக் குணப்படுத்தவும், சில பூச்சிகளின் முட்டைப் புழுக்களை கொல்லவும் பயன்படுகிறது.

**யூஃபோர்பியா ஆண்டிகோரம்** (E. antiquorum)

(இந்தி திரிதாரி ஸேஹுண்ட்; சமஸ்கிருதம் வஜ்ரகந்தகா)

3 - 5 கிளைகளுடன், இந்தியா முழுவதும் வெப்பமான இடங்களில் காணப்படுகிறது. இதன் சாறு மகோதரச் சிகிச்சைக்கும், நரம்பூக்கச் சத்து மருந்தாகவும் பயன்படுகிறது.

**யூஃபோர்பியா பார்ன்ஹார்ட்டி** (E. barnhartii)

(தெலுங்கு - கட்டிமந்து)

தக்காண பீடபூமியின் வறட்சியான பாறைச் சரிவுகளிலும், அந்தமானிலும் காணப்படுகிறது. பொடியாக்கப்பட்ட இலைகள் கொப்புளங்கள் மீது பதவாடையாக வைக்கப் பயனுகின்றன.

**யூஃபோர்பியா நெரிஃபோலியா** (KE. neriifolia L.)

(இந்தி-ஸேஹண்ட்; சமஸ்கிருதம் - ஸ்னுகி)

5 கிளைகளுடன் கூடியது. இது தக்காணப் பீடபூமியில் அதிகமாக வளர்கிறது. ஆனுல், இந்தியாவெங்கும் புதர்



அம்மான் பச்சரிசி




அம்மான் பச்சரிசி

வேலியாகப் பயிரிடப்படுகிறது. இதன் சாறு காதுவலிக்கும் ஆஸ்துமாவைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது.

**யூஃபோர்பியா நிவுலியா:** (E. nivulia)
*(இந்தி - காட்டா தூஹர்; சமஸ்கிருதம் - பத்ரஸ்னுகி)*

*நீள் உருளை வடிவிலான கிளைகளுடன் இந்தியாவின் வறட்சியான பகுதிகளிலும் காணப்படுகிறது. இதுவும் புதர்வேலியாக வளர்க்கப்படுகிறது. இது சிறுநீரைப் பெருக்கப் பயன்படுகிறது. (பஸ்தர் பழங்குடிகள், இதன் வெள்ளைச் சாற்றைக் கால்நடைகளின் நோயைக் குணப்படுத்த உபயோகிக்கின்றனர்)*

**யூஃபோர்பியா ராயலினு:** (E. roylcana)
*(பஞ்சாபி - டண்டா தோர்)*

*5-7 கிளைகளுடன், மேற்கு இமயமலையின் வறட்சியான சரிவுகளில், சராசரியாக 1000-1500 மீ. உயரங்களில் காணப்படுகிறது.*

**யூஃபோர்பியா டிருகல்லி** (E. tirucalli)
*(இந்தி - ஸேகுந்த்; சமஸ்கிருதம் - வஜ்ரத்ருமா)*

இது நீள் உருளை வடிவில் அதிகக் கிளைகளுடன் கூடிய சத்துச் செடியாகும். கிளைகள் மற்ற வகைகளைவிட ஒடுங்கியவை. ஆப்பிரிக்காவைச் சேர்ந்ததானாலும், புதர்வேலியாக இந்தியாவில் பயிரிடப்படும் இது சாலையோரங்களிலும், தக்காணம் கிழக்கிந்தியாவின் வறண்ட பகுதிகளிலும் காணப்படுகிறது. கீல்வாத நோய்களுக்கும் பல்வலிக்கும் மேல் பூச்சாகப் பயன்படுகிறது. குறைந்த அளவில் இது உள்ளுக்குக் கொடுக்கும் மருந்தாகவும் பயனாகிறது.

# 37. பெருங்காயம் (Asafoetida)

**விஞ்ஞானப் பெயர் :** ஃபெருலா நார்த்தெக்ஸ் (Ferula narthex)

குடும்பம்: அம்பேலி ஃபேரி
**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — ஹீங்க் |
| கன்னடம், குஜராத்தி, வங்காளி | — ஹீங்க் |
| காஷ்மீரி | — யங்க், ஸப் |
| மலையாளம் | — பெருங்காயம் |
| மராத்தி | — ஹீங்க் |
| சமஸ்கிருதம் | — பல்ஹிகா, அகூடகந்த |
| ஒரியா | — ஹேறங்கு |
| தெலுங்கு | — இங்குமோ |

வணிகப் பெயர் அறிவியல் பெயரான ஃபெருலா அஸாஃபிடிடா என்பதை அடியொற்றி வழங்குகிறது. மருந்தும் இதே பெயரால் அழைக்கப்படுகிறது.

**விளக்கம்:**

மிகப் பெரிய காரட் வடிவிலான வேர்களைக் கொண்ட உயரமான எப்போதும் விளையும் ஒரு மூலிகை; இலைகள் இரு வகையானவை. கீழ்ப்பகுதி இலைகள் ஒற்றையாக, 30-60 செ.மீ. அளவில் நீள்வட்ட வடிவில் காணப்படும்; மேற்பகுதியில் அதிகப் பிரிவுகளுடன் காணப்படும். இளம் இலைகள் அடர்த்தியான மயிரிழைகளுடனும், பூக்கள் சிறியவையாகவும், மஞ்சள் நிறத்திலும், முடிவில் பெரிய கொத்தாகவும் காணப்படும். பழங்கள் 8 மி.மீ. நீளத்திலும் 4 மி.மீ. குறுக்களவிலும் காணப்படும்.

**விளையும் இடம்:**

இத்தாவரம் காஷ்மீரில் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

பெருங்காயத்தின் வேர்களேயோ வேர் முண்டுகளேயோ நறுக்கினல் அதிலிருந்து நீரில் கரையக் கூடிய வாசனையுள்ள மருந்துப் பொருள் கிடைக்கிறது.

இது அஜீர்ணத்தையும், திடீர் வலியையும் கட்டுப்படுத்துகிறது. உணவுக் குழாயில் ஏற்படும் கடும்வலி, காலரா மற்றும் கக்குவானே நீக்குகிறது. இது சுவாசம், நரம்பு மண்டலம் ஆகியவற்றைத் தூண்டவும் நிமோனியா, குழந்தைகளுக்கு ஏற்படும் மூச்சுக் குழல் அழற்சி ஆகியவைகளே நீக்கவும் பயன்படுகிறது. குடலேத் தூண்ட வயிற்றின் மீது தடவப்படுகிறது. குடலேச் சுத்தப்படுத்த இதனே நீரேற்றி மூலம் பயன்படுத்தலாம்.

இதற்கு உணர்ச்சியைத் தூண்டக்கூடிய சக்தி உள்ளது என்பதும் இதய பரிசோதனே மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**மற்ற பயன்கள்:**

இது அதிகமாக மசாலாப் பொருளாகப் பயன்படுகிறது; காய்கறி, பருப்பு வகை உணவு தயாரிக்கவும் ஊறுகாய் தயாரிக்கவும் ஒரு முக்கிய கலவைப் பொருளாகப் பயன்படுகிறது.

**மற்ற வகைகள்:**

மத்திய ஆசியாவில் கிடைக்கும் சில வகைகளான ஃபெருலா போய்டிடா, ஃபெருலா அஸாஃபிடிடா இரண்டும் தமது குணங்களில் ஃபெருலா நார்த்தெக்ஸ் போன்றே காணப்படுகின்றன.

இந்தியாவில், மருந்துவத்திற்காகவும், மற்ற உபயோகங்களுக்காகவும் பெருங்காயத்தின் ஆண்டுத் தேவை 6000 குவிண்டால் ஆகும். இதன் சீரான விநியோகத்தை உறுதி செய்ய இமய மலேயின் உட்பகுதியில் இது பயிரிடப்படுவது தேவையாக உள்ளது.

1977-78 இல் ரூ. 1 கோடி 20 லட்சம் மதிப்புள்ள பெருங்காயம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

## 38. கூதிர்ப்பச்சை (Winter Green)

**விஞ்ஞானப் பெயர் :** கவுல்தேரியா ஃபிராகிராண்டிஸ்மா (Gaultheria ftagrantisma)

குடும்பம்: எரிகேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — கந்தபுரா-கா-தேல் |
| சமஸ்கிருதம் | — ஹேமந்த-ஹரித் |
| அஸ்ஸாமி | — ஜிர்ஹப் |

இதன் வணிகப் பெயர், இதிலிருந்து கிடைக்கும் எண்ணெயை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

எப்பொழுதும் பசுமையான 3 மீ. உயரமுடைய குத்துச் செடியாகும். தண்டுகள் அதிக கிளைகளுடனும், பட்டைகள் பழுப்பு ஆரஞ்சு நிறத்திலும் காணப்படும். இலைகள் 13 செ.மீ. நீளத்தில் ஓரளவு அகலமாக, தோல் போன்று, புள்ளிகளோடு கூடிய சுரப்பிகளுடனும், ஓரங்கள் பற்களுடனும் காணப்படும். பூக்கள் சிறியவையாகவும், பசுவை கலந்த வெண்மையுடனும் சிறிய காம்புக் கவடுகளுடனும் கொத்தாகக் காணப்படும். பழங்கள் உருண்டையாகவும், நீலநிறப் புறவிதழ்களால் சூழப்பட்டும் இருக்கும்.

**விளையும் இடம்:**

இத்தாவரம் வடக்கு, கிழக்கு மற்றும் தென்னிந்தியாவில் 1500-2500 மீ. உயரம் வரை உள்ள இடங்களில் காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

இவ்வகையைச் சார்ந்த இளம் தாவரங்களிலிருந்து கூதிர்ப் பச்சை எண்ணெய் தயாரிக்கப்படுகிறது.

இவ்வெண்ணெய் பல்வேறு வகையான வாதநோய்களைத் தீர்க்கப் பயன்படுகிறது. இது மேற்பூச்சாக உபயோகப்படுத்தப் படுகிறது. மேற்பூச்சாகப் பயன்படும் வேறு சில களிம்புகளின் எரிச்சலைக் குறைக்க அவற்றுடன் சேர்க்கப்படுகிறது. இது கொக்கிப் புழுக்களைக் கொல்லவும், தூண்டும் பொருளாகவும், வயிற்றுப்புசத்திற்கு மருந்தாகவும் பயன்படுகிறது.

இதைக் குறைந்த அளவு எலிகளுக்குக் கொடுத்துப் பரிசோதித்ததில் இதற்குப் புற்று நோய் வளர்ச்சியைத் தடுக்கும் ஆற்றலுள்ளது தெரிய வந்துள்ளது. இது கழலை, கட்டி ஆகியவற்றைக் குணப்படுத்தும் தன்மை கொண்டுள்ளது என்பதும் பரிசோதனை மூலம் தெரிய வந்துள்ளது.

**மற்ற பயன்கள்:**

இந்த எண்ணெய் குளிர் பானங்களுக்கு வாசனையூட்டவும், எலுமிச்சைத் துளிநீர், பற்பசை தயாரிக்கவும், கொசுக்கள், ஈக்கள் மற்றும் இதர பூச்சிகளைக் கொல்லத் தேவையான மருந்துகள் தயாரிக்கவும் பயன்படுகிறது. இது மலையோரங்களில் அழகுக்காக வளர்க்கப்படுகிறது.

## 39. நீல மலர்ச்செடி (Indian Gentian)

**விஞ்ஞானப் பெயர் :** ஜென்டியானா குர்ரு (Gentiana Kurroo)
குடும்பம்: ஜென்ஷியனேசி
**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — குட்கி, கமல் ஃபூல் |
| வங்காளி | — கரு, குட்கி |
| குஜராத்தி | — பாக்கான் பேத் |
| காஷ்மீரி | — நீல்கண்ட்டி |
| ஜௌன்சார் | — கரு |

இதன் வணிகப் பெயர் நீல மலர்ச் செடியின் இந்திய மாற்று வகையைக் குறிப்பதாகும்.

**விளக்கம்:**

எப்பொழுதும் இருக்கக்கூடிய, மயிர்க்கற்றையுடன் கூடிய, நிலத்தில் படர்ந்து கிடக்கும் தண்டைக் கொண்ட 10-30 செ.மீ. நீளமுள்ள மூலிகையாகும். கீழ்மட்ட அடியிலைகள் 7-13 செ.மீ. நீளத்தில், கற்றையாகவும், மேற்பகுதி இலைகள் 2.5 செ.மீ. நீளத்தில், குறுகியும் காணப்படும். பூக்கள் நீலமாகவும், வெள்ளைப் புள்ளிகளுடன் 4-5 செ.மீ. நீளத்திலும், 2-2.5 செ.மீ. குறுக்கு வெட்டிலும், 2-4 பூக்களுடன் தனியாகவோ கொத்தாகவோ காணப்படும். பழங்கள் 2 செ.மீ. நீளமுடையவை.

**விளையும் இடம்:**

இத்தாவரம் காஷ்மீரிலும் அதைச் சுற்றியுள்ள இமயமலையின் வடமேற்குப் பகுதிகளிலும் 1500-3500 மீ. உயரம் வரை உள்ள இடங்களில் காணப்படுகின்றது.

**மருத்துவப் பண்புகள்:**

வேர்முண்டுகளிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இது பசியைத் தூண்டவும், இரைப்பை நீரை அதிகமாகச் சுரக்கச் செய்யவும் பயன்படுகிறது. பல சத்து மருந்துகள் தயாரிக்கவும், வயிற்று நோய்களுக்கான மருந்து தயாரிக்கவும் ஒரு கலவைப் பொருளாகப் பயன்படுகிறது. இனிய மணமும், சுவையும் உடைய இம்மருந்து அதிகம் உட்கொண்டால் பேதியை ஏற்படுத்தும்.

**மற்ற வகைகள்:**

ஜென்டியானா லுட்டேஆ (மஞ்சள் மலைப்பாங்கர் நீலச் செடி) வெளி நாட்டுத் தாவரமான இதன் வேர்கள் மருந்துகள் தயாரிக்க அதிகம் பயன்படுவதால் இது இறக்குமதி செய்யப் படுகிறது. வடமேற்கு இமயமலையில் 3000 மீ. உயரத்தில் நிலவும் தட்பவெப்பநிலை இதைப் பயிரிட ஏற்றது.

இமயமலையில் இதன் ஓரிரு வகைகள் அதிகமாகக் கிடைக் கின்றன. இவை ஜென்டியானா குர்ருவுக்கு மாற்றாக உபயோகப் படுத்தப் படுகின்றன.

இந்தியத் தாவரமான பிக்ரோரிஸா குர்ருவா (Picrorhiza Kurroa) ஜென்டியானா லுட்டோஆவுக்குச் சரியான மாற்றாகக் கருதப்படுகிறது.

இதன் ஆண்டுத் தேவை 10 குவிண்டால் எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

# 40. அதிமதுரம் (Liquorice)

**விஞ்ஞானப் பெயர் :** கிளீசிர்ஹிஸா கிளாப்ரா (Glycyrrhiza glabra L.)

குடும்பம்: பைப்பீலியோனேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — *முலேட்டி, முலஹடி* |
| வங்காளி | — *ஜஷ்டிமது* |
| கன்னடம் | — *யஷ்டிமது, அதிமதுரா* |
| மலையாளம் | — *இரதிமதுரம்* |
| சமஸ்கிருதம் | — *மதுயஷ்டி* |
| தெலுங்கு | — *யஷ்டிமதுகம்* |

அதிமதுரம் என்ற வணிகப் பெயர், இந்திய அதிமதுரம் என்ற மருந்திலிருந்து வேறுபட்டது. இந்திய அதிமதுரம் முற்றிலும் வேறுபட்ட ஆப்ரஸ் பிரிகேட்டரியஸ் என்ற தாவரத்திலிருந்து கிடைக்கிறது.

**விளக்கம்:**

1.5 மீ. உயரம் வளரக் கூடிய நீண்ட மூலிகையாகவோ சிறிய குத்துச் செடியாகவோ காணப்படும். கூட்டு இலைகள்; சிறிலைகள் 4-7 இணைகளில் காணப்படும். பூக்கள் இளஞ்சிவப்பாகவோ இளம் ஊதாவாகவோ, சிறயவையாக, இலைக்குச் சமமான அல்லது சிறிது நீண்ட மெல்லிய கவட்டுக் காம்பிலிகளில் காணப்படும். பழங்கள் 1 முதல் 3 செ.மீ. நீளத்தில், தட்டையாக, அடர்த்தியாக வெளிப்புறம் சூழப்பட்ட சிறு முட்களுடன் காணப்படும். வேர்த் தண்டுகளிலிருந்து புறப்பட்ட எண்ணற்ற பக்க வேர்களும், அல்லது சில வகைகளில் நிலத்தின் கீழிருக்கும் வேர்த்தண்டின் அருகில் பலவாகக் கிளைத்த தண்டுகளும் காணப்படும்.

**விளையும் இடம்:**

இது இந்தியாவில் பயிரிடப்படுகிறது.

**மருத்துவப் பயன்கள்:**

உலர்ந்த வேர்களும், நிலக் கீழ்த் தண்டும் இம்மருந்து தயாரிக்க உதவுகிறது. இது இருமல், தொண்டை-வறட்சி, மூச்சுக்குழல் அழற்சி, வயிற்று வலி, க்ஷயம் மற்றும் காக்கை வலிப்பு போன்றவற்றைக் குணப்படுத்துகிறது. தொண்டை வறட்சிக்கும், இருமலுக்கும் ஒரு சிறு துண்டு அதிமதுரத்தை அப்படியே மெல்லுவது இதமளிக்கும். சிறுநீரைக் கட்டுப்படுத்தவும், நுண்ணுயிரெதிரியாகவும் நோய் எதிர்ப்புச் சக்தியுடையதாகவும் பரிசோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இது உறுத்தலடக்கியாகவும், இனிப்புச் சுவையுடனும் இருப்ப தால் கஷாயம் தயாரிக்கவும், மருந்துகளின் கசப்புச் சுவையை மாற்றவும், மாத்திரைகளுடன் கலந்தும் கொடுக்கப்படுகிறது. இது அடிவயிற்றிலும், குடலிலும் ஏற்படும் புண்களைக் குணப் படுத்துகிறது. இது பொடியாக்கப்பட்டு வெண்ணெய், தேன் ஆகியவற்றுடன் கலந்து வெட்டுக்களுக்கும், காயங்களுக்கும் மேற்பூச்சாக உபயோகப்படுத்தப் படுகிறது. தலையில் ஏற்படும் சூட்டைக் குறைக்க இதன் இலைகளைப் பதவாடையாக வைத்துக் கட்டுதல் பலனளிக்கும் என நம்பப்படுகிறது.

*மற்ற பயன்கள்:*

இது பொடியாகவோ, சிறு சிறு துண்டுகளாகவோ வெற்றி லையுடன் (பீடா) சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இந்தியத் தேவைக்கேற்ற அளவு இங்கு உற்பத்தி செய்ய இயலாததால், 1977-78இல் ரூ. 30 லட்சம் மதிப்புள்ள அதிமதுரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. காஷ்மீர், பஞ்சாப், ஹிமாசலப் பிரதே சம், உத்தரப் பிரதேசம், சென்னை ஆகிய இடங்கள் இது பயிராவதற்கு ஏற்றதாகக் கருதப்படுகிறது. ஸ்பெயின், இத் தாலி போன்ற இடங்களில் அதிமதுரம் அதிகமாகக் காணப்படு வதாக ஒரு கலந்துரையாடலின்போது இந்தியத் தாவர அளவி யல் (Indian Botanical Survey) நிறுவனத்தின் நெறியாளரான ஸ்பெயினில் பிறந்து தற்போது இந்தியக் குடிமகனாக உள்ள டாக்டர் எச். சந்தாபு குறிப்பிட்டுள்ளார். இளைஞர்கள் இனிப் புப் பண்டங்கள் வாங்குவதற்குப் பதிலாக இதன் வேர்களைத் தோண்டி எடுத்துச் சப்பிச் சாப்பிடுகிறார்களாம்.

## 41. நன்னாரி (Indian Sarsaparilla)

**விஞ்ஞானப் பெயர் :** *ஹெமிடெஸ்மஸ் இண்டிகஸ்* (Hemidesmus indicus)

குடும்பம் : பெரிப்ளோகேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | — | *இந்தி ஸல்ஸா, அனந்த்மூல்* |
| வங்காளி | — | *அனந்த்மூல்* |

| | | |
|---|---|---|
| குஜராத்தி | — | தூரிவேல் |
| கன்னடம் | — | ஸோகதேபேரினகடா |
| மலையாளம் | — | நன்னாரி |
| ஒரியா, மராத்தி | — | அனந்த்மூல் |
| சமஸ்கிருதம் | — | நாகஜிஹ்வா |
| தெலுங்கு | — | முத்தாவபுலகமு |
| மத்திய இந்தியா | — | சோட்டி தூதி, காலி தூதி |

இந்த நன்னாரிச் செடியிலிருந்து எடுக்கப்படும் மருந்து உண்மையான நன்னாரிக்கு (ஸ்மீலாக்ஸ்) ஒரு மாற்றாக இருப்பதால், இது இந்திய நன்னாரி என்றழைக்கப்படுகிறது.

**விளக்கம்:**

சுற்றிப்படரும், என்றும் காணப்படும், இத்தாவரம் நறுமணமுள்ள வேர்த்தண்டுடன் கூடியது; தண்டு மெல்லிது; மயிரிழைகளற்றுக் காணப்படும். இலைகள் உருவிலும் அளவிலும் பெரிதாகவும், 5-10 செ.மீ. நீளத்துடனும் 4-5 செ.மீ. அகலத்துடனும் இருக்கும்; கரும்பச்சை நிறம்; பல சமயம் வெள்ளைப் பட்டையுடனும் வெண்மை அல்லது வெளிறிய நிறத்துடனும் கீழ்ப்பகுதியில் மயிரிழைகளுடனும் காணப்படும். பூக்கள் மிகவும் சிறியதாக, பச்சை நிறத்தில், நெருக்கமாக இணைக்கப்பட்ட சிறிய .கொத்துக்களில் காணப்படும். பழங்கள் 10-15 செ.மீ. நீளத்தில், பச்சையாக, குறுகி உருளை வடிவில், நுனியில் கூர்மையாக இணைஇணையாக இருக்கும். இத்தாவரத்தின் அனைத்துப் பகுதியிலும் பால் போன்ற திரவம் நிறைந்திருக்கும்.

**விளையும் இடம்:**

இது இந்தியா முழுவதும் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த வேர்களிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இம்மருந்து காய்ச்சல், தோல் வியாதிகள், பசியின்மை, கிரந்தி, மேகநோய், வெள்ளை வீழ்ச்சி மற்றும் இதர சிறுநீரக நோய்களை நீக்கப் பயன்படுகிறது. இதன் சிறுநீரைப் பெருக்கும் திறன் பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இம்மருந்து அதிகமாக இரத்தச் சுத்திகரிப்புக்கும், பக்க வாதத்திற்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. மருத்துவமனைகளில்

நடத்தப்பட்ட பரிசோதனைகள் இந்திய நன்னாரி சிமிலாக்ஸிலிருந்து எடுக்கப்படும் நன்னாரிக்கு இணையாக உள்ளதாக நிரூபித்துள்ளன.

*மற்ற பயன்கள்:*

இத்தாவரத்தின் குறுகிய இலைகள் (வெற்றிலை போல) மெல்லுவதற்குப் பயன்படுகிறது; புத்துணர்ச்சி தரக்கூடியது.

## 42. இந்திரபம் (Kurchi)

**விஞ்ஞானப் பெயர் : ஹோலார்ரேனு ஆண்டிடிசென்டிரிகா** (Holarrhena antidysenterica)

குடும்பம் : அபோசாயினேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | — | இந்திரஜௌ, கோடயி, குர்ச்சி |
| அஸ்ஸாமி | — | துத்குரி |
| வங்காளி | — | குர்ச்சி |
| குஜராத்தி | — | குடா |
| கன்னடம் | — | ஹாலே, கோடச்சகா |
| மலையாளம் | — | கோடகப்பால |
| மராத்தி | — | கால், கோடயா, துதாரி |
| ஒரியா | — | குர்னி, கேட்வா |
| பஞ்சாபி | — | கேவார் |
| சமஸ்கிருதம் | — | குடஜ, காலிங்க |
| தெலுங்கு | — | பாலாகோடஸா |
| (நைனிடால் | — | கியோரே) |

இதன் வணிகப் பெயர் பொதுவான இந்தியப் பெயரை அடிப்படையாகக் கொண்டது. **ஆண்டி டிசென்டிரிகா** (வயிற்றுப் போக்கு எதிர்ப்பு) என்னும் அறிவியல் பெயர் இதன் மருத்துவப் பயனைக் கருதி வைக்கப்பட்டுள்ளது. குடஜ என்னும் சமஸ்கிருதப் பெயர் சிகரம் என்று பொருள் படும்.

**விளக்கம்:**

சில நேரங்களில் 10 மீ. உயரமுடைய சிறிய மரமாகவோ, பெரிய குத்துச் செடியாகவோ காணப்படும். இலைகள் 10-30 செ.மீ. நீளத்தில் நீள் வட்ட வடிவில், மெல்லிய, தெளிவாகத் தெரிகிற நரம்புகளுடன் காணப்படும். இலைக் காம்புகள் சிறியவை. நறுமணத்துடன் கூடிய இதன் வெண்பூக்கள், குறுக்கு வெட்டில் 1-1.5 செ.மீ. அளவுடன், முடிவில் பெரிய கொத்துக்களில் காணப்படும். பழங்கள் 20-25 செ.மீ. நீளத்தில் நீண்டு ஒடுங்கி உருளை வடிவில் 6-8 மி.மீ. பருமனில் கருஞ்சாம்பல் நிறத்தில் வெள்ளைப் புள்ளிகளுடன் காணப் படும். விதைகள் சுமாராக 1 செ.மீ. நீளத்தில் மேற்புறத்தில் 2-2.5 செ.மீ. நீளப் பழுப்பு நிற மயிர்க்கற்றையுடன் காணப் படும். இத்தாவரத்தை எங்கு வெட்டினாலும் வெள்ளை நிறத் திரவம் வெளிப்படும்.

**விளையும் இடம்:**

இந்தியா முழுவதும் 1200 மீ உயரமுள்ள இடங்களில் காணப்படுகிறது. மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா வின் காடுகளின் ஓரத்திலும் பரவலாகக் காணப்படுகிறது.

**மருத்துவப் பயன்கள்:**

இத்தாவரத்தின் உலர்ந்த மரப்பட்டைகளிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இது முக்கியமாக இடைவிட்டு வரும் வயிற்றுப் போக்கைத் தடுக்கிறது. இம்மரப்பட்டையின் சாறு தனியாகவோ வேறு சில இரசாயன பொருட்களுடன் சேர்த்தோ பயன்படுத்தப் படுகிறது. இம்மரப்பட்டை சத்து மருந்து, காய்ச்சல் தணிவிக்கும் மருந்து ஆகியன தயாரிக்கவும் பயன்படுகிறது. இதிலுள்ள கோனேசின் என்ற காரகுணம் வேர் முண்டுகளின் குறைபட்ட வளர்ச்சியை நீக்கவும் பயன் படுகிறது. விதைகளின் காரகுணம் வயிற்றுப் போக்கை நீக்கப் பயன்படுகிறது. இலைகளுக்கும் சில மருத்துவக் குணங்கள் உண்டு.

**மற்ற பயன்கள்:**

சத்துக் குறைவான மண்ணை வளமுள்ள்தாக்கக் காடுகளில் முன்னதாக இது உபயோகப் படுத்தப்படுகிறது. இம்மரம் சில்லறைச் சாமான்களான வீட்டு உபயோகப் பொருட்கள், பேப்பர் கத்திகள், விளையாட்டுப் பொருட்கள், சிறிய

பெட்டிகள், பேனுத் தாங்கிகள், சீப்புகள், அச்சடிக்கும் கட்டைகள், புகையிலைப் படச் சட்டங்கள் மற்றும் பல பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகின்றன.

## 43. மரவட்டை (Chalmogra)

**விஞ்ஞானப்பெயர் :** ஹிட்னோகார்ப்பஸ் குர்சியி
(Hydnocarpus Kurzii)

குடும்பம் : ஃபிளேகூர்ஷியேசி

**இந்தியப் பெயர்கள்:**

இந்தி — சால்மோக்ரா
அஸ்ஸாமி — லம்டனி
வங்காளி — சௌல்மோக்ரா/தூர்ல்மூக்ரி
மலையாளம் — மரவெட்டி

இதன் வணிகப் பெயர் பொதுவான தல்பு பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

15 மீ. உயரமுடைய மரமாகவோ அதைவிடச் சிறிது அதிக உயர்த்துட ன, உயர்ந்த அடிமரத்துடனும் கீழ்நோக்கிச் சரிந்த கிளைகளுடனும் காணப்படும். இலைகள் 20 செ.மீ. நீளத்தில் கூர்மையான நுனியுடன், தோல் போன்று காணப்படும். பூக்கள் சிறியவையாக, மஞ்சள் நிறத்தில், சிறிய கவட்டுக் காம்புகளுடன் கொத்தாகக் காணப்படும். பழங்கள் 6-7 செ.மீ. குறுக்கு வெட்டிலும் உருண்டையாகவும், பழுப்பு நிறத்தில் பல விதைகளுடனும் காணப்படும்.

**விளையும் இடம்:**

எப்பொழுதும் பசுமையான அஸ்ஸாம், திரிபுரா காடுகளில் காணப்படுகிறது; சில இடங்களில் அளவுக்கு மீறிவிளைகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

புதிய பழுத்த விதைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் மருந்தாகப் பயன்படுகிறது. இந்த எண்ணெய் தொழுநோயைத்

தீர்க்கப் பயன்படுகிறது. முன்பு இது தனியாகக் கொடுக்கப்பட்டாலும் இப்போது வேறு சில மருந்துகளுடன் கலந்து ஊசி மூலம் செலுத்தப்படுகிறது. இம்மரப்பட்டையின் பதத்துவர் காய்ச்சலைக் குறைக்கப் பயன்படுகிறது.

**மற்ற பயன்கள்:**

ஹிட்னோகார்ப்பஸ் குர்சியின் விதைகள் உரமாகவும் பயன் படுகின்றன. இதைச் சில விலங்குகள் உணவாகக் கொள்கின்றன. அதனால் அவற்றின் தசைகள் உண்ணத் தகுதியற்றவை என்று விலக்கப்பட்டுள்ளது. சல்மோக்ரா பழங்களைத் தின்று இறந்த மீன்கள் கூட உணவாகக் கொள்ளத் தக்கவையல்ல எனவும் கூறப்படுகிறது.

**மற்ற வகைகள்:**

ஹிட்னோகார்ப்பஸ் லாரி ஃபாலியா (டென்னஸ்ட்) ஸ்லும்மர் (மராத்தி — கடுகவத்து; சமஸ்கிருதம் — கருத்பால்; தமிழ் — மரவட்டை) கடுகவத்து; சமஸ்கிருதம்-கருத்பால்; தமிழ்-மரவட்டை) மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படுகிறது. இதன் விதையிலிருந்து கிடைக்கும் எண்ணெய் மருந்தாகப் பயன் படுத்தப்படுகிறது. இது ஹிட்னோகார்ப்பஸ் குர்சியைப் போன்ற குணங்களைக் கொண்டது. இது மேற்பூச்சாகத் தொழுநோய்க்கும், கொப்புளங்களைக் குறைக்கவும் பயன்படுகிறது. இந்த எண்ணெய் கீல்வாதச் சுளுக்கு, க்ஷயத்தால் ஏற்படும் தொண்டை வீக்கம், தீப்புண்கள் முதலியவற்றிலிருந்து பாது காக்கிறது. சில பரிசோதனைகள் இதன் நோய் எதிர்ப்புச் சக்தியை நிரூபித்துள்ளன.

## 44. நீர்முள்ளி (Talmakhana)

**விஞ்ஞானப் பெயர் :** ஹீகுரோஃபிலா ஆரிகுலாட்டா (Hygrophila auriculata)

மறுபெயர்கள் : ஹீக்ரோஃபிலா ஸ்பீனோசா (H. Spinosa) ஆஸ்டேராகாந்தா லோங்கீ ஃபாலிஆ (Asteracantha longifolia)

குடும்பம்: அகான்தேசியே

**இந்தியப் பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | — | தால்மக்கானு, குலியாகான்ட்டா |
| குஜராத்தி | — | எக்ரோ |
| வங்காளி | — | குலேக்காடா, கல்பகான்ட்டா |
| கன்னடம் | — | கோடவன்கே |
| மலையாளம் | — | வாயல்சுள்ளி |
| மராத்தி | — | தாலிம்க்கானு |
| சமஸ்கிருதம் | — | கோகிலாக்ஷ |
| தெலுங்கு | — | நீருகுப்பி |

இதன் வணிகப் பெயர் தலப் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

60-150 செ.மீ. உயரமுடைய, பருமனான, நிமிர்ந்து நிற்கும் மூலிகையாகும். தண்டு கிளைகளற்று, நீண்டு, நாற்கோணத்தில், மயிரிழைகளுடன், தடித்த கணுக்கள் கீழிறங்கி காணப்படும். இலைகள் சுற்றுவட்டமாக, கணு ஒன்றுக்கு 6 இலைகளுடன், கூர்மையான, மஞ்சள் நிற முட்களைக் காம்புக் கவடுகளில் கொண்டிருக்கும். சுற்றடுக்கில் 8 பூக்கள்; பழுப்பு நீலமாகவும், 3 செ.மீ நீளத்தில் 2 உதடுகளுடனும் குறிப்பாகக் கீழ் உதடு மடிந்தும் காணப்படும்.

**விளையும் இடம்:**

இந்தியா முழுவதும் சதுப்பு நிலங்களிலும், ஈரப்பத இடங்களிலும், ஆழமற்ற இடங்களிலும், ஓரளவு வறண்ட குழிகளிலும், சாலையோரக் கால்வாய்களை ஒட்டியும் காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

முழுத் தாவரமும் மருந்து தயாரிக்கப் பயன்படுகிறது. இது மகோதரம், மஞ்சள் காமாலை, பக்கவாதம், மற்றும் சிறுநீரகத்தில் ஏற்படும் வியாதிகளைக் குணமாக்க உதவும்; இதன் விதைகள் பாலியல் நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுகிறது. இதன் சிறுநீர் பெருக்கும் தன்மை இதில் கலந்துள்ள கரியச் சேர்மானமுடைய மற்றும் கரியச் சேர்மானமற்ற மூலக் கூறுகளினால் தான் என்று கருதப்படுகிறது. விதைகளும், வேர்களும் தனித் தனியாகவும் இந்தக் குணங்களைக் கொண்டுள்ளன. இலைகள் இருமலுக்கும் சிறுநீரை வெளியேற்றவும் பயன்படுகின்றன.

# 45. ஹியோஸியாமஸ் (Hyoscyamus)

**(இந்தியன் ஹென்பென்)**

**விஞ்ஞானப்பெயர் :** ஹியோஸியாமஸ் நிகெர் (Hyoscyamus niger L.) *வண்ணப்படம்: 2*

குடும்பம் : சொலனேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| *இந்தி* | — *குராசானி அஜ்பாயன்* |
| *வங்காளி* | — *குராசானி அஜ்வாயன்* |
| *குஜாரத்தி* | — *குராசானி அஜ்வாயன்* |
| *சமஸ்கிருதம்* | — *பாரசீகயஹல, மதகாரிணி* |

இதன் வணிகப் பெயர் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

ஓராண்டு அல்லது ஈராண்டு வளரும் கெட்ட நாற்றமுடைய சிறுசுரப்பிகளுடன் கூடிய மயிரிழைகள் அடர்த்தியாக மூடப்பட்ட மூலிகையாகும். தண்டு 1 மீ. உயரமுடையது. கீழ்ப் பகுதியில் உள்ள இலைகள் 15-20 செ.மீ. நீளத்தில், ஓரங்களில் பற்களுடன் காணப்படும்; மேலுள்ள இலைகள் சிறிதாகவும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டும் இருக்கும். பூக்கள் 2-3 செ.மீ. குறுக்கு வெட்டிலும், வெளிறிய பச்சை நிறத்தில், பழுப்பு நிறப்பட்டைகளுடன் பூத்திருக்கும். இவற்றுள் சில தண்டிலிருந்து கிளைகள் புறப்படும் இடத்தில், தனியாகவும், மற்றவை நீண்டு, முள்ளில் முடிவதாகவும் அமைந்திருக்கும். பழங்கள் உருண்டையாக 1.3 செ.மீ குறுக்கு வெட்டில் காணப்படும்.

**விளையும் இடம்:**

இத்தாவரம் மேற்கு இமயமலைத் தொடரில் காஷ்மீர் முதல் கர்வால் வரை 1500-3000 மீ. உயரமட்டத்தில், பொதுவாக, வாழ்விடத்துக்கு அருகமைந்த புறம்போக்கு இடங்களில் காணப்படுகிறது. இது காஷ்மீர், பஞ்சாப், உத்திரபிரதேசம்,

மகாராஷ்டிரம், நீலகிரி ஆகிய சில இடங்களில் பயிரிடப் படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

செடிகள் பூக்கத் தொடங்கியதும், உடனடியாக அவற்றின் உலர்ந்த இலைகளும், பூக்கும் மேற்பகுதியும் சேகரிக்கப்பட்டு இம்மருந்து தயாரிக்கப்படுகிறது. இம்மருந்து பெல்லடோனு வைப் போன்று அதே குணங்களைக் கொண்டுள்ளது. இது வலியுடன் கூடிய தசைப் பிடிப்பு, ஹிஸ்டீரியாவின்போது ஏற்படும் நரம்பு உறுத்தல், இருமல் போன்றவற்றை நீக்கப் பயன்படுகிறது. இது கண்மணியை விரியச் செய்கிறது. இத்தாவரத்தின் விதைகள் பொடியாக்கப்பட்டு, களிம்பாக, வலிகளுக்கு மேற்பூச்சாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவின் ஆண்டுத் தேவை 40 குவிண்டால் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. இது இமயமலைப் பகுதிகளில் காஷ்மீர், பஞ்சாப், ஹிமாசல பிரதேசம், உத்திரப் பிரதேசம் ஆகிய இடங்களில் வளர்க்கப்படுகிறது.

**மற்ற வகைகள்:**

ஹியோஸியாமஸ் மியூட்டிகஸ் (ஈஜிப்ஷியன் ஹென்பேன்) Hyoscyamus muticus (Egyptian Henbane) - இதுவும் காஷ்மீர் முதலான இடங்களில் பயிரிடப்படுகிறது. இதன் காரகுணம் இந்திய வகையைவிட உயர்ந்தது. மிகுதியான போதைத் தன்மையுடையது. இதன் இலைகளைப் புகைத்தால் மட்டுமீறிய கிளர்ச்சி தூண்டப்படுகிறது. ஏற்கெனவே குறிப் பிட்டப்படி ஆண்டுத்தேவை 40 குவிண்டால்கள் ஆகும். இவ்விரு வகைகளைப் பயிரிடுவதை அதிகரிப்பதன் மூலம் இத்தேவையை நிறைவு செய்யலாம்.

## 46. சிரிக்கி (Kaladana)

**விஞ்ஞானப் பெயர் : இபோமேயா நீல்** (Ipmoea nil)

சித்திரம் 14

குடும்பம் : கன்வால்வுலேசி

**இந்தியப் பெயர்கள்:**

இந்தி — காலாதனு நீல்கல்மி
வங்காளி — காலாதானு



சிரிக்கி



சிரிக்கி

| | | |
|---|---|---|
| குஜராத்தி | — | காலா கும்பான், திரிகோணி போடியால் |
| மராத்தி | — | நீல்புஷ்பி |
| ஒரியா | — | கணிகோண்டோ |
| சமஸ்கிருதம் | — | கிருஷ்ணபீஜ் |
| தெலுங்கு | — | ஜீரிகி |
| நைனிடால் | — | போரடா |

இதன் வணிகப் பெயர் பொதுவான இந்தியப் பெயரை அடிப்படையாகக் கொண்டது. இத்தாவர வகையின் நீலநிறத்தைக் குறிக்க இவற்றின் பெயருடன் 'நீல்' என்பது இணைந்துள்ளது.

**விளக்கம்:**

ஆண்டு முழுவதும் காணப்படுகிற, தண்டு ஓரளவு மயிரிழைகளால் மூடப்பட்டுச் சுற்றிப் படருகிற தாவரமாகும். இலைகள் 5-12 செ.மீ. குறுக்குவெட்டில், நீள்வட்டமாகவும், மென்மையாகவோ, ஆழமாகவோ காணப்படும், 3 மடல்களுடன் கூடியது. பூக்கள் 4-5 செ.மீ. நீளத்தில். புனல் வடிவில், நீலமாகவும் கீழே ஓரளவு இளஞ்சிவப்பு நிறமாகவும் காணப்படும்; ஓரளவு வட்ட வடிவிலோ நீள்வட்டவடிவிலோ காணப்படும். பழம் 8 மி.மீ. குறுக்களவில், உருண்டையாக இருக்கும். விதைகள் சிறிதாக உருண்டையாக இருக்கும். பூக்களின் நிறம் கவனத்திற்குரிய ஒன்றாகும். பூக்கள் செடியில் இருக்கும்போது நீலநிறமாகவும், பறித்தவுடன் பழுப்பு நிறமாகவும் காணப்படும். இதனால் பல புத்தகங்களில் பூக்களின் நிறம் பழுப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**விளையும் இடம்:**

இது இந்தியா முழுவதும் பொதுவாக 1,800 மீ. வரை உயரமான இடங்களில் காணப்படுகிறது; இந்தியாவில் இயற்கையாக வளரும் காட்டுச் செடியான இது, சில சமயங்களில் பயிரிடவும் படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த விதைகளிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இது பேதி மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது. இதை அதிகமாக உபயோகித்தால் எரிச்சலை ஏற்படுத்தும்.

**மற்ற பயன்கள்:**

புதிய பழங்கள் உணவுப் பொருளாகும்; இது அழகுக்காகத் தோட்டங்களில் வளர்க்கப்படுகிறது.

**மற்ற வகைகள்**

இபோமேயாவின் இதர சில வகைகளும் மருத்துவப் பண்புள்ளவை. பெரும்பாலானவை மலமிளக்கி மருந்தாகவோ பேதி மருந்தாகவோ பயன்படுகின்றன:

(i) இபொமேயா பெஸ்டிகிரிடீஸ் (Ipomoea pestigridis) இந்தி: கியாபாட்டி, காலாதாளு, பஞ்ச பத்ரிட மத்தியப் பிரதேசம்: பட பாஸ்வி.

(ii) இபோமேயா அக்வாடிகா *(படம்.16)* (Ipomoea aquatica) ஆங்கிலம் : ஸ்வாம்ப் காபேஜ். இந்தி: கால்மிஷக். பஞ்சாபி: ஸோஞர்லி காஸாக்.

(iii) இபொமேயா பேஸ்காப்ரி - Ipomoea pescaprae -*(படம் 17)* இந்தி: தோபத்தி லதா. இக்கொடியின் சாறு மலமிளக்கியாகப் பயன்படுகிறது.

(iv) இபோமேயா பூர்பூரேஆ (Ipomoea Purpurea)- காலை அல்லி.

(v) இபோமேயா க்வாமோகில்ட் (I.quamoclit) இந்தி: காம லதா, வங்காளம்: தோருலதா.

(vi) இபோமேயா யூனிஃப்ளோரா மற்றும் இபோமேயா கைரிகா (I.uniflora and I. cairica)

(பஸ்தர் பழங்குடிகள் **இபோமேயா அகுவாடிகா** வின் பூவைக் கசக்கிச் சாறு எடுத்து, தீப்பட்ட, அழற்சியுற்ற கண்களுக்கு மருந்தாக உபயோகிக்கின்றனர்.) **இபோமேயா புர்கா** (Ipomoea purga) வின் கிழங்கு போன்ற வேர்த்தண்டுகளும் பேதி மருந்தாக உபயோகிக்கப்படுகின்றன. இது அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட தாவரம். இது தோட்டங்களில் அழகுக்காக, தெற்கு மற்றும் கிழக்கு இந்தியாவில் வளர்க்கப்படுகிறது. இதன் இந்தியக் தேவை ஆண்டுக்கு 6 குவிண்டால்; இந்திய வகைகளே இதனை நிறைவு செய்கின்றன.




சிரிக்கி




சிரிக்கி

# 47. மருதோன்றி, முள்ளுகொரந்திலா
## (Henna)

**விஞ்ஞானப் பெயர் :** லாசோனியா இனேர்மிஸ்
(Lawsonia inermis L.)

குடும்பம் : லாயித்ரேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| *இந்தி* | — *மெஹ்ந்தி* |
| *வங்காளி* | — *மெஹந்தி* |
| *குஜராத்தி* | — *மெஹந்தி* |
| *கன்னடம்* | — *மைலான்சி, கோரன்ட்டி* |
| *காஷ்மீரி* | — *மோஹுஜ்* |
| *மலையாளம்* | — *மைலான்சி* |
| *ஒரியா* | — *பேஞ்சாத்தி* |
| *பஞ்சாபி* | — *ஹினு* |
| *சமஸ்கிருதம்* | — *மென்திகா, ரக்தகர்பா* |
| *தெலுங்கு* | — *கோரன்தி* |

இதன் வணிகப் பெயர் ஹினு என்னும் அராபிய மருந்துப் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

பெரிய அல்லது நடுத்தரமான அதிகக் கிளைகளுடன் கூடிய குத்துச் செடியாகும். சில சமயங்களில் மரம் போன்றும் காணப்படும். 4 கோணங்களுடன் கூடிய கிளைகள், பெரும்பாலும், கூர்மையான முனையுடன் முடியும். இலைகள் எதிரெதிராக 2-3 செ.மீ. நீளத்தில், கூர்மையான முனையுடன் இருக்கும். பூக்கள் சிறிதாக, மணமுள்ளனவாக, வெண்மை அல்லது இளஞ்சிவப்பு நிறத்தில் பெரிய கொத்துக்களாக இறுதியில் காணப்படும். பழங்கள் சிறியவையாக, பட்டாணி அளவில் பல விதைகளுடன் காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

இதன் இலைகள் மருத்துவப் பண்பு கொண்டுள்ளன. இவை தோல் வியாதிகளுக்கு நோய்த்தடுப்பு மருந்தாகப் பயன்படு

கின்றன. இவை மேற்பூச்சாகக் கொப்புளங்கள், தீக்காயங்கள் மற்றும் தோல் வியாதிகளுக்கு உபயோகப்படுத்தப் படுகின்றன. இதன் கஷாயம் வறண்ட தொண்டைக்கு, தொண்டை கழுவு நீர்மமாக உபயோகப்படுத்தப்படுகிறது. இதன் இலைப் பசை தலைவலி, கால் எரிச்சல் ஆகியவற்றை நீக்கப் பயன்படுகிறது. இலைகள் நுண்ணுயிர் களால் ஏற்படும் க்ஷயம் போன்ற நோய்களுக்கெதிராகவும், டைபாயிட் மற்றும் இரத்தக் குழாய்களிலிருந்து வெளிப்படும் இரத்தப் போக்கைத் தடுக்கவும் பயன்படுகிறது. ஆனால், இவ்வகையில் இத்தாவரம் அதிகமாக உபயோகிக்கப்படவில்லை. இதன் விதைகளும், வேர்ப்பட்டைகளும் ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

**மற்ற பயன்கள்:**

மருத்தோன்றியின் இளஞ்சிவப்பு நிறச்சாயம் உள்ளங்கைகள், நகங்கள், பாதங்கள், தலைமுடி, தாடி, வால் மற்றும் மிருகங்களின் கால்களுக்கும் கூட நிறம் கொடுக்கப் பயன்படுகிறது. இது வேறு சில இயற்கைச் சாயங்களுடன் கலந்து தலைமுடிச் சாயமாகவும், துணிச்சாயமாகவும் உபயோகிக்கப் படுத்தப்படுகிறது. இதிலிருந்து கிடைக்கும் எண்ணெய் வாசனைத் தைலங்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

## 48. காட்டுப் புகையிலை (Lobelia)

**விஞ்ஞானப் பெயர் :** லோபேலியா நிக்கோட்டினேஃபாலியா (Lobelia nicotinaefolia)

குடும்பம் : லோபோலியேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — *நரசல்* |
| வங்காளி | — *பனதமாகு* |
| குஜராத்தி | — *நாலி* |
| கன்னடம் | — *காடுஹோகெசோப்பெலே* |
| மலையாளம் | — *காட்டுப் புகையிலா* |
| மராத்தி | — *தேவநால* |
| சமஸ்கிருதம் | — *பிபீஷண, தேவநால* |
| தெலுங்கு | — *அதாரிபோகக* |

இதன் வணிகப் பெயர் இத்தாவரத்தின் பொது இனப் பெயரை அடிப்படையாகக் கொண்டது. இதன் சிறப்புப் பெயரான நிக்கோட்டிஞ போலியா என்பது புகையிலைச் செடிபோன்ற இலைகள் என்ற பொருளுடையது.

**விளக்கம்:**

பெரிய மூலிகைச் செடியாகும். தண்டு சுமாராக, உள்ளீடற்று 3 முதல் 5 மீ. உயரத்தில், சமயங்களில், மேற்பகுதியில் கிளைகளுடன் காணப்படும். இலைகள் பெரிதாக 45 செ.மீ. நீளத்திலும், மேற்பகுதி சிறிய அளவிலும், ஓரங்கள் முற்றுப் பெருமலும் காணப்படும். இதன் நடுநரம்பு வெள்ளையாகக் காணப்படும். பூக்கள் பெரியவைகளாக வெண்மை நிறத்தில், முடிவில் பெருங்கொத்துக்களாகக் காணப்படும். பழங்கள் 8 மி.மீ. அளவில் உருண்டையாக இருக்கும். மஞ்சளாகவோ, பழுப்பாகவோ, சிறிய அளவில் அதிகமாகக் காணப்படும்.

**விளையும் இடம்:**

தக்காணப் பீடபூமியின் மலைச் சரிவுகளிலும், அதைச் சார்ந்த சமவெளிப் பகுதியிலும் விளைகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

அக்டோபர் அல்லது நவம்பரில் இத்தாவரத்தின் மேற்பகுதி சேகரிக்கப்பட்டு நிழலில் அவை உலர்த்தப் படுகின்றன. இதிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து நிகோடினை ஒத்துக் காணப்படும். இது மூச்சுக்குழல் அழற்சிக்கும், ஆஸ்துமா நோய்க்கும் பயன்படுகிறது. இம்மருந்து வியர்வைக்கும், குமட்டலுக்கும் அதன்பின் வாந்திக்கும் காரணமாகி, அதன்மூலம் அமைதியையும் ஏற்படுத்தும். இந்த மருந்து வாந்தி மூலம் வெளிவராவிடில், ஆபத்தானது; இதன் நச்சுத்தன்மையால் சாவு கூட நேரிடலாம். இம்மருந்திலுள்ள லோபேலின் என்னும் காரச்சத்து சுவாசத்தைத் தூண்டுவதால், அதிகமான நச்சுப் பொருள்களாலோ, மயக்க மருந்தாலோ, வாயுக்களாலோ மூச்சு தடைப்படும்பொழுது இம்மருந்து மூச்சோட்டத்துக்கு உபயோகிக்கப்படுகிறது. லொபெலியா நிக்கோட்டினே ஃபாலியாவின் மேற்பகுதியில் வெளியாகும் வெள்ளை நிறத்திரவம் தோலில் ஏற்படும் கொப்புளங்களைப் போக்குகிறது. உலர்ந்த நிலையில் இத்தாவரம் கொஞ்ச தூரம் தள்ளியிருந்தாலும் கூட மியூகஸ் தசைகளுக்கு (மூக்கு, தொண்டை)

எரிச்சலூட்டுவதால், தாவரங்கள் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ள கூலியாட்கள் இந்தத் தாவரங்கள் விளையும் எல்லைக்குள் அனுமதிக்கப்படுவதில்லை.

**மற்ற வகைகள்:**

**லொபெலியா இன்ஃபிளாட்டா** (L. Inflata) : அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட போதிலும், இந்தியாவிலும் பயிர் செய்யப்படுகிறது. தக்காணப் பீடபூமியும், அஸ்ஸாமும் இது பயிரிட ஏற்ற பிரதேசங்கள். லோபெலியா மருந்திலுள்ள லோபெலின் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனுல் இந்தியாவில் மேற்சொன்ன தாவரவகைகளிலிருந்து கிடைக்கும் மருந்து இதற்கு மாற்ருகப் பயன்படுகிறது. இந்தியாவின் ஆண்டுத் தேவை 50 குவிண்டால்களாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன் வேறு சில முக்கியமற்ற வகைகளும் இந்தியாவில் பயிரிடப்படுகின்றன.

## 49. இலுப்பை (Madhuca)

**விஞ்ஞானப் பெயர் :** மதுகா இண்டிகா.,
பேஸியா லாட்டிஃபோலியா
(Madhuca Indica, Bassia latifolia)

குடும்பம் : ஸப்போட்டேசி

சித்திரம்:18

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — மஹுவா, மஹுஆ |
| வங்காளி | — மஹுவா |
| குஜராத்தி | — மஹுதோ |
| கன்னடம் | — இப்பே |
| மலையாளம் | — பூனம், மது |
| மராத்தி | — மஹுவா |
| ஒரியா | — மொஹுகா |
| சமஸ்கிருதம் | — மதுகா, வனப்பிரஸ்த |
| தெலுங்கு | — இப்பா |
| சந்தால் | — மாத்கோம் |

வணிகப் பெயர் சமஸ்கிருதப் பெயரை அடிப்படையாகக் கொண்டது. வனப் பிரஸ்தா என்னும் பெயர் சில பழைய




இலுப்பை

இலக்கியங்களில் காணப்படுகின்றது. இதற்கு, காட்டில் வளா வது என்பது பொருள்.

**விளக்கம்:**

பருவகாலத்தில் இலையுதிர்க்கக் கூடிய, அடிமரம் சிறிதாக வும், மேற்பகுதி பெரித்தாகவும் காணப்படும் மரம் ஆகும். இலைகள் 12 முதல் 25 செ.மீ. நீளத்தில், தோல் போன்று தடித்தும், நுனி கூர்மையாகவும் காணப்படும். தெளிவாகத் தெரியும் நரம்புகளைக் கொண்டது. பூக்கள் சிறியவையாக, சதைப்பற்றுடன் வெளிறியோ லேசான வெண்மை நிறத் துட ஞ, கிளைகளுக்கருகில் கொத்தாகக் காணப்படும்; பூவின் காம்பு கீழ்நோக்கி வளைந்தும், பழுப்புநிற மயிரிழைகளால் மூடப்பட்டும் காணப்படும். பூக்கள் கஸ்தூரி மணத்துடன் விடிகாலையில் கீழே உதிரும். பழங்கள் 2.5—5 செ.மீ. நீளத்தில் சதைப் பற்றுடன், பச்சையாக இருக்கும்; விதைகள் 1 முதல் 4 செ.மீ நீளத்தில், பழுப்பு நிறத்தில் பளபளப்பாகக் காணப் படும்.

**விளையும் இடம்:**

இம்மரம் இந்தியாவின் சமவெளிப் பகுதிகளிலும், 1200 மீ.க்கும் தாழ்வான மலைச்சரிவுகளிலும் காணப்படும். இது இமயமலை அடிவாரத்தில் பரவலாகவும், சில இடங்களில் காட்டின் முக்கிய மரமாகவும் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இம்மரத்தின் மரப்பட்டை, இலைகள், பூக்கள் மற்றும் விதைகளிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இம் மரப்பட் டையின் கஷாயம் அரிப்பு, ரத்தம் ஒழுகும் ஈறுகள், மற்றும் குடல்புண்களுக்கு மேல் பூச்சாகவும் சர்க்கரை நோய்க்கு உட் கொள்ளும் மருந்தாகவும் பயன்படுகிறது. இலைகள் நோய்த்த டுப்பு சக்தி பெற்றிருப்பதால் அவற்றின் சாம்பல் நெய்யுடன் கலந்து தீக்காயங்களுக்கும் வேக்காட்டுக்கும் களிம்பாக உப யோகப்படுத்தப்படுகிறது. குளிர்ச்சியும் ஊட்டச்சத்துமுள்ள இதன் பூக்கள் சளி, மற்றும் மூச்சுக் குழங் அழற்சிக்குப் பயன்படுகின்றன. இதன் மூலம் தயாரிக்கப்படும் எரிபொருள் கலவை டானிக்காகவும், ஊட்டச்சத்தாகவும் பயன்படுகிறது. பூக்கள் நுண்ணுயிர் கொல்லித் தன்மையும் உடையவை. விதைகள் தாய்ப்பால் சுரப்பதையும், வெளிப்படுத்துவதையும்

அதிகரிக்கின்றன. விதைகளிலிருந்து கிடைக்கும் எண்ணெய் தோல் வியாதி மருந்தாகவும் பேதி மருந்தாகவும் பயன் படுகிறது.

**மற்றப் பயன்கள்:**

இலுப்பைப் பூக்கள் தனியாகவோ சமைத்தோ உண்ணப்படு கின்றன. ஆனால் அதிகமாக உட்கொண்டால் தொல்லை தரும். பூக்கள் அதிகமாக எரிசாராயம், புளிச்சாறு ஜாம் (Jams) தயாரிக்கப் பயன்படுகின்றன. இதன் எண்ணெய் சோப்பு தயாரிக்கவும், சமையலுக்கும் பயன்படுகிறது. இலுப்பைப் புண்ணாக்கு எருவாகவும், கால்நடைகளுக்கு உணவாகவும் உதவுகிறது. டென்னிஸ் விளையாட்டரங்கிலுள்ள மண்புழுக் களை நீக்கவும் பயன்படுகிறது. மரம் பல்வேறு விதமான சில்லறை வேலைகளுக்கும் பயன்படுகிறது.

**மற்ற வகைகள்:**

இத னோடு நெருங்கிய மற்ற வகைகளான மதுகா லோங்கி ஃபாலியா (Madhuca longifolia) தக்காண பீடபூமியில் காணப்படுகிறது; அவ்விடங்களில் இந்திய இலுப்பை என்று அழைக்கப்படுகின்றது. இத்தாவரத்தின் அனைத்துப் பகுதிகளி லும் இதன் மற்ற வகைகளைப் போன்று பயன்படுகிறது. இந்திய மருந்தியல் அகராதி இதிலிருந்து கிடைக்கும் மருந்துப் பொருட்கள், அங்கீகரிக்கப்பட்ட மருந்துக்கு மாற்றாகப் பயன் படுகிறது எனக் குறிப்பிடுகிறது.

## 50. கபிலப் பொடி (Kamela)

**விஞ்ஞானப் பெயர் :** மால்லோடுஸ் ஃபிலிப்பேன்ஸிஸ் (Mallotus Philippensis)

குடும்பம் : யூ ஃபார்பியேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — காமேலா, செந்தூரி, ரோகினி |
| அஸ்ஸாமி | — கங்கயி |
| வங்காளி | — கமலா, ரய்னி |

கபிலப் பொடி

| | | |
|---|---|---|
| குஜராத்தி | — | கபிலா |
| கன்னடம் | — | கேசலே, ரோணத்தை |
| மலேயாளம் | — | கபிலா, குங்கும |
| மராத்தி | — | சேந்தரி, கபிலா |
| ஒரியா | — | கமலகுண்டி |
| சமஸ்கிருதம் | — | சேந்துரி |
| தெலுங்கு | — | குங்கும |
| பீகார், சிங்க்பூம் | — | கஸர்ப |
| திருநெல்வேலி | — | கலுப்பட்டி |

வணிகப் பெயர் இந்தியப் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

எப்பொழுதும் பசுமையாக, சிறிய அல்லது நடுத்தர உயரத்துடன் காணப்படும் மரமாகும். இது சில சமயங்களில் அதிகக் கிளைகளுடன் கூடிய குத்துச் செடியாகவும் தோன்றும். முற்றுத இளம் பகுதிகள் நுண்மையான சிவப்பு மயிரிழைகளால் அடர்த்தியாக மூடப்பட்டிருக்கும். இலைகள் மாறி மாறி நீண்ட இலைக் காம்புகளுடன், வெவ்வேறுவிதமான வடிவங்களில் 7 முதல் 20 செ.மீ வரை நீளத்தில் இருக்கும்; கீழ்ப்பகுதியில் புள்ளிகளுடன் கூடிய சிவப்பான சுரப்பிகளுடனும், தெளிவாகத் தெரிகிற நரம்புகளுடனும் காணப்படும். பூக்கள் மிகவும் நுண்ணியவை; ஆண் பூக்களும், பெண் பூக்களும் தனித்தனித் தாவரங்களில் காணப்படும். பெண் பூக்கள் 5-8 செ.மீ. நீளமுள்ள நிமிர்ந்த காம்பிலிகளிலும் ஆண் பூக்கள் மஞ்சளாக 8-15 செ.மீ. நீளத்தில் கீழ்நோக்கிய கொத்துக்களிலும் காணப்படும். பழங்கள் 8-13 செ.மீ. உருண்டையாகவும், 3 பைகளுடனும், கருஞ்சிவப்பான தூளால் அடர்த்தியாகச் சூழப்பட்டும், எளிதில் அகற்றக்கூடிய நுண் மயிரிழைகளுடனும் காணப்படும்.

**விளையும் இடம்:**

இமயமலையில் 1500 மீ. உயரத்திலிருந்து தெற்கு நோக்கி கேரளா வரை உள்ள இந்திய நாட்டின் வெப்பப் பகுதி முழுதும் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

பழங்களிலிருந்து தனித்தனியாய் பிரிக்கப்படும் சிவப்புநிற உருண்டைப் பகுதியும், சிவந்த மயிரிழைகளும் மருந்துக்குப் பயன்படுகின்றன. கபிலப்பொடி பெரும்பாலும் நாடாப் புழுக்களை அகற்றப் பயன்படுகிறது. இது பொடியாக்கப்பட்டு பால் அல்லது தயிருடன் சேர்த்து உட்கொள்ளப்படுகிறது. ஒரு தேக்கரண்டி கபிலப்பொடி, புழுவை வெளியேற்றுது; ஆதலால் அதைத் தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். சில நேரங்களில் இறந்த புழுவை வெளியேற்ற விளக்கெண்ணெயும் உட்கொள்ள வேண்டி நேரலாம். கபிலப் பொடி ஒரு மலமிளக்கியுமாகும். இது தோல் வியாதிகளுக்கும் படர்தாமரை சொறிசிரங்கு போன்ற வியாதிகளுக்கும் மேற்பூச்சாக உபயோகப்படுத்தப்படுகிறது. இப்பழங்களிலுள்ள மயிரிழைகளை மிருகங்களுக்குக் கருத்தடைச் சாதனமாகக் உபயோகித்ததில், இவை பெண் எலிகள், பன்றிகளின் இனப்பெருக்கிச் சக்தியைக் குறைத்துள்ளது தெரிய வந்துள்ளது.

**மற்ற பயன்கள்:**

இம்மரம் கபில நிறம் தயாரிக்கப் பயன்படுவதால், நெசவாலைகளில், அதிகம் உபயோகப் படுத்தப்படுகிறது. இதிலிருந்து கிடைக்கும் எண்ணெய் வர்ணங்கள், வண்ண மெருகெண்ணெய் தயாரிக்கவும் மற்றும் பல வகைகளிலும் பயன்படுகிறது. உடனடியாக இது உலர்ந்து விடுவதால் வர்ணம் தயாரிக்கும் தொழிலில் இதற்கு மிகுதியான தேவை உள்ளது. மரம் எரிபொருளாகவும், மரச்சாமான்கள் தயாரிக்கவும், தீப்பெட்டிகள் தயாரிக்கவும் பயன்படுகிறது; இலைகள் கால்நடைத் தீவனமாகவும் விதைகள் பசுந்தாள் உரமாகவும் பயன்படுகின்றன. மரப்பட்டைகளிலுள்ள பதத்துவர், தோல் பொருட்களுக்கு நிறம் ஊட்டவும், சில மொழிகளில் இதற்கு வழங்கும் பெயர்கள் குறிப்பிடுவதுபோல இதன் (காமேலா) பொடி பெண்களிடும் செந்தூரமாகவும் பயன்படுகின்றன.

# 51. புதினாக் கீரை (Mint)

**மேன்த்தா வகை** குடும்பம்: லாபியேட்டி

**இந்தியப் பெயர்கள்:**

பெரும்பாலான மேன்த்தா வகைகள் புதினா என்ற பெயரா லேயே அழைக்கப் படுகின்றன.

மேன்த்தா வகையைச் சார்ந்த இத்தாவரங்கள் வாசனை தரும் மூலிகைச் செடிகளாகும். இவற்றில் சில வகைகள் இயற்கை யாய் வளரும் காட்டுச்செடிகள். வேறு சில வகைகள் பயிர் செய்யப்படுகின்றன. இவற்றின் முக்கியக் கூறான மென்த்தால் மற்றும் பெப்பர்மின்ட் எண்ணெய்க்காக இவை பெரிதும் மதிக்கப்படுகின்றன.

மென்த்தா ஆர்வென்ஸிஸ் (Mentha arvensis) (ஆங்கிலம் ஃபீல்ட்மின்ட், கார்ன்மின்ட் இந்தியப் பெயர் - பொதினா) செங்குத்தாக 60 செ.மீ. உயரம் வரை வளரக் கூடியது. இலைகள் 5 செ.மீ. நீளமுள்ளவை. இலைக்காம்புகள் சிறிதாகவோ, அல்லது இல்லாமலோ ஓரங்களில் பற்களுடன் காணப்படும். பூக்கள் சிறியவையாக, இளஞ்சிவப்பு நிறத்துடன் சிறிய கொத்துக்களாக, காம்புக்கவடுகளில் காணப்படும்.

இது 1500-3000 மீ. உயரத்தில் காணப்படுகிறது. சில இடங்களில் பயிர் செய்யப்படுகிறது. இலைச்சாறு கீல்வாத வலிக்கும், அஜீரணத்திற்கும் மருந்தாகப் பயன்படுகிறது. ஜப்பானிய வகையான மேன்த்தா ஆர்வேன்ஸிஸ் (Mentha arvensis) மற்றும் இவ்வகையின் ஒரு பிரிவான ஹாப்லோகா லிக்ஸ் (haplocalyx Briq.var. piperascens) ஜம்மு காஷ்மீரில் பயிரிடப்படுகிறது. இதிலிருந்து கிடைக்கும் எண்ணெய் ஜப் பான் புதினா எண்ணெய் அல்லது ஜப்பான் வாசனை எண்ணெய் என அழைக்கப்படுகிறது. இது உண்மையான வாசனை எண் ணெய்க்கு (மேந்த்தா பிபேரிட்டா) மாற்றாக உபயோகிக்கப்படு கிறது.

மேந்த்தா லோங்கி ஃபாலியா (Mentha longifolia) - இதன் பழைய பெயர் மேன்த்தா ஸில்வெஸ்ட்ரிஸ் (M. Sylvestris) - ஆங்கிலம் - ஹார்ஸ்மின்ட், இந்தி - ஜங்க்லி பொதினா; பஞ்சாபி - கோசு. நீளமான மூலிகைச் செடி; காஷ்மீர்,

பஞ்சாப், உத்திரப்பிரதேசத்தின் வட பகுதிகளில் கிடைக்கிறது. இது சீழ்த்தடுப்புக்கும், உணர்ச்சித் தூண்டலுக்கும் அஜீரணம் மற்றும் காய்ச்சல் தணிப்புக்கும் பயன்படுகிறது.

*அசல் பெப்பர்மிண்ட்:* மேன்த்தா பிப்பெரிட்டா (Mentha piperita) என்னும் பொதினு வகையே மிக முக்கியமானது. (ஆங்கிலம் - பெப்பர்மின்ட்; பஞ்சாபி - விலாயத்தி பொதினு) இந்தியாவின் பல பகுதிகளில் (காஷ்மீர், உத்திரப்பிரதேசம், மைசூர், சென்னை ஆகிய இடங்களில்) இது பயிர் செய்யப்படுகிறது. இச் செடியின் உலர்ந்த இலைகளிலிருந்தும், பூக்களின் மேற்பகுதியிலிருந்தும் 'பெப்பர்மிண்ட்' தயாரிக்கப்படுகிறது. இம் மருந்து வயிற்றுப் பொருமல், வாந்தி, வயிற்றுக் கடுப்பு, ஒற்றைத் தலைவலி இவற்றை நீக்கப் பயன்படுகிறது. பொடியாக்கப்பட்ட இலைகள் தலைவலிக்கும், மற்றக் காயங்களுக்கும் உபயோகப்படுத்தப் படுகின்றன.

இதன் முக்கியப் பயன் பெப்பர்மின்ட் எண்ணெய் எடுப்பதாகும்; மருத்துவத்தில், வயிற்றுக் கோளாறுகள், தலைவலி, வாதம் மற்றும் இதர வலிகளுக்காகத் தடவுகிற களிம்பு, இருமல் மருந்துக் கலவை, உறிஞ்சும் மருந்துகள், வாய் கொப்புளிக்கும் தைலங்கள் ஆகியவை தயாரிக்கப் பயன்படுகிறது. இந்த எண்ணெய் சீழ்த்தடுப்புச் சக்தி கொண்டது.

1976-77 இல் ரூ.30 லட்சம் மதிப்புள்ள பெப்பர்மிண்ட் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

## 52. சடாமாஞ்சில் (Jatamansi)

**விஞ்ஞானப் பெயர் :** நார்டோஸ்டாகிஸ் கிராண்டிஃபிளோரா (Nardostachys grandiflora) அல்லது நார்டோஸ்டாகிஸ் ஜடாமான்ஸி (N. Jatamansi)

குடும்பம் : வேலீரியேனேசி

**ஆங்கிலப் பெயர்கள் :** ஸ்பைக்நார்ட் (Spikenard)

**இந்தியப் பெயர்கள்**

| | |
|---|---|
| இந்தி | — *ஜடாமான்சி* |
| குஜராத்தி, வங்காளம் | — *ஜடாமான்சி* |
| காஷ்மீரி | — *பூத்ஜட்* |
| சமஸ்கிருதம், தெலுங்கு | — *ஜடாமான்சி* |

வணிகப் பெயர் இந்தியப் பெயரான 'ஜடாமான்சி'யை அடியொற்றியது; இப்பெயர் தாடி போன்று வளர்ந்து காணப் படும். அதன் வேர் முண்டுகளைக் குறிக்கும்.

**விளக்கம்:**

என்றும் பயிராகக் கூடிய 60 செ.மீ. உயரமுள்ள, நீளமான வேர்முடிகளுடன், வேர்முண்டுகள் மரம் போன்று கனமாக வும், இலைக்காம்புகளில் வாடிப்போன இலைகளுடனும் காணப்படும் ஒரு மூலிகையாகும். அடிமட்டக் கீழ் இலைகள் 20 செ.மீ. நீளத்திலும், இலைக்காம்பிலிருந்து குறுகியும் இருக் கும். மேற்பகுதி இலைகள் சிறியவையாகவும், பெரும்பாலும் நீள்வட்ட வடிவிலும் காணப்படும். பூக்கள் சிறியதாகவும் சிறுசிறு கொத்துக்களாகவும் காணப்படும். பழங்கள் சிறி யவை; மெல்லிய மயிரிழைகள் சூழக் காணப்படும்.

**விளையும் இடம்:**

இச்செடி இமயமலையின் 3000 - 4500 மீ. உயரத்தில், கிழக்கு நோக்கி, பூட்டான் வரை காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த வேர்முண்டுகளும், வேர்களும் மருந்து தயாரிக்கப் பயன்படுகின்றன. சடாமாஞ்சில் டானிக்காகவும் நோய்த் தடுப்பு மருந்தாகவும், உணர்ச்சித் தூண்டலுக்கும் பயன்படுகி றது. எனவே இது சில நேரங்களில் சில வகையான இழுப்பு நோய்களையும், வலிப்பு, இதயத்துடிப்பு ஆகியவற்றையும் சீராக்கவும், சிறுநீர்ப்போக்கு, மாதவிலக்கு, செரிமானம் இவற் றைச் சீராக்கவும், பேதிமருந்தாகவும் பயன்படுகிறது. இது 'வாலெரியாளு' வுக்கு (Valeriana Otticinalis) மாற்று மருந்தாக வும் பயன்படுகிறது. இந்தியாவின் ஆண்டுத் தேவை 20 குவிண்டால் ஆகும். இமயமலையின் உயரமான பகுதிகள் இதன் சாகுபடிக்கு ஏற்றவையாகக் கருதப்படுகின்றன.

# 53. துளசி (Tulsi)

**விஞ்ஞானப் பெயர்:** ஓசிமம் சாங்டம் (Ocimum sanctum)
குடும்பம் : லாபியேட்டி
**இந்தியப் பெயர்கள்:**
வண்ணப்படம்: 3

| | | |
|---|---|---|
| இந்தி | — | துல்சி |
| குஜராத்தி, வங்காளி | — | துல்சி |
| கன்னடம் | — | விஷ்ணு துல்சி |
| மலையாளம் | — | த்ரித்தாவு, துளசி |
| மராத்தி | — | துல்சி |
| சமஸ்கிருதம் | — | மஞ்சரி, கிருஷ்ண துளசி |
| தெலுங்கு | — | துளசி |

**விளக்கம்:**

இந்தியர்கள் அனைவரும அறிந்த புனிதமான தாவரமாகும். செங்குத்தாக 75 செ.மீ உயரம் வளர்கிறது. அதிகக் கிளைகளுடன் கூடிய மூலிகையாகும். முழுவதும் மயிரிழைகளால் சூழப்பட்டு இருக்கும். இலைகள் எதிரெதிராக 5 செ.மீ. நீளத்தில் ஓரங்கங்கள் முழுமையாகவோ, பற்களுட னு காணப் படும். மேலும், கீழும் மயிரிழைகளுடனும் புள்ளிபுள்ளியான நுண்ணிய சுரப்பிகளுடனும் வாசனை மிகுந்து காணப்படும். பூக்கள் சிறியவைகளாகவும், பழுப்பாக அல்லது சிவப்பாக, சிறுசிறு கொத்துக்களில், சிறிய மெல்லிய சுரப்பிகளுடன் காணப்படும். பழங்கள் சிறியவை; விதைகள் மஞ்சள் அல்லது சிவப்பாகக் காணப்படும்.

**விளையும் இடம்:**

இத்தாவரம் இந்தியா முழுவதும் வீடுகள், தோட்டங்கள், கோயில்களில் வளர்கின்றன; தோட்டங்களில் காடாக வளர்ந்து வெளிப்படரும் செடிவகையாகவும் பல நேரங்களில் காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

இலைகளும், விதைகளும் மருத்துவப் பண்புடையவை. இலைகளிலிருந்து கிடைக்கும் எண்ணெய் கிருமிகளையும், பூச்சி களையும் அழிக்கக்கூடியது. இலைகளின் சாறு, மூச்சுக் குழல்

அழற்சி, மூக்கடைப்பு, ஜீரணக் கோளாறுகளைச் சரிப்படுத்த வும் படர்த்தாமரை போன்ற தோல் வியாதிகளை நீக்கவும் பயன்படுகிறது; இதைக் காது வலியைப் போக்கக் காதுகளில் பிழியலாம். இதன் கஷாயம் தடுமனைப் போக்க வீடுகளில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. விதைகள் சிறுநீரக மண்டலத் தில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கவும், வேர்க்கஷாயம் மலேரியாக் காய்ச்சலின் போது வியர்வை பெருகச் செய்யவும் பயன்படுகிறது.

*மற்ற வகைகள்:*

***ஓசிமம் கானம் சிம்ஸ்:*** (Ocimum canum Sims) *(ஆங்கிலம் - ஹோரிபேஸில், இந்தி - காலி துலசி, ராம் துல்சி, பர்பரி)* இந்தியா முழுவதும், பொதுவாக ம்க்கள் வாழிடங்களின் அருகிலும், வயல் வெளிகளிலும் புறம்போக்கு நிலங்களிலும் காணப்படும். விதைகள் கறுப்பானவை. விதைகள் சத்து மருந்தாகவும், சிறுநீரை அதிகரிக்கவும் பயன்படுகின்றன. இதன் எண்ணெய் ஓசிமம் சாங்டத்தைப் போன்று அதே குணங்களைக் கொண்டது.

***ஓசிமம் பாசிலிகம் :*** (O. Basilicum) *(ஆங்கிலம் - ஸ்வீட் பேஸில், இந்தி - பபுயி துல்சி, சப்ஜா, சமஸ்கிருதம் - மஞ்சரீகி, தமிழ் - கற்பூரத்துளசி)* இயற்கையாகவே இந்தியா வின் வடமேற்குப் பகுதிகளிலும், மற்ற பகுதிகளிலும் பயிரி டப்படுகிறது. இது காய்ச்சல், சளி, புழுக்கள், வயிற்றுக் கோளாறுகள், கீல்வாதம் இவற்றிற்கு மருந்தாகப் பயன்படுகி றது. இலைச்சாறு மூக்கடைப்பை நீக்கவும், தோல் வியாதிக ளுக்கு மேற்பூச்சாவும் பயன்படுகிறது. விதைகள் மூல நோய், மலச்சிக்கல் இவற்றை நீக்க உள்ளுக்கு கொடுக்கப் படுகின்றன.

கிழக்கு ஆப்பிரிக்காவில் காணப்படும் ஓசிமம் கில்மண்ட ஷாரிகம் (Ocimum Kilimandscharicum) *(கற்பூரத்துளசி)* தற் போது சூடம் தயாரிக்க அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இது இந்தியாவில் காஷ்மீர், உத்திரபிரதேசம், மே.வங்களாம், மகாராஷ்டிரம், மைசூர், சென்னை, கேரளா ஆகிய இடங்களில் பயிரிடப்படுகிறது. இந்தியா முழுவதும் 1000 மீ. உயரத்தில் பயிரிடப்படுகிறது. உத்திரப்பிரதேசத்தில் தராய் பகுதி இதன் சாகுபடிக்கு ஏற்றது. கற்பூரம் வலி, சுளுக்கு, நீக்கப் பயன் படும் மருந்துகள் தயாரிக்க அதிகம் பயன்படுகிறது. கற்பூரம்

வேறுசில காரியங்களுக்கும் பயன்படுகிறது. இதன் ஆண்டுத் தேவை 4,00,000 குவிண்டால் ஆகும். இது ஓரளவு உள்நாட்டில் கிடைப்பதை வைத்தும், ஓரளவு இறக்குமதியின் மூலமும் சரி செய்யப்படுகிறது.

## 54. சிவதை (Turpeth)

விஞ்ஞானப்பெயர் : ஓபர்குலீனு டுர்பேத்தும்
(Operculina turpethum)
ஆங்கிலப்பெயர் : இந்தியன் ஜலாப் (Indian Jalap)

*சித்திரம்.19*

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — *நிசோத், பித்தோரி* |
| வங்காளி | — *தூதியா கல்மி* |
| குஜராத்தி | — *நஷோத்தர்* |
| கன்னடம் | — *பிலதிகிடே* |
| மராத்தி | — *நிஷோத்தர* |
| பஞ்சாபி | — *நிசோத்* |
| சமஸ்கிருதம் | — *த்ரிபுடி, காலபர்ணி* |
| தெலுங்கு | — *தேல தேகடா* |

வணிகப் பெயர் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

**சுற்றி வளரும், பால் போன்ற திரவத்துடன் கூடிய பெரிய மூலிகையாகும். வேர் நீளமாகவும், கிளைகளுடனும், சதைப்பற்றுடனும் இருக்கும். தண்டு சிறகு போன்று காணப்படும். இலைகள் 4-10 செ.மீ நீளத்திலும் 1.5-7 செ.மீ. அகலத்திலும் நீள் வட்டமாய், இதய வடிவில் இருக்கும். பூக்கள் வெள்ளையாக 4-5 செ.மீ. நீளத்தில், புனல் வடிவில், சிற்சில கொத்துக்களாகக் காணப்படும். புறவிதழ்கள் 2 செ.மீ. நீளத்தில் இருக்கும். செடியில் பழங்கள் தோன்றுகையில் இவை இன்னும் நீளமாகி, பழங்களைச் சூழ்ந்து மூடிக்கொள்ளும்.**




சிவதை

**விளையும் இடம்:**

இத்தாவரம் இந்தியா முழுதும் 1000 மீ உயர அளவு உள்ள இடங்களில் வளர்கிறது. தோட்டங்களில் அழகுக்காகவும் வளர்க்கப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த வேர்களில் மருத்துவப் பண்பு உள்ளது. இதன் வெள்ளைநிற வகையின் வேர்கள் மட்டுமே இதற்கு ஏற்றவை. வேர்கள் சிதையாமல் பழுதுபடாமல் எடுக்கப்படுவது முக்கியம். இதில் 'டர்ப்பெத்தின்' என்னும் சத்து உள்ளது. டர்பித், ஜலாப் போன்று அதே குணங்களைக் கொண்டது; பொடியாக்கப்பட்ட வேர்கள் மலமிளக்கியாய்ப் பயன்படுகின்றன. சந்தையில் கிடைக்கும் சிவதை, வேர்களுடன் தண்டும் தழையும் கலந்ததாக இருக்கும்.

## 55. சீமையரவந்தி (Harmal)

**விஞ்ஞானப் பெயர்** : பேகானும் ஹார்மாலா (Peganum harmala)

குடும்பம் : ருட்டேசி

ஆங்கிலப் பெயர் : வைல்ட் ரூ

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — *சந்த்ய, ஹர்மல்* |
| வங்காளி | *ஸ்பந்த்* |
| குஜராத்தி | — *ஹர்மர், இஸ்பன்* |
| மலையாளம், பஞ்சாபி | — *ஹர்மல்* |
| தெலுங்கு | — *ஸிமாகோரண்ட்டி* |

வணிகப் பெயர் இந்தியப் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

30-90 செ.மீ. உயரமுடையதும். 5.8 செ.மீ நீளமுடைய இலைகளுடன் கூடியதும் குறுகிய எண்ணற்ற பகுதிகளாகப் பிரிவுபட்டதுமான குத்துச் செடியாகும். பூக்கள் குறுக்கு

வாட்டில் 3.3 செ.மீ அளவில் மென்மையாக, காம்புக்கவடுக ளில் தனியாகக் காணப்படும். பழங்கள் உருண்டையாக, 5.8 செ.மீ. நீளத்தில் கரும்பழுப்பு நிறத்தில், பல்வேறு வடிவங்க ளுடன், விதையுறைகளுடன் காணப்படும்.

**விளையும் இடம்:**

வறண்ட தக்காணப் பகுதியிலும், வடக்கு, வடமேற்குப் பகுதிகளிலும், காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இதன் உலர்ந்த விதைகள் ஹர்மல் என்கிற மருத்துவப் பண்பு கொண்டவை. விதைகளில் பல கார குணங்கள் கலந்துள்ளதால் அவை ஆஸ்த்துமா, மனநோய், வாதம், பித்தக்கற்கள், வயிற்றுவலி, காய்ச்சல், மஞ்சள் காமாலை மற்றும் மாதவிடாயின் போது ஏற்படும் வலி இவற்றை நீக்கப் பயன்படுகின்றன. இவை மயக்க மருந்தாகவும், குடற்புழு அகற்றும் மருந்தாகவும் வாந்தி வெளிக் கொணரும் மருந்தாக வும் பயன்படுகின்றன. இவற்றிலிருந்து கிடைக்கும் கார குணங்களான ஹர்மலீன், யாகீன், ஹர்மீன் முதலியவை மயக்கத் தன்மையை ஏற்படுத்தும் மருந்தாகப் பயன்படுகின் றன. இது செயல் நரம்பு மண்டலத்தையும் மத்திய நரம்பு மண்டலத்தையும் தூண்டுகிறது. அதிகமாக இதை உட்கொண் டால் நஞ்சாகும்; நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும். நுண்ணு யிர்களை அழிக்கும் சக்தியை இம்மருந்து பெற்றுள்ளதை லாபரேட்டரி பரிசோதனைகள் உறுதி செய்துள்ளன. ஆனால் மலேரியாவைக் குணப்படுத்தும் சக்தி இம்மருந்துக்கு இல்லை யென்பதும் தெரிய வந்துள்ளது.

**மற்ற பயன்கள்:**

இதன் விதைகள் சிவப்புச்சாயம் (dye) தயாரிக்கப் பயன்படு கின்றன. பொடியாக்கப்பட்ட வேர் கடுகு எண்ணெயுடன் சேர்த்து பேன்களைக் கொல்லப் பயன்படுகிறது. இதை அறை களில் வைத்திருந்தால் கொசுக்களை அகற்றும்.

## 56. உத்தாமணி (Pergularia)

**விஞ்ஞானப்பெயர் :** பெர்குலாரியா டேமியா
(Pergularia daemia forsk. chiov)

குடும்பம் : ஏஸ்கலிபியேடேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — *உதரன், உதரணி, சதோவனி* |
| வங்காளி | — *சாகுல்பட்டி* |
| குஜராத்தி | — *சமார்தூதி, நாகலாதூதி, வேட்லா(ன்)வல்* |
| மராத்தி | — *உதரனி* |
| பஞ்சாபி | — *கரியால்* |
| சமஸ்கிருதம் | — *யுகம்பலா* |
| தெலுங்கு | — *டுபதிகே* |
| மத்தியப்பிரதேசம் | — *கட்வா டோட், கோல்கக்டி* |

**விளக்கம்:**

சுற்றி வளரும் மூலிகையாகும். தண்டு பாலுடனும் மயிரிழைகளுடனும் காணப்படும். இலைகள் 4-6 செ.மீ. நீளத்தில், சில சமயங்களில் இன்னும் அதிக நீளமாக, நீள்வட்டமாகவோ, வட்டமாகவோ இருக்கும்; கீழ்ப்பகுதி மயிரிழைகளுடனும் அடிப்பகுதி இதயவடிவில் ஆழ்ந்த உள் வளைவான வடிவிலும் காணப்படும். பூக்கள் வெளிறியோ, வெண்மையாகவோ சிறிதாக, சிறு கொத்துகளில் காணப்படும். பழங்கள் இரட்டையாகப் பின் ஞக்கி வளைந்து 5.8 செ.மீ. நீளத்திலும் 7.3 செ.மீ. அகலத்திலும் மேற்பகுதியில் முட்களுடனும் காணப்படும்.

**விளையும் இடம்:**

இந்தியா முழுவதும் 1000 மீ. உயரம் வரையுள்ள இடங்களில் காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

தாவரம் முழுவதும் மருந்து தயாரிக்கப் பயன்படுகிறது.

இலையிலிருந்து எடுக்கப்படும் சாறு மூக்கடைப்புக்கும், குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுக் கடுப்பைப் போக்கவும் பயன்படுகிறது. அமீ னூரியா (amenorrhoea) மற்றும் வாதச் சிகிச்சையில் தரப்படும் ஒரு வகை பேதி மருந்து தயாரிக்கவும் பயன்படுகிறது. இது கருப்பைக்கான சத்து மருந்தாகவும், கபத்தையும் வாந்தியையும் வெளிக் கொணர உதவும் மருந்தாக வும் பயன்படுகிறது. கருப்பைக்கு உதவும் சத்து மருந்தாக இது பயன்படுவது பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள் ளது. மகப்பேற்றின்போது ஏற்படும் அதிகமான இரத்த வெளியேற்றத்தைத் தடுக்க இது பயன்படுகிறது. இதிலுள்ள சக்தி வாய்ந்த மூலப் பொருளான *பெர்குலாரியா* (Pergularia) பிட்யூட்ரினைப் போலச் செயல் புரிகிறது.

## 57. கடுகு - ரோகணி (Picrorhiza)
### *(குட்கி)*

**விஞ்ஞானப் பெயர் :** *பிக்ரோரிஸா குர்ரோவா* (Picrorhiza kurroa Royle ex Benth)

குடும்பம் : ஸ்க்ரோஃபுலேரியேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| *இந்தி* | — *குட்கி, குரு* |
| *வங்காளி* | — *கட்கி* |
| *குஜராத்தி* | — *கடூ* |
| *காஷ்மீரி* | — *கரு* |
| *மலையாளம்* | — *கடுக ரோஹணி* |
| *மராத்தி* | — *குடகி* |
| *பஞ்சாபி* | — *காலி குட்கி* |
| *சமஸ்கிருதம்* | — *கடுகி* |
| *தெலுங்கு* | — *கடுக ரோணி* |

பிக்ரோரிஸா என்னும் வணிகப் பெயர் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

பாளை வடிவிலான, 5-10 செ.மீ. நீள இலைகளுடன் கூடிய, சிறிய மூலிகைச் செடியாகும். வேர் முண்டுகள் 15-25 செ.மீ. நீளத்தில் மரம் போன்று கனத்துக் காணப்படும். பூக்கள்

சிறியவையாக, உருளை வடிவக் காம்பிலிகளில் தோன்றும்; இந்தக் காம்பிலிகள் பெரும்பாலும் இலைகளற்ற செங்குத்தான தண்டுகளில் காணப்படும். பூக்கள் இரண்டு வகையாக, 8 மி.மீ. நீள மகரந்தத் தாள்களில் இழையாக சிலவும், 2 மி.மீ. நீள மகரந்தத் தாள்களில் இழையாக சிலவும், பழங்கள் 1.3 செ.மீ. நீளத்திலும் காணப்படும்.

**விளையும் இடம்:**

காஷ்மீரில் இருந்து சிக்கிம் வரை உயர்ந்த மலைச்சரிவுகளில் 3000-4000 மீ. உயரத்தில் காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த வேர்முண்டுகளிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இது கசப்பான சத்து மருந்தாதலால் இது முறைநோய்த் தடுப்பு மருந்தாகவும் பித்த நீரை அதிகம் சுரக்க வைக்கவும் பயன்படுகிறது. இது ஜென்ஷியன் போன்று (Gentiana lutea L) அதே குணங்களைக் கொண்டது. பசியை அதிகரித்து வயிற்றுச் சுரப்பிகளை அதிகம் சுரக்க வைக்கிறது. மகோதரத்தைக் குணப்படுத்தும் மருந்தாகவும் பயன்படுகிறது. இதன் நோய் எதிர்ப்புச் சக்தி பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதன் இந்தியத் தேவை 40 குவிண்டால் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இமயமலைப் பகுதியின் 3000-4000 மீ. உயரம் வரை உள்ள இடங்கள் இதைப் பயிரிட ஏற்றவை. இது ஜென்ஷியனுக்கு முக்கிய மாற்று மருந்தாக உபயோகிக்கப்படுகிறது.

## 58. சீமைத் தேவதாரு (Pine)

*(சீல்)*

**விஞ்ஞானப் பெயர் :** பைன்ஸ் ராக்ஸ்புர்கி (Pinus roxburghii Sargent)

குடும்பம்: கோனிஃபேரி

**இந்தியப் பெயர்கள்:**

இந்தி — சீர்

அஸ்ஸாமி — தேல்வியா

வங்காளம் — ஸரல்காச்
பஞ்சாபி — சில்

ராக்ஸ்புர்கி என்னும் இதன் சிறப்புப் பெயர் ராக்ஸ்புர்க் என்னும் தாவரவியலாளரின் (இந்தியத் தாவர இயலின் தந்தை) பெயரைப் போற்றிச் சூட்டப் பட்டுள்ளது.

**விளக்கம்:**

ஊசி போன்ற இலைகளுடன் கூடிய பெரிய மரமாகும். இலைகள் 25-30 செ.மீ. நீளத்தில் மூன்று கொத்தாகக் காணப் படும். ஆண் பூக் கூம்புகள் சிறியவையாகவும், பழுக்கும் பெண் பூக் கூம்புகள் 10-20 செ.மீ. நீளத்தில் கூம்பு வடிவத்தி லும் காணப்படும்.

**விளையும் இடம்:**

இமயமலையின் தாழ்பகுதிகளிலும், இந்தியாவின் பிற குன்று களிலும் காணப்படுகிறது. அழகுக்காகவும் வளர்க்கப் படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இம்மரத்திலிருந்து டர்பன்டைன் என்னும் மெழுகுப் பொருள் கிடைக்கிறது. டர்பன்டைனை உருக்கிச் சுத்தப்படுத்து வதன் மூலம் டர்பன்டைன் எண்ணெய் கிடைக்கிறது.

மருத்துவ ரீதியாக இதன் பயன், இதன் எரிச்சலூட்டும் குணத்திலிருந்து உருவாவது. தீவிரமான கபத்தை வெளிக் கொணரவும் மூச்சுக் குழல் அழற்சியை நீக்கவும் இதைக் குறைந்த அளவில் பயன்படுத்தலாம். வயிற்று உப்புசத்தையும் குணப்படுத்துகிறது. இது டைஃபாய்ட் காய்ச்சலை ஓரளவு கட்டுப்படுத்தவும், மூக்கு, பல் ஈறுகளில் ஏற்படும் இரத்தக் கசிவைத் தடுக்கவும் உதவுகிறது. எனிமாவாக உபயோகிக்கப் படும்பொழுது மலச்சிக்கலைக் குணப்படுத்துகிறது. இது பொதுவாக வாதநோய்க்கு மேற்பூச்சு மருந்தாகவும் பயன்படு கிறது. டர்பன்டைன் ஆவிபிடித்தல் மூச்சுக்குழல் அழற்சிக்கு மிகவும் பயனுள்ளது.

**மற்ற பயன்கள்:**

இம்மரம் வீடுகட்டவும், மரச்சாமான்கள் செய்யவும் தேயி லைப் பெட்டி, தீப்பெட்டி, விளையாட்டுப் பொருட்கள்,

வாத்தியக் கருவிகள் தயாரிக்கவும் பயன்படுகிறது. பெரோஜா என்னும் இதன் பசை வளையல்கள் தயாரிக்கவும், மரப்பட்டை களுக்கு நிறமளிக்கும் பதத்துவர் தயாரிக்கவும் பயன்படுகிறது.

## 59. பிப்பிலி (Long Pepper)

**விஞ்ஞானப் பெயர் :** பீப்பர்லோங்கும் (Piperlongum L.)
குடும்பம் : பயிபரேசி
***இந்தியப் பெயர்கள்:***

| | |
|---|---|
| இந்தி | — *பீப்பல், பீப்லி* |
| அஸ்ஸாம் | — *பீப்லு* |
| வங்காளி | — *ஜத்யா, பீபுல்* |
| குஜராத்தி | — *பீப்லி* |
| ச்மஸ்கிருதம் | — *பிப்பலி, மாகதி* |
| தெலுங்கு | — *பிப்பிலி* |
| (ஜல்பைகுரி | — *சாவப்பா)* |

வால்மிளகு (Long pepper) என்னும் ஆங்கிலப் பெயரான வணிகப் பெயர் மிளகு என்னும் பெயரை ஒட்டி எழுந்ததா கும். இதிலுள்ள முட்கள் மிக நீளமாகவிருப்பதால், இதன் மற் ருரு வகையான பீப்பர் நீக்ரும் என்பதிலிருந்து வேறுப டுத்த முடிகிறது. பழைய இலக்கியங்களில் இது மாகதி என்றழைக்கப்படுவதன் காரணம் இத மகத நாட்டில் (வடபீ ஹார்) காணப்பட்டது என்பதைக் குறிப்பதற்காக இருக்கலாம்.

**விளக்கம்:**

தரையில் பற்றிப் படர்வதுடன் மேலே ஏறக்கூடிய சிறிய வாசனைத் தாவரமாகும். கீழ்ப்பகுதி இலைகள் 6-10 செ.மீ. நீளத்தில், அகன்ற நீள்வட்ட வடிவிலும், அடிப்பகுதி இதய உருவில் பெரிய மடல்களுடனும் காணப்படும். மேல்பக்க இலைகள் நீள்வட்டமாகவும், இதய வடிவிலும் காணப்படும். மேற்பகுதி இலைகள் அடர்ந்த பச்சை நிறத்துடன் பளப்பளப் பாகவும் கீழ்ப்பகுதியில் வெளிறியும் காணப்படும். இலையடிச் செதில்கள் தெளிவாகத் தெரியக்கூடியவை. 1-3 செ.மீ. நீளத் தில், உடனே விழுந்து விடக்கூடியவை. பூவின் காம்பிலிகள் தனியாகவும், ஆண் பூவடிச்செதில் குறுகியும், பெண் பூவடிச்

செதில் வட்டமாகவும் காணப்படும். பழங்கள் நீள் வட்டவடிவில் சிறியவையாகவும், சதைப்பிடிப்புள்ள காம்பிலிப் பகுதியில் மறைந்தும், 2.5-4 செ.மீ. நீளத்தில் நீள் வட்டமாகவும் கரும் பச்சையாகவும், பளபளப்பாகவும் காணப்படும்.

**விளையும் இடம்:**

இந்தியாவின் வெப்பமான பகுதிகளில் இது வளர்கிறது. சில இடங்களில் பயிரிடப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

பிப்பிலியின் உலர்ந்த பழங்களிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இது சத்து மருந்தாகவும், எரிச்சலூட்டும், மூக்குப் பொடி தயாரிக்கவும், வாத நோய்களுக்குத் தைலமாகவும் பயன்படுகிறது. உலர்ந்த முற்றுத பழங்களிலிருந்து தயாரிக்கப்படும் கஷாயம் மூச்சுக்குழல் அழற்சியை நீக்கவும், பழுத்த பழங்கள் வாசனைப் பொருளாகவும், வயிற்று உப்புசத்திற்கு மருந்தாகவும், வயிறு சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் பயன். படுகிறது. இலைகள், பழங்களின் நோய் எதிர்ப்புச் சக்தி பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. 1977-78ல் பிப்பிலி ரூ. 2 லட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**மற்ற வகைகள்:**

**கல்லுவல்லி:** மற்றொரு முக்கியமான வகை 'பீப்பர் நிக்ரும்' அல்லது கருப்புபிப்பிலி ஆகும். (வங்காளி, இந்தி- கோல் மிர்ச், காலி மிர்ச், தக்னி மிர்ச்; சமஸ்கிருதம் - கபவிரோதி) பெரும்பாலான இந்தியப் பெயர்கள் அதன் வடிவத்தையோ (கோல் உருண்டையான) நிறத்தையோ (காலி-கருப்பு) குறிக்கின்றன. சமஸ்கிருதப் பெயர் இதன் பயனைக் குறிக்கிறது.

இது மிகப்பெரிய கொடியாகும். பெரிய, அகன்ற, வட்டமான அல்லது நீள்வட்டமான இலைகளைக் கொண்டது. பூக்கள் நீண்ட காம்பிலிகளில் காணப்படும். பழங்கள் சிறியவையாக உருண்டையாக 6-7 மி.மீ. குறுக்கு வெட்டில், மஞ்சளாகவும், பழுத்தவுடன் சிவப்பாகவும் காணப்படும்.

பழுக்காத உலர்ந்த பழங்கள் கருப்புப் பிப்பிலி மருந்து தயாரிக்கப் பயன்படுகின்றன. இது உணர்ச்சியூட்டவும், வயிற்று உப்புசம், வயிற்றுக் கோளாறுகளுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. இதை அதிகமாக உட்கொண்டால் வெப்பத்தையும், வியர்வையையும் பெருக்கும். சிறுநீரைப் பெருக்கும்

ஆற்றல் கொண்டது எனினும் சிறுநீரகத்தில் எரிச்சலை ஏற்படுத்தும். இதன் விதைகளின் நோய் எதிர்ப்புச் சக்தியைச் சில பரிசோதனைகள் நிரூபித்துள்ளன.

கரும் பிப்பிலி சமையலில் வாசனைப் பொருளாகவும், வயிற்று உப்புசம் அகற்றும் மருந்தாகவும் பயன்படுகிறது.

1977-78இல் ரூ. 50 கோடி மதிப்புள்ள கரும்பிப்பிலி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

பீப்பர் கியூபெபா-(Piper cubeba) - கூபெப் (ஆங்கிலம்), சீதல்சீனி (இந்தி) தென் கிழக்கு ஆசியாவைத் தாயகமாகக் கொண்டது. இதிலிருந்து கிடைக்கும் எண்ணெய் சிறுநீரக மண்டலத்தில் ஏற்படும் குறைகளை நீக்குகிறது. இதன் ஆண்டுத் தேவை 200 குவிண்டால் ஆகும். கிழக்கு மற்றும் தென் இந்தியா இதனைப் பயிர் செய்ய ஏற்றதாக கருதப்படுகிறது.

## 60. இஷப்குல் (Ishabgul)

*விஞ்ஞானப் பெயர் : பிளான்டாகோ ஓவாட்டா* (Plantago Ovata)

*வண்ணப்படம்: 4*

குடும்பம்: பிளான்ட்டேஜினேசி

**இந்தியப் பெயர்கள்:**

இதன் பொதுவான சமஸ்கிருதப் பெயரே (இஷப்கோலா அல்லது இஸப்கோல்) சிற்சில மாற்றங்களுடன் இச் செடியைக் குறிக்க இந்தியாவெங்கிலும் பயன்படுகிறது.

**விளக்கம்:**

பெரும்பாலும் தண்டற்ற ஒரு சிறிய மூலிகையாகும். அடர்த்தியான மெல்லிய மயிரிழைகளால் சூழப்பட்டு இருக்கும். இலைகள் 8-25 செ.மீ. நீளத்திலும், மிகவும் குறுகியும் அமைந்திருக்கும். பூக்கள் மிகச் சிறியவையாக, நீள்வட்டமாகவோ, உருளைவடிவலோ ஆன காம்பிலிகளில் காணப்படும். 1.5-4 செ.மீ. நீளமுள்ளது. பழங்கள் 8 மி.மீ. நீளத்தில் இருக்கும், மேற்பகுதி மூடியைப் போன்று பிரித்தெடுக்கக் கூடியதாக இருக்கும். விதைகள் படகு வடிவில் இருக்கும்.

**விளையும் இடம்:**

இத்தாவரம் இயற்கையாக வடமேற்கு இந்தியாவிலும், பெருமளவு மற்றப் பகுதிகளிலும் பயிர் செய்யப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இத்தாவரத்தின் விதைகளிலிருந்து (மற்ற இதன் வகைகளைப் போன்று) மருந்து தயாரிக்கப்படுகிறது. விதைகளில் அடங்கியுள்ள தாவரப் பசைப் பொருளும் வெண்கரு அடங்கிய மூலச்சத்துமே இதன் மருத்துவ குணங்களை உருவாக்குவன.

இது பல்வேறு வகையான நுண்ணுயிர்களாலும், நோய் நுண்மங்களாலும் ஏற்படும் நாட்பட்ட வயிற்றுக் கடுப்பிற்கும் பயன்படுகிறது. இது சளிச்சவ்வு மற்றும் மலச்சிக்கலுக்கு ஏற்றது. பயன்படுத்துமுன், விதைகள் தண்ணீரில் ஊறவைக்கப் படவேண்டும். அப்போதுதான் மருந்து உடனடியாக உணவுக் குழலில் கலந்துவிடும். இல்லையென்றால் முழுவிதைகள் எரிச்சலை உண்டுபண்ணி, குடலின் வேலையைப் பாதிக்கும். இவ்விதையிலுள்ள அதிகப்படியான பசைச்சத்து உணவுப் பொருளுடன் கலந்து, மலத்தை அதிகரிக்கச் செய்கிறது; அத்துடன் எளிதில் வெளியேறவும் செய்கிறது. இது இயந்திர ரீதியான ஒரு இயக்கமே தவிர, உடல் ரீதியானதல்ல.

இஷப்குல் ஹஸ்க் (இந்தி- இஸப்கோல்-கீ-பூஸி) பிளான்ட்டாகோ ஓவாட்டாவின் உலர்ந்த விதைத்தோல் ஆகும், இது. விதைகளைப் பொடியாக்கி உமியைத் தனியாகப் பிரிப்பதன் மூலம் கிடைக்கிறது. இதுவும் விதையைப் போன்று அதே குணங்களைக் கொண்டது. ஆனால் அதைப்போன்று உணவுக்குழலில் இது எரிச்சலை ஏற்படுத்துவதில்லை. எனவே இது நீரில் ஊறவைக்கப் படாமல் அப்படியே உட்கொள்ளப்படுகிறது. இதன் விதைக் கரு எண்ணெயில் 50 சதவீதம் லாயி னலிக் அமிலம் உள்ளது. தமனி இறுக்கத்தைத் தளர்த்துகிறது. இந்த எண்ணெயானது சஃபோலா எண்ணெயைவிடவும், ரத்தத்திலுள்ள கொழுப்பைக் குறைக்க வல்லதென, முயல்களுக்குக் கொடுத்துப் பரிசோதித்ததில் தெரிய வந்துள்ளது.

இந்தியா ஒவ்வொரு ஆண்டும் ரூ.18 கோடி மதிப்புள்ள விதைகளையும் உமியையும் ஏற்றுமதி செய்கிறது.

## 61. இந்திய மஞ்சள் குங்கிலியம் (Indian Podophyllum)

விஞ்ஞானப்பெயர் : போடோஃபில்லும் ஹெக்ஸ்ஆன்ட்ரம் (Podophyllum hexandrum Royle)

குடும்பம்: பெர்பேரிடேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | - | பன்பைங்கன், பாப்ரி |
| குஜராத்தி | - | வேனிவேல் |
| காஷ்மீரி | - | பன்பைங்கன் |
| மராத்தி | - | பட்வேல் |
| பஞ்சாபி | - | பன்கக்டி, கல்கக்டி |

இதன் வணிகப் பெயர் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

சாறுகட்டிய, படரும் வேர்களைக் கொண்ட நீண்ட மூலிகையாகும். பூக்கும் கிளைகள் செங்குத்தாகவும், மேற்பகுதியில் இலையுடனும் காணப்படும். இலைகள் இரண்டாக, 15-25 செ.மீ. குறுக்கு வெட்டில் 3-5 மடல்களுடன் காணப்படும்; ஓரங்கள் பற்களுடனும், பழுப்புநிறப் புள்ளிகளுடனும் காணப்படும். பூக்கள் 2.5-5 செ.மீ. குறுக்கு வெட்டில் வெண்மை அல்லது இளஞ்சிவப்பில், கிண்ணம் போன்ற வடிவில் தனித்துக் காணப்படும். பழங்கள் நீள் வட்டமாக, 2.5-5 செ.மீ. அளவில், சிவப்பாகக் காணப்படும்.

**விளையும் இடம்:**

இமயமலையில் உட்பகுதியில் 3000-4000 மீ. உயரமுடைய மலைச்சரிவுகளில் காணப்படும். காஷ்மீரில் 1800 மீ. உயரத்தில் கிடைக்கிறது.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த வேர்முண்டுகளிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இதன் வேர்முண்டுகளிலிருந்து மஞ்சள் குங்கிலியம்

கிடைக்கிறது. இது மெதுவாக ஆனால் தீவிரமாகச் செயல்புரியும் பேதிமருந்தாகும். இதை அதிகமாக உட்கொண்டால் எரிச்சலையும் வயிற்றில் வேதனையையும் ஏற்படுத்தும். இது பெரும்பாலும் பெல்லடோனா அல்லது அலோயே (Aloe) உடன் சேர்த்து உபயோகப்படுத்தப் படுகிறது.

மஞ்சள் குங்கிலியம் பல்வேறு தோல் வியாதிகளையும், கொப்புளங்களையும் குணப்படுத்தும் எனக் கூறப்பட்டுள்ளது. புற்று நோய்த் திசுக்களை அழிக்கும் இதன் சக்தி பற்றி ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. இதன் இந்தியத் தேவை ஆண்டுக்கு 40 குவிண்டால் எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

இதன் அமெரிக்க வகையான போடோஃபில்லும் பெல்டாட்டம் (Podophyllum peltatum) சில இடங்களில் பயிரிடப்படுகிறது. *1500-3000 மீ. உயரத்தில், காஷ்மீர், ஹிமாசல் பிரதேசம்,* பஞ்சாப், உத்திரப்பிரதேசம், சிக்கிம் ஆகிய இடங்களில் இமயமலையை அடுத்த பிரதேசங்கள் இதனைப் பயிராக்க ஏற்றவை.

## 62. கார்போகரிசி (Psoralea)

*(பாப்சி)*

**விஞ்ஞானப் பெயர் :** சோராலேயா கோரீலி ஃபோலியா (Psoralea Corylifolia L)

குடும்பம்: பைப்பீலியோனேசி — வண்ணப்படம்: 5

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — பாப்சி |
| வங்காளி | — லடகஸ்தூரி, ஹாகூச் |
| குஜராத்தி | — பாவச்சி |
| மராத்தி, பஞ்சாபி | — பாப்சி |
| சமஸ்கிருதம் | — சுகந்த கண்டக் |
| தெலுங்கு | — காலா கிஜா |
| உருது | — பகுசி |

வணிகப் பெயரான சோரலியா மற்றும் பாப்சி என்பது அறிவியல் மற்றும் இந்தியப் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

செங்குத்தாக வளரும், அடர்த்தியான சுரப்பிகளுடன் கூடிய

கிளைகளைக் கொண்ட, மூலிகையாகும். இலைகள் வட்டமாக, இருபக்கமும் கருஞ்சுரப்பிப் புள்ளியுடன் காணப்படும்.

பூக்கள் சிறியவையாக, இளஞ்சிவப்பும் நீலமும் கலந்த நிறத்தில், ஒரு கொத்துக்கு 10-30 பூக்களுடன் இலைக் காம்புக்கவடுகளில் காணப்படும். பழங்கள் கருப்பு; வட்டமாக அல்லது நீள்வளையுருவில் இருக்கும்; வழவழப்பான ஒரே ஒரு விதை.

**விளையும் இடம்:**

இந்தியா முழுவதும் களைச் செடியாகப் புறம்போக்கு இடங்களில் வளர்கிறது. சில இடங்களில் பயிர் செய்யவும் படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இத்தாவரத்தின் விதைகளிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இவ்விதையிலுள்ள முக்கியமான எண்ணெய், தோல் வியாதியை ஏற்படுத்தும் நுண்ணுயிர்களை அழிக்கக்கூடிய சக்தி வாய்ந்தது. எனவே, இம்மருந்து வெண்சருமத்திற்கும் தொழுநோய்க்கும் மேல்பூசும் களிம்பாகப் பயன்படுகிறது. சில நேரங்களில் உள்ளுக்குக் கொடுக்கப்படுகிறது. விதைகள் சிறுநீரை அதிகமாக வெளியேற்றவும், புழுக்கொல்லியாகவும் பயன்படுகின்றன. இதன் புழு கொல்லும் சக்தியும், நோய் எதிர்ப்புச் சக்தியும் சோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன.

விதையிலிருந்து கிடைக்கும் எண்ணெய்க்கொழுப்பு சிஃபிலிஸ் கிருமிகளால் ஏற்படாத மற்ற வகை வெண் சருமத்தைக் குணப்படுத்தும். தொழுநோயைக் குணப்படுத்தும் இதன் தன்மையை நினைத்து இதனை குஷ்டநாசினி என்று அழைக்கின்றனர். வேர்கள் பற்சொத்தைக்கும் இலைகள் வயிற்றுக் கடுப்புக்கும் நல்லவை.

## 63. இந்திய வேங்கை மரம் (Indian kino)

**விஞ்ஞானப்பெயர் :** டெரோ கார்ப்பஸ் மார்சூப்பியம் (Pterocarpus marsupium Roxb)

குடும்பம்: பைப்பீலியோனேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | - *பியாசால், பீஜாசால்* |
| குஜராத்தி | - *பிப்லா* |

| | | |
|---|---|---|
| கன்னடம் | - | வல்லேஹொன்னே |
| மலையாளம் | - | கீ ஞ |
| மராத்தி | - | ஹோனி |
| சமஸ்கிருதம் | - | மகாகுடஜ் |

வணிகப் பெயர், கீ ஞ என்னும் மரப்பட்டைப் பிசினைக் குறிக்கும்.

**விளக்கம்:**

பெரிய அழகான மரம். கூட்டிலைகள்; 5-7 சிற்றிலைகளுடன் கூடியது. சிற்றலைகள் 8-13 செ.மீ நீளத்தில், நீள்வட்டமாகக் காணப்படும். பூக்கள் 1.5 செ.மீ. நீளத்தில் மஞ்சள் நிறமாக, மணத்துடன் பெரிய, அடர்த்தியான கொத்துக்களாகக் காணப் படும். பழங்கள் 2-5 செ.மீ. நீளத்தில், வட்டமாக, பரந்து காணப்படும். அதனுள் ஒரே ஒரு விதை இருக்கும்.

**விளையும் இடம்:**

மத்திய, மற்றும் தீபகற்ப இந்தியாவில் பருவகாலத்தில் இலையுதிர்க்கக் கூடிய மரங்களையுடைய கலப்பினக் காடு களில் காணப்படும். குஜராத், மத்தியப் பிரதேசம், மற்றும் இமயமலையின் உப பகுதிகளில் 1100 மீ. உயரமுள்ள இடங் களில் காணப்படுகிறது. பூக்களுடன் கூடிய மரம் பார்ப்பதற்கு அழகானது.

**மருத்துவப் பண்புகள்:**

இலைகள், பூக்கள் மற்றும் பசை மருத்துவப் பண்பு கொண் டவை. மரத்திலிருந்து கசியும் பசை துவர்ப்பானது. வயிற்றுக் கடுப்பை நீக்கும் குணம் கொண்டது. இதன் செயல்புரியும் தன்மை 'கத்தா' வைவிடக் குறைவானது. இது பல்வலிக்கும் உபயோகப்படுத்தப் படுகிறது. இப்பசை காய்ச்சலுக்கும், சிறுநீர் வெளிப்போதலுக்கும் பயன்படுகிறது. வடிகட்டப் பட்ட இலைச்சாறு கொப்புளங்களுக்கும், பருக்களுக்கும் மற்ற தோல் வியாதிகளுக்கும் பயன்படுகிறது.

இம்மரம் சர்க்கரை நோயைப் பெரிதும் குணப்படுத்துகிறது. இம்மரத்தின் சிறுதுண்டைத் தண்ணீரில் ஒருநாள் இரவுமுழுவ தும் போட்டுவைத்து, பின்னர் அந்த நீரை அருந்துவது மிகுந்த பயனளிப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால், இதற்கு அதிக ஆதாரங்கள் இல்லை. ஒரு மருத்துவப் பரிசோதனையில் 7 சதவீத நோயாளிகள் மட்டுமே இம்முறையில் குணமானதாகத் தெரிய வந்துள்ளது.

**மற்ற பயன்கள்:**

இம்மரம் விலையுர்ந்த மரச்சாமான்கள் செய்ய வும் கட்டிட வேலைக்கும் பயன்படுகிறது.

**மற்ற வகைகள்:**

இதன் மற்றொரு வகையான டெரோகார்ப்பஸ் சாண்டாலினஸ் (Ptcrocarpus santalinus) (ஆங்கிலம் - ரெட் சான்டர்ஸ் வுட்; இந்தி - லால் சந்தன்; சமஸ்கிருதம்-ரக்த சந்தன்) மருந்துகள் தயாரிக்கப் பயன்படுகிறது. இதன் இதயப் பகுதி (மரவைரம்) தலைவலியையும், எரிச்சலையும் தணிவிக்கப் பயன் படுகிறது. மேலும் இம்மரம் விலையுயர்ந்தது. இது தென்னிந்தியாவில் கிடைக்கிறது.

## 64. சர்ப்பகந்தி (Rauvolfia)

**விஞ்ஞானப்பெயர் :** ராவுவால்ஃபியா செர்பென்டினா (Rauvolfia serpentina)

குடும்பம்: அபோஸாயினேசி வண்ணப்படம்: 6

**இந்தியப் பெயர்கள்:**

இந்தி — சோட்டாசாந்த்
வங்காளி — சந்திரா
மலையாளம் — சுவன்ன அவல் பொரி
மராத்தி — ஓர்கயா
சமஸ்கிருதம் — ப்பகந்தா, சந்திரிகா
தெலுங்கு — பாதாலகந்தி
உருது — தான்பருவா
(ஸஹாரன்பூர் (உ.பி) — மூங்கா)

ராவுவால்ஃபியா என்னும் பெயர் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது, ராவுவால்ஃபியா என்னும் இப்பெயர் 16 ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியில் வாழ்ந்த லெய்னார்ட் ராவுவால்ஃப் என்னும் தாவர இயல் நிபுணர் மற்றும் மருத்துவரைக் குறிக்கும்.

**விளக்கம்:**

30-75 செ.மீ. உயரமுடைய, செங்குத்தாக வளரும் கோண வடிவமுடைய் குத்துச் செடியாகும். இலைகள் வட்ட அடுக்காக 8-20 செ.மீ. நீளத்தில், படிப்படியாக இலைக்காம்பை நோக்கிக் குறுகி அமைந்திருக்கும். பூக்கள் 1.5 செ.மீ நீளத்தில் பூவிதழ் வெண்மையாகவோ இளஞ்சிவப்பாகவோ காணப்படும்; காம்பு அடர் சிவப்பாக இருக்கும். பூக்கள் சிறு கொத்துக்களாகக் காணப்படும். பழங்கள் சிறியவையாக, உருண்டு, கருப்பாகவோ கரும் பழுப்பாகவோ பழுத்தவுடன் காணப்படும்.

**விளையும் இடம்;**

இந்தியா முழுவதும் 1000 மீ உயரத்தில் பரவலாகக் காணப்படுகிறது. இமயமலையின் அடிவாரங்களிலும், கிழக்கு, மேற்கு மலைத் தொடர்களின் தாழ்வான பகுதிகளிலும். சாதாரணமாகக் காணலாம். வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரம் முதலிய இடங்களிலும் ஓரளவு கிடைக்கிறது. இது தற்போது பல்வேறு இடங்களிலும் பயிர் செய்யப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

3-4 வயதுடைய செடிகளிலிருந்து இலையுதிர் காலத்தில் சேகரிக்கப்பட்ட பட்டை உரியப்படாத உலர்ந்த வேரிலிருந்து இதன் மருந்து தயாரிக்கப்படுகிறது. ஏறத்தாழ 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இம்மருந்து இந்திய மருத்துவத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இத்தாவரத்தைப் பற்றி சரகரின் புத்தகத்தில் குறிப்புகள் காணப்படுகின்றன.

வேரில் அதிகமான காரசத்து உள்ளது. இது முக்கியமாக மயக்கமூட்டவும், வசியப்படுத்தவும், இரத்த அழுத்தத்தைக் குறைக்கவும் பயன்படுத்தப்படுகிறது. இது தற்போது அதிகமாக பைத்தியம், மிகை இரத்த அழுத்தம் ஆகியவற்றை மட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. இதன் தாமதித்து இயங்கும் மயக்கமூட்டும் தன்மையின் காரணமாக இது கடுமையான நோய்களுக்கு அதிகம் உபயோகப்படுவதில்லை. மன நோயாளிகளுக்கும், கவலையால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் உபயோகிக்கப் படுகிறது. இது அமைதிப்படுத்தும் தன்மை கொண்டது. இம் மருந்தை மூச்சுக்குழல் அழற்சி, க்ஷய நோய், குடல் புண்கள் இவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கக்கூடாது.

குடல் நோய் மற்றும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர் களுக்கு இதன் வேர்கள் மருந்தாகப் பயன்படுகின்றன.

இதன் மற் ருரு வகையான ராவுவால்ஃபியா டெட்ரா ஃபில்லா (R. Tetraphylla) மருத்துவத்தில் உபயோகப்படுத்தப் படுகிறது.

இத்தாவரத்தைப் பற்றி அதிகமான ஆய்வுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. இதில் இந்தியா முன்னணியில் நிற்கிறது. சில நாடுகளில் இதற்குச் சமமான செயற்கை மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

இந்தியாவில் இதன் ஆண்டுத்தேவை 12,000 குவிண்டால் ஆகும். எனவே இதை அதிகமாகப் பயிரிடுவது அவசியமா கும். இத்தாவரம் பெரும்பாலும் சமவெளிகளிலும், பசுமை மாறாக்காடுகளிலும், இமயமலைத் தொடரின் உபபகுதியிலும் பயிர் செய்யப்படுகிறது.

வேர் அல்லது தண்டிலிருந்து வெட்டிய பகுதியிலிருந்தோ அல்லது விதை மூலமாகவோ இதனைப் பயிராக்கலாம். ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து 6-7 குவிண்டால் மருந்து தயாரிக்கப்பட் டிருக்கிறது. 2 ஆண்டுகளே ஆன சில (இந்தப் பயிரின்) விளைநிலங்களிலிருந்து இதை விடவும் அதிகமான விளைச்ச லைப் பெற்றிருப்பதாக டேராடூனிலுள்ள காடுகள் ஆராய்ச்சித் துறை கூறுகிறது.

இதன் ஏற்றுமதி மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. 1977-78இல் ரூ.80,000 மதிப்புள்ள இத்தாவரம் ஏற்றுமதி செய்யப்பட்டுள் ளது.

## 65. இரேவற்சின்னி (Rhubarb)

**விஞ்ஞானப்பெயர்** : ரேயும் எமோடி (Rheum emodi wall. ex. Meissn) புகைப்படம் 21

குடும்பம் : பாலிகனேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — ரேவந்த்சீனி |
| வங்காளம் | — கோகிமா, ரேவந்த்சீனி |
| குஜராத்தி | — கமனிரேவந்த்சீனி |
| சமஸ்கிருதம் | — ரேவட்சீனி |
| தெலுங்கு | — நாட்டு இரேவல்சின்னி |

**விளக்கம்:**

பருமனுன தண்டுடனும், வேர்களுடனும் கூடிய உயரமாய் வளரும் மூலிகையாகும். கீழுள்ள இலைகள் பெரிதாகவும், 60 செ.மீ. குறுக்குவெட்டில் உருண்டையாகவும், பருமனுக வும், 30-45 செ.மீ. நீளமுள்ள இலைக்காம்புகளுடனும் காணப் படும். பூக்கள் நுண்மையாக, கரும் பழுப்பு நிறத்தில், கொத்தாகக் காணப்படும்; பழங்கள் 1-3 செ.மீ. நீளத்தில் பழுப்பாக இருக்கும்.

**விளையும் இடம்:**

இது இமயமலையில் 3000-4000 மீ. உயரத்திலும் காஷ்மீர், இமாசலப் பிரதேசம், பஞ்சாப், உத்திரப்பிரதேசம், நேபாளம் ஆகிய இடங்களிலும் காணப்படுகிறது.

* 'நாட்டு மஞ்சள் சீனக்கிழங்கு' என்றும் அழைக்கப்படும்

**மருத்துவப் பண்புகள் :**

ரேயும் எமோடியின் உலர்ந்த வேர்முண்டுகளிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இதன் இன்ருெரு வகையான ரேயும் வெப்பியானும் (Rheum Webbianum) மருந்து தயாரிக் கப் பயன்படுகிறது. 6-7 வயதான மரத்தின் வேர்முண்டுகள் பூக்கும் காலத்திற்குமுன் மேல்தோல் அகற்றப்படாமல் சேக ரிக்கப்பட்டு, மருந்து தயாரிக்கப் பயன்படுத்தப் படுகின்றன.

இது பேதிமருந்தாகப் பயன்படுகிறது. இதிலுள்ள புதத்துவர் இறுக்கத் தன்மையை உண்டு பண்ணிவிடுவதால் பேதியான பின்னரும் மலச்சிக்கலை ஏற்படுத்துகின்றது. இது நாள்பட்ட மலச்சிக்கலுக்குப் பயன்படா; தற்காலிக மலச்சிக்கலை நீக்க உபயோகிக்கலாம். இது, இதன் இறுக்கத் தன்மையினுல் சில வகை வயிற்றுக் கடுப்பை நீக்கப் பயன்படுத்தப் படுகிறது. உதாரணமாய், எரிச்சலூட்டும் பொருள்களால் குடலில் ஏற்ப டும் கடுப்பு.

இதன் இந்தியத் தேவை ஆண்டுக்கு 40 குவிண்டால் ஆகும். இமயமலையின் உயர்ந்த பகுதிகள் இதைப் பயிரிட ஏற்றவை.

**மற்ற வகைகள்:**

ஆங்கில மருந்தியல் அகராதி ரேயும் பாமாட்டும் (Rheum Palmatum) என்னும் வகையிலிருந்து மருந்து தயாரிக்கப்படு

வதாகக் குறிப்பிடுகிறது. இருப்பினும் இந்திய வகையே ஏற்ற மாற்றாக உபயோகப்படுத்தப் படுகிறது.

## 66. ஆமணக்கு (Castor-Oil Seed)]

விஞ்ஞானப் பெயர் : ரீசினுஸ் கம்யூனிஸ் (Ricinus communis L.)

குடும்பம் : யூஃபோர்பியேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — அரண்டி |
| அஸ்ஸாமி, வங்காளி | — பெரண்டா, ரேடி |
| குஜராத்தி | — திவேலி, எரடியு |
| மலையாளம் | — ஆவணக்கா |
| மராத்தி | — அரண்டி |
| ஒரியா | — ஜடா |
| சமஸ்கிருதம் | — எரண்ட |
| தெலுங்கு | — எரண்டமு |

(கிருஷ்ணா மாவட்டம், ஆந்திரா ஆமதம், பெட்டாஆமதம்)

சில நேரங்களில் இத்தாவரத்தின் பல்வேறு வகைகளும், வெவ்வேறு பெயர்களால் அழைக்கப் படுகின்றன. (உதாரணம்: பாட் ரெண்டி, வெள்ளை விதையுடையவை, ஜோகியா ரெண்டி-பழுப்பு நிற விதைகளையுடையவை) பழங்கால இலக்கியத்தில் இத சித்ரபீஜ, பஞ்சாங்குல, வாதாரி என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது. இவை தாவரத்தின் அமைப்பையும், குணத்தையும், அதன் பாகங்களையும் குறிப்பன. 'சித்ரபீஜ' என்பது விதைகளின் அழகான அமைப்பையும், பஞ்சாங்குல என்பது 5 நரம்புகளையுடைய உள்ளங்கை போன்ற இலை என்பதையும் வாதாரி என்பது வாதத்திற்கு எதிரி என்பதையும் தறிக்கும்.

வணிகப்பெயர் ஆங்கிலப் பெயரைக் கொண்டு அழைக்கப் படுகிறது.

**விளக்கம்:**

மரம்போல் வளரக்கூடிய உயர்ந்த குத்துச் செடியாகும். இலைகள் மிகப் பெரிதாகவும், அகன்றும், மேற்பகுதி வட்ட மாகவும், 7 பகுதிகளாக (சிலவற்றில் 9) பிரிக்கப்பட்ட குழிவு களைக்கொண்டு ஓரங்கள் பற்களுடனும் காணப்படும். பூக்கள் அதிகமாகவும், முடிவில் பெரிய கொத்தாகவும் காணப்படும். பழங்கள் கூர்மையான 6 பிரிவாகப் பிரிக்கப்பட்ட உலர்ந்து வெடிக்கும் வகையைச் சார்ந்தவை. விதைகள் நீள்வட்டமாக வும், விதையுறைகளுடனும் கூடியவை. இதன் ஒரு வகை எப்போதும், பெரும்பாலும், பெரிய தண்டுடன் பெரிய சிவந்த விதைகளையும் கொண்டிருக்கும். இதிலிருந்து கிடைக்கும் எண்ணெய் மெருகூட்டவும் உராய்வுத்தடுப்புக்கும் பயன்படு கிறது. ஆண்டு முழுவதும் காணப்படும் இதன் மற் றுரு வகை சாம்பலும் பழுப்பும் கலந்த விதைகளுடன், மருத்துவத் திற்குப் பயன்படும் எண்ணெய்த் தருகிறது. இதன் மற் றுரு வகை பழுப்பு வெண்கல நிறத்துடன் கூடிய இலைகளைக் கொண்டது; இது அழிவிற்காக வளர்க்கப்படுகிறது.

**விளையும் இடம்:**

இது வயல் வெளிகளின் ஓரங்களிலும், தோட்டம் முதலான இடங்களிலும், காடுகளிலும் மக்கள் வசிப்பிடங்களின் அருகி லுள்ள புறம்போக்குப் பிரதேசங்களிலும் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இம்மரத்தின் விதைகள் மருந்தாகப் பயன்படுகின்றன. இதன் விதைகள் மிகவும் நச்சுத்தன்மை பொருந்தியதால் 2 அல்லது 3 விதைகளேகூட மரணத்தை ஏற்படுத்தி விடும். இதிலிருந்து கிடைக்கும் ஆமணக்கு எண்ணெய் (விளக்கெண் ணெய்) பேதி மருந்தாகப் பயன்படுகிறது. இது பாலுடன் அல்லது பழச்சாறுடன் கலந்து உபயோகிக்கப்படுகிறது. இது களிம்புகளில் இதமளிக்கவும், கண்களுக்கு இடும் மருந்தாக வும் பயன்படுகிறது.

விளக்கெண்ணெய் குழந்தைப் பிறப்பை எளிதாக்குவது ஐயத்திற்குரியதாயினும், இது பேதி மருந்தாக, கர்ப்பமடைந்த பெண்களாலும், மாத விலக்கின்போதும் அதிகமாக உபயோ கப்படுத்தப் படுகிறது.

இது கருத்தடை எண்ணெய்களிலும், களிம்புகளிலும் அதிக மாக உபயோகப்படுத்தப் படுகிறது. (பஸ்தர் பழங்குடிகள் இதன் இலைச்சாற்றை மூட்டுக்களில் ஏற்படும் வலியைப் போக்கவும், இளம் இலைகளை பேதி மருந்தாகவும் பயன் படுத்துகின்றனர்).

இதனுடன் சேர்த்து தயாரிக்கப்படும் ஒரு கூழ்போன்ற பொருள் தோல் அழற்சியிலிருந்தும், படை, சொறி சிரங்கிலி ருந்தும் பாதுகாக்கிறது.

## 67. சந்தனம் (Sandal Wood)

**விஞ்ஞானப் பெயர் : ஸான்டாலும் ஆல்பும்** (Santalum album L)

குடும்பம்: ஸான்டெலேஸி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — *சந்தன், ஸந்தல்* |
| வங்காளி, குஜராத்தி | — *ஸுக்கட்* |
| கன்னடம் | — *ஸ்ரீகந்த, அகாடுக்கந்த* |
| மராத்தி, சமஸ்கிருதம் | — *சந்தன், ஸந்தல்* |
| சமஸ்கிருதம் | — *மலயஜ, போகிவல்லப* |
| தெலுங்கு | — *சந்தன், ஸந்தல்* |

வணிகப் பெயர் இந்தியப் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

*சுமாரான உயரத்துடன் கூடிய, கிளைகள் எப்பொழுதும் கீழ்நோக்கித் தாழ்ந்திருக்கும் மரம்; மரப்பட்டை கருப்பாக வும், கரடுமுரடாகவும், நீண்ட வெடிப்புகளுடனும் காணப்ப டும். வளர்ந்த மரம் வாசனை நிரம்பியது. இலைகள் 4-7 செ.மீ. நீளத்தில் எதிரெதிராக பளபளப்பான மேற்பகுதிகளைக் கொண் டிருக்கும். பூக்கள் சிறியதாக, பழுப்பு நிறத்தில், சிறிய கொத்துக்களாகக் காணப்படும். பழங்கள் உருண்டையாக, 6 மி/மீ. குறுக்கு வெட்டில் கரும்பழுப்பு நிறத்தில் காற்றுடன் காணப்படும்.*

**விளையும் இடம்:**

தக்காணப் பீடபூமிப் பகுதியிலும் பொதுவாகவும், குறிப்பாக அதன் தென் பகுதியிலும் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இம்மரத்தின் வைரம் பாய்ந்த கட்டையிலிருந்து கிடைக்கும் எண்ணெய் மருத்துவக் குணம் மிக்கது. இவ்வெண்ணெய் சிறுநீரை எளிதாக வெளியேற்றவும் நீர்ப்பையழற்சி, மேக வெட்டை, மற்றும் சளிக்கும் பயன்படுகிறது. பித்தப்பையில் ஏற்படும் க்ஷயநோயை அகற்றப் பயன்படுகிறது. இம்மரக் கட்டை பொடியாக்கப்பட்டு, நீருடன் சேர்த்து, கொப்புளங்களுக்குக் களிம்பாகவும், காய்ச்சலின்போது நெற்றியில் தடவவும் தோல் வியாதிகளுக்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் தோல் வியாதிக்குப் பயன்படுகிறது.

**மற்ற பயன்கள்:**

மரக்கட்டைகள் வீட்டிற்குத் தேவையான சாமான்கள் செய்யப் பயன்படுகின்றன. மணத்துடன் நீண்ட நாட்கள் இருப்பதால் ஊதுவத்திகள் செய்யவும், மணமுள்ள பொடிகள் தயாரிக்கவும் உதவுகிறது. இதன் எண்ணெய் ஒப்பனைச் சாதனங்களில் சேர்க்கப்படும் வாசனைப் பொருளாகவும், பூச்சி கொல்லிகள் தயாரிக்கவும் பயன்படுகிறது.

1976-77 இல் ரூ.1 கோடி 70 லட்சம் மதிப்புள்ள சந்தன மர எண்ணெயும் ரூ. 70 லட்சம் மதிப்புள்ள சந்தனத்தூளும், துண்டுகளும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

## 68. அசோகு (Asoka)

**விஞ்ஞானப் பெயர் :** ஸாராகா அசோகா (Saraca asoca Roxb. De Wilde)

குடும்பம்: சீசல்பீனியேசி

**இந்தியப் பெயர்கள்:**

இந்தி, வங்காளி — அசோகா

குஜராத்தி — ஆஷோபாலவ

ஒரியா, மலையாளம்,
மராத்தி, கன்னடம் — அசோகா
தமிழ் — நெட்டிலிங்க மரம்

வணிகப் பெயரான அசோகு என்பது பொதுவான இந்தியப் பெயராகும். புராணங்களின்படி சீதை சிறை வைக்கப்பட்ட அசோக வனத்தில் இருந்த மரங்களைக் குறிக்கும்.

**விளக்கம்:**

சிறிய, கூட்டிலைகளைக் கொண்ட, எப்போதும் பசுமையான கிரீடம் போன்று அடர்த்தியாகக் காணப்படும் மரமாகும். சிற்றிலைகள் 7-25 செ.மீ. நீளத்தில், ஓரளவு தோல்போன்று காணப்படும். பூக்கள் பளபளப்பான ஆரஞ்சு நிறத்தில், சிறிய, அடர்ந்த கொத்துக்களாகக் காணப்படும். பழங்கள் 15-25 செ.மீ நீளத்தில், தட்டையாகக் காணப்படும். பல விதைகளைக் கொண்டது.

**விளையும் இடம்:**

இம்மரம் மத்திய மற்றும் கிழக்கு இமயமலைப் பகுதியிலும், கிழக்கு இந்தியா மற்றும் தென்னிந்தியாவிலும் காணப்படு கிறது. இதன் அழகான மலர்களுக்காக இது பயிரிடப் படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த மரப்பட்டைகள் மருத்துவ குணமுடையவை. இது கருப்பையில் ஏற்படும் நோவகற்றி, மாதவிலக்கின்போது அதிகப்படியான இரத்தப் போக்கை தடுக்கும் மருந்தாகவும், நோய்த்தடுப்பு மருந்தாகவும் பயன்படுகிறது. கருப்பையில் ஏற்படும் இரத்தக் கசிவைக் குணப்படுத்தவும் இது பயன் படுகிறது.

இம்மரப்பட்டையின் வெவ்வேறு கூறுகளைப் பிரித்து, தனித்தனியே இவற்றைக் கருப்பைக் கோளாறுகளைத் தீர்க்கப் பயன்படுத்தியதில் எவ்வித குணமும் தெரியவில்லை. என்வே இம்மரத்தின் ஏதோ ஒரு - இன்னும் தெளிவாக இனம் கண்டு கொள்ளப்படாத - கூறு, அல்லது அனைத்துக்கூறுகளும் இணைந்து ஏற்படுத்தும் விளைவு -இவையே இதன் மருத்துவ குணத்துக்குப் பின்னே இருக்க வேண்டும்.

பூக்கள் பொடியாக்கப்பட்டு நீரில் கரைத்துக் கொடுக்கப் படும்போது இரத்தக் கசிவுடன் கூடிய வயிற்றுப் போக்கைக் குணப்படுத்துகின்றது. விதைகள் சிறுநீரை வெளியேற்றுவதில் அதிகமாகச் செயல் புரிகின்றன.

## 69. கோஷ்டம் (Saussurea)

*விஞ்ஞானப்பெயர் :* *ஸாவுஸுரேஆ லாப்பா* (Saussurea lappa)

குடும்பம் : கம்போசிட்டி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | - கூத் |
| வங்காளி | - குர் |
| குஜராத்தி | - கூத் |
| மலையாளம் | - கோட்டம் |
| சமஸ்கிருதம் | - அகத, குஷ்ட |
| தெலுங்கு | - கோஷ்டம் |

வணிகப் பெயர் அறிவியல் பெயரையும், இந்திப் பெயரையும் அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

என்றுமுள்ள, 2 மீ. அளவு உயர்ந்த ஒரு மூலிகையாகும். இலைகள் பெரியவையாக, அடிப்பகுதி 1.2 மீ நீளமும் இறகுகளுடன் கூடிய இலைக்காம்புகளுடனும் காணப்படும். மேற்பகுதி இலைகள் சிறியவையாக சில நேரங்களில் இலைக்காம்புகளுடன் காணப்படும். இருசிறு மடல்கள் இவ்விலைகளின் அடியில் தண்டினைப் பற்றியிருப்பது போலக் காணப்படும். பூக்கள் 2 செ.மீ. நீளத்தில் நீலம் கலந்த பழுப்பு நிறத்தில் அல்லது ஓரளவு கருமையாக, உருண்ட பூத்தலைகளுடன் காணப்படும். சில பூத்தலைகள் கொத்தாக காம்புக் கவடுகளிலோ மேற்பகுதியிலோ காணப்படும். பழங்களின் மேலுள்ள மயிரிழைகள் (pappus) 1.7 செ.மீ. நீளத்தில் இறகுகள் போன்று, பழுக்கும் பூத்தலைகளுக்கு மேல் அடர்த்தியாகத் தென்படும்.

**விளையும் இடம்:**

2500-4000 மீ. உயரத்தில் காஷ்மீர் மற்றும் அதைச் சார்ந்த பகுதிகளில் காணப்படுகிறது. ஜம்மு, காஷ்மீர் மற்றும் இமாசலப் பிரதேசக் காட்டிலாகாவால் பயிரிடப்படுகிறது; ஒவ்வோர் ஆண்டும் 7000 குவிண்டால் வேர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த வேர்கள் மருத்துவப் பண்பு கொண்டுள்ளன. இம்மருந்து சீழெதிரியாகவும், நச்சு நீக்கியாகவும் பயன்படுகிறது. இத மூச்சுக்குழல் அழற்சி, காசநோய், வயிற்று உப்புசம் மற்றும் சில இதய நோய்களுக்குப் பயன்படுகின்றன. சிறுநீர்ப் போக்கிற்கு உதவுகிறது. தானுக இயங்கும் தசைகளைத் தளர்த்துவதன் மூலம் சளி மற்றும் மூச்சுக்குழல் அழற்சி நோய்களுக்கு இது பயன்படுத்தப்படுகிறது. ஆனுலும் இது தற்காலிகமானதே. இம்மருந்து தோல் வியாதிகளுக்கும், வாதத்திற்கும் பயனுள்ளது, எனக் குறிப்பிடப்படுகிறது. பட்டுப்போன வேர்களிலிருந்து தயாரிக்கப்படும் (அதாவது பெட்ரோலியம் - ஈதர் கரைசல் கூறுகள் நீக்கப்பட்ட) எரிசாராயக் கரைசல் மூச்சுக் குழல் அழற்சிக்குப் பயனுள்ளது எனப் பரிசோதனைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

1977-78 இல் ரூ.2 லட்சம் மதிப்புள்ள இம்மரத்தின் வேர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனுல் இப்போது ஏற்றுமதி தடுக்கப்பட்டுள்ளது.

**மற்ற வகைகள்:**

இதன் மற்ற சில வகைகள் இமயமலை வட்டாரத்தில் காணப்படுகின்றன. இவை மிகவும் குறைந்த அளவு மருத்துவப் பயன் உள்ளவை. இமயமலையின் உயர்ந்த மலைச்சரிவுகளும், இமாசலப்பிரதேசம் முதல் சிக்கிம் வரையுள்ள பகுதியும் இம்மரம் பயிரிட ஏற்றன.

# 70. அரிவாள் மனைப் பூண்டு (Sida)

விஞ்ஞானப் பெயர் : ஸீடா கார்டிஃபோலியா
(Sida cordifolia L.)

குடும்பம் : மாலவேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | | |
|---|---|---|
| இந்தி | - | குங்கி, கரேண்ட்டி |
| வங்காளி | - | பலா |
| குஜராத்தி | - | பலாதானு |
| மலையாளம் | - | கட்டூரம் |
| மராத்தி | - | சிக்னு |
| ஒரியா | - | படியாநானலா |
| சமஸ்கிருதம் | - | ஜயந்தி |
| தெலுங்கு | - | சிறுபேடா |

வணிகப் பெயர் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது. அறிவியல் பெயரான கார்டி ஃபோலியா என்பது இலையின் அமைப்பைக் குறிக்கும். அதாவது, இதய வடிவில் அமைந்தது.

**விளக்கம்:**

சிறிய, அதிகக் கிளைகளுடன் கூடிய குத்துச் செடியாகும். நுண்ணிய நட்சத்திர வடிவிலான மயிரிழைகள் தாவர முழுவதும் காணப்படும். இலைகள் 2 முதல் 5 செ.மீ. நீளத்தில், நீள்வட்டமாகவோ, வட்டமாகவோ, பருத்த ஓரங்களில் பற்களுடன் காணப்படும். இலைக்காம்பு இலையைவிடச் சிறியது. பூக்கள் சிறிதாக, மஞ்சள் நிறத்தில், ஒன்றாகவோ சிலவாகவோ காணப்படும். பழங்கள் 6-8 மி.மீ. குறுக்களவில், 7-10 பாகங்களாகப் பிளவுபட்டு, ஒவ்வொன்றும் அழுத்தமான வலைப்பின்னல் போன்ற கோடுகளுடன் காணப்படும். மேல் முனையில் 2 முட்களுடன் இருக்கும்.

**விளையும் இடம்:**

களைச் செடியாக இந்தியா முழுவதும் காணப்படுகிறது.

பொதுவாகப் புறம்போக்கு இடங்களிலும், திறந்த புதாக காடுகளிலும் காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

இதன் முழுப் பகுதியும் மருத்துவத்திற்குப் பயன்படுகிறது. இது சத்து மருந்தாகவும், இணைவிழைச்சு ஆற்றலை அதிகரிக்கவும் பயன்படுகிறது; விதைகளில் இத்தன்மை அதிகம். இதன் வேரும் இஞ்சியும் கலந்த கஷாயம் சில வகை காய்ச்சலுக்கு நல்லது. பொடியாக்கப்பட்ட வேர்ப்பட்டைகள் (தனியாகவோ, பால் அல்லது சர்க்கரையுடம் சேர்த்தோ) வெண்கசிவுக் கோளாறு மற்றும் நரம்புக் குறைபாடுகளுள்ள பெண்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. வேர்ச்சாறு காயங்களை ஆற்றும் குணமுள்ளது. இவ்வேர்ப்பட்டை நல்லெண்ணெயுடனும் பாலுடனும் சேர்த்துத் தொடக்க நிலைப் பக்கவாத நோய்களுக்கு கொடுக்கப்படுகிறது.

இதன் விதை மேகவெட்டை மற்றும் வயிற்றுவலிக்கு நல்லது.

**மற்ற வகைகள்:**

இதன் மற்ற முக்கியமான வகைகள் பின்வருமாறு: ஸைடா அகூட்டா (Sida acuta) (வங்காளி, இந்தி - பன்மேதி, சமஸ்கிருதம் - பலா) இதன் வேர்கள் நரம்பு மற்றும் சிறுநீரகக் குறைபாடுகளை நீக்கவும், காய்ச்சல் மற்றும் வயிற்றுக் கோளாறுகளைக் குறைக்கவும் பயன்படுகின்றன. இலைகளும் மருத்துவ குணம் கொண்டதாகக் கருதப்படுகின்றன.

ஸீடாரோம்பி ஃபாலியோ (sida rhombifolia) (இந்தி சுவேத் பரேலா, சம்ஸ்கிருதம் - அதிபலா) இது வாதத்தால் ஏற்படும் வலிக்கும், நுரையீரல் காச நோய்க்கும் உறுத்த லடக்கியாகப் பயன்படுகிறது.

ஸீடா ஸ்பி னுசா:(Sida spinosa) (இந்தி - குல்சக்ரி, சமஸ் கிருதம் - நாக் பலா) இதன் வேர்களும், வேர்ப்பட்டைகளும் சிறுநீர்ப்பையில் ஏற்படும் எரிச்சல், மேகவெட்டை மற்றும் காய்ச்சல் ஆகியவற்றைத் தணிப்பதற்கும், சத்து மருந்தாகவும் பயன்படுகின்றன. இலைகளும் இதே குணங்களைக் கொண்டுள்ளன.

## 71. கண்டங்கத்தரி: (Kantakari)

**விஞ்ஞானப் பெயர் :** ஸொலானும் ஸராத்தேன்ஸே (Solanum surattense Burm.f)

குடும்பம்: சொலனேசி வண்ணப்படம்: 8

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — கடேரி, ரீங்கணி |
| அஸ்ஸாமி | — கட்சரேயா |
| கன்னடம், வங்காளம், சமஸ்கிருதம் | — கண்ட்டகாரி |
| குஜராத்தி | — போயரீங்கணி |
| ஒரியா | — பிருஹதி பேங்கனி |
| பஞ்சாபி | — கண்டியாரி, மோகரியான் |
| தெலுங்கு | — சல்லனமுலகா, நீலமுலகா |

கண்டங்கத்திரி என்னும் வணிகப் பெயர் இந்தியப் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

கூர்மையான, அதிகக் கிளைகளுடன்கூடிய மூலிகையாகும். பொதுவாக, பரந்து அல்லது ஒடுங்கிக் காணப்படும். இளங் கிளைகள் நட்சத்திர வடிவிலான நுண்ணிய மயிரிழைகளால் அடர்த்தியாகச் சூழப்பட்டுக் காணப்படும். இதன் பொடி முட்கள் மஞ்சளாக, பளப்பளப்பாக, 1.5 செ.மீ. நீளத்தில் காணப்படும். இலைகள் 10 செ.மீ. நீளத்தில் நடுநரம்பும் மற்ற நரம்புகளும் கூர்மையான மஞ்சள் நிறப் பொடி முட்களுடன் காணப்படும். பூக்கள் பழுப்பாக, 2 செ.மீ. நீளத்தில் சிறுசிறு கொத்துக்களில் இலைகளுக்கு எதிராகக் காணப்பட, பழங்கள் 1.5 - 2 செ.மீ. நீளத்தில் மஞ்சள் அல்லது பழுப்பு நிறத்தில் பச்சை நரம்புகளுடன் உருண்டையாக இருக்கும்.

**விளையும் இடம்:**

இந்தியா முழுவதும் புறம்போக்கு நிலங்களிலும், திறந்த வெளிப் புதர்காடுகளிலும், சாலையோரங்களிலும் காணப்படும்.




கண்டங்கத்தரி

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த வேர்கள் மருந்து தயாரிக்கப் பயன்படுகின்றன. இம்மருந்து க்ஷயரோகம், சளி, நெஞ்சுவலி, மற்றும் சில வகைக் காய்ச்சலுக்குப் பயன்படுகிறது. இது அதிகமாக சிறுநீரை வெளியேற்றுவதுடன், சிறுநீர்ப்பையிலுள்ள கற்களை அரைக்கவும் பயன்படுகிறது. அடிக்கிளை மற்றும் பழங்களின் நுண்ணுயிர் எதிர்ப்புச் சக்தி பரிசோதனை மூலம் நிரூபிக்கப் பட்டுள்ளது.

தொண்டை வறட்சி, மூச்சுக்குழல் அழற்சி, தசைவலிகள், காய்ச்சல் முதலியவைகளுக்குப் பழங்கள் அதிகப் பயனுள் ளவை. பழங்களின் மருத்துவப் பண்பைப் பற்றி இந்திய மருந்தியல் அகராதியிலும் அமெரிக்க மருந்தியல் அகராதி யிலும் எவ்விதக் குறிப்பும் இல்லை.

தண்டும் இலைகளும் விலங்குகளுக்குக் கொடுத்துப் பரிசோ திக்கப்பட்ட போது, அவற்றால் இனப் பெருக்கத்தைக் குறைக்க இயலாது எனத் தெரிய வந்துள்ளது. எனவே, இதைக் கருத்தடைச் சாதனமாக உபயோகிக்க இயலாது. இச்செடியின் சில பகுதிகள் பாம்புக் கடிக்கும் பயன்படுவன என்ற நம்பிக்கையைப் பரிசோதனையின் முடிவுகள் மறுத்துள்ளன.

*(பஸ்தர் பழங்குடிகள் பழச்சாற்றைக் காதுவலிக்குப் பயன் படுத்துகின்றனர்.)*

**மற்ற பயன்கள்:**

தளிரிலைகளும், பழங்களும் பக்குவப்படுத்தப்பட்டு உணவுப் பொருளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**மற்ற வகைகள்:**

ஸொலானும் நீக்ரம் (Solanum nigrum L) வங்காளி - குட்காமாயி, காகமாசி, இந்தி - மகோய்; கன்னடம் - காசிகிடா; பஞ்சாபி - பிலக்) முக்கியமான மருந்துப் பொரு ளாக இந்திய மருத்துவத்தில் விளங்குகிறது. இம்மருந்தை உட்கொள்வது வயிற்றுப் போக்கையும் வயிறு சம்பந்தமான மற்ற நோய்களையும் காய்ச்சலையும் குணப்படுத்தும். இது சிறுநீர்ப் போக்கை அதிகரிக்கச் செய்யும். இத் தாவரத்தில் சாறு குடல்புண்கள் மற்றும் தோல் வியாதிகளுக்கு ஏற்றது. இதன் பழங்கள் மிகவும் முக்கியமானவை. இவை சத்து மருந்தாகவும், பேதி மருந்தாகவும், பசியை அதிகரிக்கவும், க்ஷயரோகத்துக்கும், தோல் வியாதிகளுக்கும், சிறுநீரை

வெளியேற்றவும் அதிக தாகத்தைத் தணிவிக்கவும் பயன்படுகின்றன. காய்கள் அரைக்கப்பட்டு படர்தாமரை நோய்க்கு மருந்தாகப் பூசப்படுகின்றன. மருத்துவப் பண்புள்ள மற்ற முக்கியமான வகைகள் **ஸொலானும் டுல்கமாரா** (S.dulcamara) *(பிட்டர் நைட்-ஷேட்) சமஸ்கிருதம் - காகமாச்சி;* **ஸொலானும் ஃபரோக்ஸ்** (S.Ferox) *(வங்காளி, இந்தி - ராம்பேகுன், சமஸ்கிருதம் - சந்திர - புஷ்பா)* **ஸொலானும் இங்கானும்** (S. incanum) *(இந்தி - காக்லிபட்டா, அஸீத்)* மற்றும் **ஸொலானம் இண்டிகம்** *(வங்காளி - தீத்த - பேகுரி, சமஸ்கிருதம் - பிருகதிகா).*

**ஸொலானம் வியாரம் டியூனல்** *(புகைப்படம்: 26)* - S. Viarum - இதிலுள்ள ஸோலாஸோடினுக்காக அண்மைக்காலத்தில் விளம்பரம் பெற்றுள்ளது. இத்தாவரம் கல்கத்தா மற்றும் இதர பகுதிகளில் ஆய்வுநிலையில் உள்ளது.

**பயிரிடப்படும் வகைகள்:** கத்திரிக்காயும் *(ஸொலானம் மெலோன்ஜினு)* (Solanum melongena) இவ்வகையைச் சேர்ந்ததுதான். மருத்துவப் பண்புமிக்கது. இதன் காய்கள் இதயத்திற்குச் சத்து மருந்தாகவும், பசியைத் தூண்டவும், ரத்தத்தை அதிகரிக்கவும் பயன்படுகின்றன. பழுத்த பழங்கள் மலமிளக்கியாகும்; ஆனுல், பித்தத்தை அதிகரிக்கும். கிரந்திப் புண்களுக்குத் தடவ இலைப் பசை பயன்படுகிறது. இதன் வேர்க் கஷாயமும் இவ்வியாதிக்குக் கொடுக்கப்படுகிறது. **உருளைக்கிழங்கு** *(ஸொலானம் டியூபரோசம்)* (S. Tuberosum) கூடச் சில மருத்துவப் பண்புகளைக் கொண்டுள்ளது. இதைக் கொதிக்க வைத்த நீர் பருக்கள், தோல் வெடிப்புகள், மற்றும் தீக்காயங்களுக்கு உபயோகிக்கப்படுகிறது. இதிலுள்ள மாச்சத்து தோல் களிம்புகள், மாத்திரைகள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**புதுவகை ஒன்றின் அறிமுகம்:**

**ஸொலானம் அவிகுலாரே ஃபார்ஸ்ட்** (S. avuculare) என்னும் வெளிநாட்டு வகையைக் காஷ்மீரில் பயிரிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதிலிருந்து கிடைக்கும் ஸோலாஸோடின் சுரப்பிகளுக்குப் பயனளிக்கக் கூடியது.

# 72. வெள்ளைப்பூத்தாளி (Karaya)

**விஞ்ஞானப் பெயர் :** ஸ்டெர்குலியா உரென்ஸ் ராக்ஸ் (Sterculia urens Roxb)

குடும்பம் : ஸ்டெர்குலியேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — குலு, கடயி |
| குஜராத்தி | — கண்டோல், கரயோ |
| கன்னடம் | — கெம்புதாடே, பூதாலி |
| மலையாளம் | — தொண்டி |
| மராத்தி, பஞ்சாபி | — குலு |
| ஒரியா | — கிரின்டோலா |
| தெலுங்கு | — பொனுகு |
| (சந்தால் பர்காணல் | — தேல்ஹைறச்) |

கரையா என்னும் வணிகப் பெயர் இந்தியப் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

பருவகாலத்தில் இலையுதிர்க்கக்கூடிய, தனது வெள்ளை அல்லது பசுமை கலந்த வெண்மையால் காட்டில் தெளிவாகத் தெரியக் கூடிய, பளப்பளப்பான காகிதம் போன்று மென்மையான மரப்பட்டையையுடைய நடுத்தர அளவுடைய ஒரு மரம். இலைகள் கிளைகளில் முடிவில் அடர்த்தியாகவும், பெரிதாகவும், 20-40 செ.மீ. குறுக்குவாட்டில், மெல்லிய 5 மடல்களுடன் இருக்கும். கீழ்ப்பகுதியில் அடர்த்தியான மயிரிழைகளுடன் காணப்படும். பூக்கள் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில், சிறியவைக, அதிக அளவில், அடர்த்தியான மயிரிழைகளுடன் கூடிய செங்குத்துக் கொத்துகளில் காணப்படும். இதன் பழங்கள் 4 அல்லது 5 எண்ணிக்கையில் பருத்து, திண்மையாக, சிவப்புச் சூலுறைகளுடன் அடர்த்தியாகச் சூழப்பட்ட கொடுக்கு மயிரிழைகளுடன் காணப்படும்.

**விளையும் இடம்:**

இமயமலையின் வெப்ப மண்டலப் பகுதியிலும், கிழக்கு, மத்திய மற்றும் தென் இந்தியாவின் வறண்ட அல்லது பருவ காலத்தில் இலையுதிர்க்கும் காடுகளிலும் காணப்படும்.

**மருத்துவப் பண்புகள்:**

மரத்திலிருந்து கிடைக்கும் பசை மருத்துவப் பண்பு கொண்டது; இது வெள்ளைப் பூத்தாளிப் பசை என அழைக்கப்படும்.

இப்பசைத் தன்னியல்பாகவே ஒரு மலமிளக்கியாகப் பயன்படுகிறது. இப்பசையைத் தோலில் தடவினால் டிராகாகாந்த் (Tragacanth) பசையைவிட மென்மையாக இருக்கும்; இது தொண்டைத் தொற்றுக்கு டிராகாகாந்த் பசையின் மாற்றாகவும், பல்பொடிகள் தயாரிக்கவும், லாசென்ஜஸ் மற்றும் பசைகள் தயாரிக்கவும் பயன்படுகிறது.

(பஸ்தர் பழங்குடிகள் பட்டையைப் பொடியாக்கிப் பெண்களுக்கு மகப்பேற்றின்போது தொல்லையின்றிக் குழந்தை பெறுதற்காகக் கொடுக்கிறார்கள்).

**மற்ற பயன்கள்:**

மரம் வீட்டிற்குத் தேவையான பொருட்கள் தயாரிக்கவும், கதவுகள், படகுகள், சிற்பங்கள், பெட்டிகள் தயாரிக்கவும் பயன்படுகிறது. மரப் பட்டைகளிலிருந்து கிடைக்கும் இழைகள் கயிறுகள் திரிக்கவும், முரட்டுத் துணிகள் நெய்யவும், விதைகள் தின்பதற்கும், பசைக் கூட்டு தயாரிக்கவும் பயன்படுகின்றன.

1977-78 இல் ரூ. 8 கோடி மதிப்புள்ள வெள்ளைப் பூத்தாளிப் பசை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**மற்ற வகைகள்:**

இதன் மற்ற இரண்டு வகைகள்: **ஸ்டெர்குலியா வில்லோசா ராக்ஸ்** (S. Villosa) (இந்தி - ஊதல், ஒரியா - கொதாலோ) இது இந்தியா முழுவதும் காணப்படுகிறது. **ஸ்டெர்குலியா ஃபேடிடா** (ஜங்லி பாதாம்); இது தென்னிந்தியாவிலும் கிடைக்கிறது. இவை மருத்துவக் குணமிக்கவை.

முன்னதிலிருந்தும் கிடைக்கும் பசைப்பொருள் டிராகாகாந்த் பசைக்கு மாற்றாகவும், பின்னதின் விதையில் இருந்து கிடைக்கும் எண்ணெய் மலமிளக்கியாகவும் பயன்படுகிறது.

# 73. நிலவேம்பு (Chirayata)

*விஞ்ஞானப் பெயர் : ஸ்வேர்ட்டியா கிராடா* (Suertia Chirata)
*குடும்பம் : ஜென்ஷியனேசி*

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| *இந்தி* | — *சிராயதா* |
| *வங்காளி* | — *சிரேதா* |
| *கன்னடம்* | — *நேலாபேவ்* |
| *மராத்தி* | — *சிராகிதா* |
| *சமஸ்கிருதம்* | — *கிராததிக்த* |
| *தெலுங்கு* | — *நிலவேம்பு* |

*வணிகப் பெயர் இந்தியாவில் வழங்கும் பெயரை அடிப்படையாகக் கொண்டது.*

**விளக்கம்:**

*1.5 மீ. உயரமுடைய ஓராண்டு வாழும் மூலிகையாகும். இலைகள் எதிர் எதிர் இணைகளாக, 10 செ.மீ. நீளத்தில், காம்புகளின்றி, நுனியை நோக்கியிருக்கும். பூக்கள் வெளிறிய பச்சையாக, பழுப்பு நிறச் சாயலுடன், ஒவ்வொரு பூவிதழ் மடலும் இரண்டு பச்சைநிறச் சுரப்பிகளுடன் காணப்படும். பழங்கள் 6 மி.மீ. அல்லது அதைவிட நீளமாக, நீள்வட்ட வடிவில் இருக்கும்.*

**விளையும் இடம்:**

*காஷ்மீரிலிருந்து - அஸ்ஸாம் வரையிலான, 1200-3000 மீ உயரத்தில் காணப்படுகிறது.*

**மருத்துவப் பண்புகள்:**

*பூக்கும் காலத்தில் சேகரிக்கப்பட்டு, உலர்த்தப்பட்ட முழுத் தாவரமும் மருந்து தயாரிக்கப் பயன்படுகிறது. நிலவேம்பு அதன் கசப்புத் தன்மை, செரிமானப் பண்பு, காய்ச்சல் தணிக்கும் தன்மை நோய்த் தடுப்புத் தன்மை ஆகியவற்றுக்குப்*

புகழ்பெற்றது. இது ஜென்ஷியன் போல அதே குணங்களைக் கொண்டுள்ளது. இது காய்ச்சல், வயிற்றுக் கடுப்பு, பலவீனம் முதலியவற்றிற்கும் கொடுக்கப்படுகிறது. மலேரியாக் காய்ச்சலுக்கும் பயன்படுகிறது. அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகள் இதன் காய்ச்சல் தணிவிக்கும் தன்மையைப் பற்றி நம்பகமான தகவல்களை அளிக்கவில்லை.

***மற்ற வகைகள்:***

*இந்தியாவில் மலைப்பகுதியில் கிடைக்கும் ஸ்வேர்ட்டியாவின் மற்ற 7, 8 வகைகளும் சிராயாதாவைப் போன்று மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளன.*

இதன் ஆண்டுத் தேவை 400 குவிண்டால் ஆகும். இதனைப் பயிரிடுவதை விரிவுபடுத்த வேண்டியது அவசியம். இதைப் பயிரிடுவதற்கு இமயமலையின் உயர்ந்த மலைச்சரிவுகள், காஷ்மீர், இமாசலப் பிரதேசம், பஞ்சாப், உத்தரப்பிரதேசம், அஸ்ஸாம் ஆகியவை பரிந்துரை செய்யப்படுகின்றன.

# 74. லோத் (Lodh)

**விஞ்ஞானப் பெயர்** : சிம்ப்ளோக்காஸ் ராசெமோசா (Symplocos rasemosa)

குடும்பம்: சிம்ப்ளோகாசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — லோத் |
| அஸ்ஸாமி | — லபோங் டாங்க், டியேங்கலமகி |
| வங்காளி | — லோத் |
| குஜராத்தி | — லோத்ர |
| சமஸ்கிருதம், மராத்தி | — லோத்ர |
| தெலுங்கு | — லோட்டுகு |
| (சிங்பூம் | — லுட்மதாரு) |

இதன் சமஸ்கிருதப் பெயரான லோத்ர இதன் கண்நோய் தீர்க்கும் குணத்தைக் குறிப்பதாகும்.

**விளக்கம்:**

6 மீ. உயரமுள்ள சிறிய மரம்; இலைகள் 8-20 செ.மீ. நீளமும், கரும் பச்சை நிறமும் கொண்டு தோல் போன்று சாதாரணமாக

நுனியை நோக்கிக் கூர்மையாகக் காணப்படும். ஓரங்கள் முழுமையாகவோ, பற்களுடனோ காணப்படும். இலைக்காம்புகள் சிறியவையாக, 8-20 செ.மீ. நீளத்திலும், பூக்கள் சிறியவையாக் 1.2 செ.மீ. குறுக்குவெட்டிலும், வெள்ளை அல்லது வெளிறிய மஞ்சள் நிறத்துடன் சிறிய காம்புக் கவடுகளில் கொத்துக்களாகவும் காணப்படும். பழங்கள் 1-1.3 செ.மீ. நீளத்தில், கரும்பழுப்பு நிறத்தில் இருக்கும்.

**விளையும் இடம்:**

கிழக்கு மற்றும் மத்திய இந்தியாவின் சமவெளி, தாழ்குன்றுப் பகுதிகளில் கிடைக்கிறது.

**மருத்துவப் பண்பு:**

புதிய காற்றில் உலர்ந்த மரப்பட்டை மருத்துவப் பண்பு கொண்டது. இது செரிமானக் கோளாறுகளுக்கும், கண் நோய்களுக்கும், குடல் புண்ணிற்கும் பயனுள்ளது. மரப்பட்டைக் கஷாயம் ஈறுகளில் ஏற்படும் ரத்தக் கசிவையும், பல் சொத்தையையும் நீக்குகிறது. இது பிளாஸ்திரியில் வைத்துப் புண்ணுக்கு உபயோகிக்கும்பொழுது புண்ணைப் பழுக்க வைக்கப் பயன்படுகிறது. இது திசுவை இறுக்கும் தன்மை உடையது; மாதவிலக்கின் போது ஏற்படும் இரத்தப் போக்கைச் சீராக்க உதவுகிறது; மலம் நீராகப் போவதைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது. யானைக்கால் நோய்க்கும், சிறுநீரிலுள்ள கொழுப்பைக் கட்டுப்படுத்தவும் இது பயன்படுகிறது.

**மற்ற வகைகள்:**

பஞ்சாப் முதல் அஸ்ஸாம் வரையுள்ள இமாலயப் பகுதியில் **சிம்ப்ளோகாஸ் பானிகுலாட்டா** (S. panculata) லோத் போன்றே அதே குணங்களுடன் சத்து மருந்தாகவும் பயன்படுகிறது.

# 75. நாகை, சம்பல் (Jambol)

**விஞ்ஞானப் பெயர் :** சிஸீஜியும் கூமினி (Sizygium cumini (L) skeels) அல்லது யூஜினியா ஜாம்போலானு (Eugenia jambolana)

*சித்திரம் - 21*

குடும்பம் : மிர்டேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — ஜாமுன் |
| அஸ்ஸாமி | — ஜாமு |
| வங்காளி | — ஜாம், காலா ஜாம், படா ஜாம் |
| குஜராத்தி | — ஜம்பு |
| மலையாளம் | — யாவல் |
| மராத்தி | — ஜாம்பூல் |
| ஒரியா | — ஜாம்கூக் |
| சமஸ்கிருதம் | — ஜம்பூல் |
| லலித்புர், உத்தரப் பிரதேசம் | — காட் ஜாமுன் |

பொதுவான இந்தியப் பெய்ரே இதன் வணிகப் பெயராகும்.

**விளக்கம்:**

பசுமை மாறாப் பெரிய மரமாகும். இலைகள் எதிரெதிராக 8-20 செ.மீ. நீளத்தில், தோல் போன்று, பளபளப்புடனும், மென்மையாகவும் காணப்படும். பூக்கள் சிறியவையாகவும், மங்கிய வெள்ளை நிறத்துடனும், பெரிய கொத்துக்களில் காணப்பட்ட, பழங்கள் 1.5-4 செ.மீ. நீளத்தில் உள்ளீடற்று, முதிராப் பருவத்தில் பழுப்பாகவும், பழுத்தவுடன் கருப்பாகவும் பழச்சாறுடன் காணப்படும். ஒரு விதையே பெரும்பான்மை. பழங்கள் பெரும்பாலும் அப்படியே சாப்பிடப்படுகின்றன. இப்பழத்தின் பழுப்பு நிறமானது தின்ன பிறகு நாக்கைப் பல மணி நேரத்திற்கு பழுப்பு நிறமாக வைத்திருக்கிறது.



சம்பல்

**விளையும் இடம்:**

கால்வாய் ஓரங்களிலும், ஈரப்பசை மிகுந்த சதுப்புநிலப் பகுதிகளிலும் அதிகமாகக் காணப்படுகிறது. இது வறண்ட பகுதிகளில் அதிகம் தென்படுவதில்லை. ஆயினும், இதன் பயிரிடப்பட்ட மரங்கள் ராஜஸ்தான் பாலைவனத்தில்கூட, சில தடை செய்யப்பட்ட இடங்களில் வளர்வதைக் காணலாம்.

**மருத்துவப் பண்புகள்:**

மரப்பட்டை, விதைகள், பழங்கள் ஆகியவை மருத்துவப் பண்புடையவை. மரப்பட்டை திசு இறுக்குத் தன்மை யுடையது; தொண்டை வறட்சி, மூச்சுக்குழல் அழற்சி, க்ஷயநோய், குடல்புண், வயிற்றுப்போக்கு ஆகியவற்றிற்கும், இரத்தத்தைச் சுத்தப்படுத்துவதற்கும் பயன்படுவதோடு தொண்டை கழுவு நீர்மமாகவும் பயன்படுத்தப்படுகிறது. பட்டையிலிருந்து புதிதாக எடுக்கப்பட்ட சாறு ஆட்டுப்பாலுடன் கலந்து வயிற்றுக் கடுப்புக்குக் கொடுக்கப்படுகிறது. விதைகள் சர்க்கரை நோய்க்கு மிகவும் சிறந்தவை. பழச்சாறும் இதே குணத்தைக் கொண்டுள்ளது. ஆனாலும், விதைத் தயாரிப்புகளின் சக்தி சிறப்பாகக் குறிக்கத்தக்கது. இதை வாய்மொழி உட்கொள்வதைவிட ஊசிமூலம் உடலில் செலுத்தியபோது இம்மருந்தின் சக்தி நன்கு தெரிந்தது.

இதன் நீரிழிவு எதிர்ப்புச் சக்தி இந்திய வேங்கை மரத்தின் சக்தியைவிட அதிகம்.

**மற்ற பயன்கள்:**

இப்பழங்கள் பெரும்பாலும் அப்படியே தின்னப் படுகின்றன. மரங்கள் இதர வேலைகளுக்குப் பயன்படுகின்றன.

**மற்ற வகைகள்:**

மருத்துவத்திற்குப் பயன்படும் முக்கியமான இதன் மற்றொரு வகை **சிஸீஜியும் அரோமேட்டிகும்** (Syzygium aromaticum) (இந்தி - லவங்க், ஆங்கிலம் - க்ளோவ்).

கிராம்பு என்பது இம்மரத்தின் உலர்ந்த பூமொட்டுக்கள் ஆகும். இது ஒரு வேகமான நெடி உடையது; உணர்ச்சியூட்டக்கூடியது. வயிற்று உப்புசத்திற்கு மருந்தாகப் பயன்படக் கூடியது.. இது அஜீரணத்திற்கும், குமட்டல் மற்றும் வாந்தியைத் தடுப்பதற்கும் பயன்படுகிறது.

கிராம்புத் தைலம் நோய்க்காப்புப் பொருளாகவும் சீமெழுதிரியாகவும் பயன்படுகிறது. இதை உட்கொள்வது வயிற்று உப்புசத்திற்கும், நோய்த் தடுப்புக்கும் பயன்படுகிறது.

1970-71இல் ரூ. 10 லட்சம் மதிப்புள்ள கிராம்பு எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

## 76. புளி (Tamarind)

**விஞ்ஞானப் பெயர் :** டாமாரீன்டஸ் இண்டிகா (Tamarindus indica) சித்திரம் - 22

குடும்பம் : சீசல்பீனியேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — இம்லி |
| குஜராத்தி, வங்காளி | — ஆம்பலி |
| கன்னடம் | — சிஞ்ச |
| மலையாளம் | — வாளம்புளி |
| மராத்தி | — ஆம்பலி, சிஞ்ச |
| ஒரியா | — தேன்துலி |
| சமஸ்கிருதம் | — ஆம்லிகா |
| தெலுங்கு | — ஆம்லிகா |

வணிகப் பெயர் பொதுவான ஆங்கிலப் பெயரை அடிப்படை யாகக் கொண்டது.

**விளக்கம்:**

பெரிய மரம்; கூட்டிலைகளுடன், சிற்றிலைகள் 10-20 இணையாக 1 செ.மீ. நீளத்தில் காணப்படும். பூக்கள் மஞ்சளாக, சிவப்புக் கோடுகளுடன், இலைகளின் அருகில் சிறிய, நிமிர்ந்த கொத்துக்களில் காணப்படும். பழங்கள் 8-20 செ.மீ. நீளத்திலும் 2-3 செ.மீ. குறுக்களவிலும் சதைப்பற்றுடன், பழுப்பு நிறத்தில் தொங்கிக் கொண்டிருக்கும். 3-12 விதைகள்; கரும் பழுப்பு நிறம்; பளபளவென்று, இழைகளுடன் கூடிய சதைப்பற்றுக்குள் காணப்படும். இதிலுள்ள புளிப்புச் சத்திற்காக (டாமரிண்ட்) இது புகழ் வாய்ந்தது.




புளி

**விளையும் இடம்:**

இது பொதுவாக மத்திய மற்றும் தென்னிந்தியாவில் காணப்பட்டாலும், இந்தியா முழுவதும் சாலையோரங்களிலும் தோட்டங்களிலும் வளர்க்கப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இப்பழத்தின் சதைத் தொகுதி மருத்துவப் பண்புள்ளது. புளிய மரத்தின் பழச்சதை மலமிளக்கிப் பண்புடையது; இதை நீரில் கலந்து புத்துணர்ச்சியூட்டும் பானமாக அருந்தலாம்; காய்ச்சலுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இது மலமிளக்கியாகத் தனியாகவோ வேறு சில பேதி மருந்துகளுடன் சேர்த்தோ உட்கொள்ளப்படுகிறது. மற்ற மலமிளக்கிகளுடன் சேர்த்து இதை உபயோகிக்கும்போது இது அவற்றின் இயல்பைக் குறைக்கிறது.

**மற்ற பயன்கள்:**

இம்மரம் பூச்சிகளால் அரிக்கப்படாது. எனவே இது விவசாயக் கருவிகள் செய்யவும், வீட்டு உபயோகச் சாமான்கள் செய்யவும், மரச் சாமான்கள் செய்யவும், அடுப்பெரிக்கவும், துப்பாக்கி மருந்து தயாரிக்கவும் பயன்படுகிறது; இலைகளிலிருந்து மஞ்சள் சாயம் தயாரிக்க முடிகிறது; இதன் பழங்கள் சில்வர், மற்றும் பித்தளைப் பாத்திரங்களைத் துலக்குவதற்கு உதவுகிறது; விதைகள் ஜாம், ஜெல்லி தயாரிக்கவும் விதைப்பொடி சிலவகை ஆடைகள் தயாரிக்கவும் மரசிமெண்ட் தயாரிக்கவும் பயன்படுகிறது.

1977-78இல் ரூ. 1.5 கோடி மதிப்பள்ள புளியம்பழம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

## 77. அக்கம், தான்றி (Belleric Myrobalan)

(பஹேரா)

**விஞ்ஞானப் பெயர் :** டெர்மினலியா பெல்லிரிகா (Terminalia bellirica)

குடும்பம் : காம்ப்ரீடேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — பஹேரா |
| அஸ்ஸாமி | — போவியான், ஹாவல்லுச |



தான்றி

| | |
|---|---|
| வங்காளி, குஜராத்தி, மராத்தி, பஞ்சாபி | — பஹேரா |
| சமஸ்கிருதம் | — தேல்ஃபல் |
| தெலுங்கு | — ட்டாடி ட்டான்ட்ரா, தான்னிகா |
| (சிட்டகாங் | — போராகோட்டா |
| சாந்தால் | — லோபோன்) |

பஹேரா என்னும் வணிகப் பெயர் இந்தியப் பெயரை அடிப்படையாகக் கொண்டது. பெல்லரிக் என்னும் அறிவியல் பெயர் இதை செபூலிக் மைராபலான் வகையிலிருந்து பிரித்துக் காட்டப் பயன்படுத்தப்படுகிறது.

**விளக்கம்:**

தாங்கும் வேர்களுடன்கூடிய பெரிய மரம். இலைகள் பெரியவை; 10-25 செ.மீ. நீளமுடையவை; கிளைகளின் அருகில் கொத்தாகக் காணப்படும். பூக்கள் சிறியவையாகவும், வெளிறிய பச்சை நிறத்திலும், கெட்ட மணமுடனும், சிறிய காம்பிலிகளில் காணப்படும். பழங்கள் 2-3 செ.மீ. நீளத்தில் நீள்வட்ட வடிவில், பழுப்பு நிறத்தில், அடர்த்தியாக மூடப்பட்ட மயிரிழைகளுடன் காணப்படும்.

**விளையும் இடம்:**

மேற்கு இந்தியாவின் வறண்ட பகுதிகளைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் 1000 மீ. உயரத்தில் காணப்படுகிறது. இது அதிகமாக பல மர வகை உள்ள இலையுதிர்க் காடுகளில் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இதன் உலர்ந்த பழங்களிலிருந்து ' பஹேரா மருந்து தயாரிக்கப்படுகிறது. இப்பழங்கள் வயிற்றுக் கோளாறு களுக்கும், அஜீரணத்துக்கும் ஏற்றவை. இது மூளைக்கு ஏற்ற சத்து மருந்தாகவும், கண் எரிச்சலைக் குளிர்விக்க உதவும் கழுவு நீர்மமாகவும் பயன்படுகிறது. மூலம், தொழுநோய், முறைக் காய்ச்சல், காய்ச்சல் ஆகியவற்றிற்கும் ஏற்றது. பாதி பழுத்த இதன் பழங்கள் பேதி மருந்தாகும்; ஆனால், பழுத்த மற்றும் உலர்ந்த பழங்கள் இதற்கு எதிரான இயல்புடையன.

இப்பழம், இந்தியாவில் புகழ்வாய்ந்த 'த்ரிஃபலா' தயாரிக்க உதவும் மூன்று கூறுகளில் ஒன்று; மற்ற இரண்டு, நெல்லிக்காய் (ஆம்லா), ஹர்ரா, இரண்டும். இது ஈரத்தை தாங்கக்கூடியதாகையால் இம்மரம் படகுகள் செய்யவும், வேளாண் கருவிகள் செய்யவும் பயன்படுகிறது. இதிலிருந்து கிடைக்கும் பதத்துவர் துணிகள் மற்றும் தோல்களுக்கு நிறமூட்டவும் மசிகள் தயாரிக்கவும் பயன்படுகிறது.

**மற்ற வகைகள்:**

மருத்துவப் பண்புள்ள இதன் மற்ற வகைகள் பின்வருமாறு:

**ஹரக்கஜ்: டெர்மினலியா செபுலா** (T. Chebula) பஹேரா விளையும் இடங்களில் இதுவும் காணப்படுகிறது. பழைய இலக்கியங்களில் அப்யதா (வலி நிவாரணி) என அழைக்கப்படுகிறது. இது சுமாரான உயரத்துடன்கூடிய மரம். இலைகள் 10-20 செ.மீ. நீளத்திலும் நீள்வட்டமாகவும், கிளைகளின் முடிவில் கொத்தாக இல்லாமல் எதிரெதிரில் இணை இணையாகவும் காணப்படும். இலைகளின் அடிப்பகுதியில் இரண்டு சுரப்பிகள் உள்ளன. பூக்கள் மங்கிய வெண்மை நிறத்தில் கிளைகளின் முடிவில் காம்பிலிகள் காணப்படும். பழங்கள் 2-4 செ.மீ. நீளத்தில், 5 கோடுகளுடன் எளிதில் தெரியும்படி இருக்கும்.

உலர்ந்த பழங்கள், **செபுலிக் மைரோபலான்,** அல்லது ஹர்ரா எனப் பொதுவாக வழங்கப்படும் மருத்துவப் பண்பு உடையன. இது நாள்பட்ட குடல்புண், காயங்கள், தீப்புண்கள் மற்றும் வாயின் சளித்தசைகளில் எரிச்சல் ஆகியவற்றைக் குணப்படுத்தும் களிம்பாகப் பயன்படுகிறது. இது பேதி மருந்தாகவும், ரத்த அழுத்தத்தைக் குறைக்கும் இதயச் சத்து மருந்தாகவும் பயன்படுத்துப் படுகிறது. மேலும், இது ஈறுகளைப் பலப்படுத்தவும், 'த்ரிஃபலா' தயாரிக்கவும், வீடுகளில் இனிப்புகள், ஊறுகாய்கள் தயாரிக்கவும் மெதுவான பேதி மருந்தாகவும், செரிமான மருந்தாகவும் பயன்படுகிறது. 1977-78இல் ரூ. 40 இலட்சம் மதிப்புள்ள மைரோபலான் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**டெர்மினிலியா அர்ஜுனு** (T. arjuna)

(இந்தி – அர்ஜுன், காஹு, கோவ்ஹா; சமஸ்கிருதம் இந்த்ரத்ரும்)

இந்தியா முழுவதும், பெரும்பாலும் கால்வாய் ஓரங்களிலும், ஈரமான இடங்களிலும் காணப்படுகிறது.

இம்மரப்பட்டை காய்ச்சலுக்கும், எலும்பு முறிவுக்கும், அடிபட்ட காயத்திற்கும் சத்து மருந்தாகப் பயன்படுகிறது; இதயத்துக்கு வலுவூட்டும் மருந்தாகவும் பயன்படுகிறது.

பழைய சமஸ்கிருத இலக்கியங்களில் இது ஆற் ருரங்களில் காணப்படும் மரம் எனப் பொருள்படும் நதிஸரஜா என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது.

## 78. அமிர்தவல்லி (Tinospora)

(கிலோ)

**விஞ்ஞானப் பெயர் :** டிஞேஸ்போரா கார்டிஃபோலியா (Tinospora Cordifolia)

குடும்பம்: மெனிஸ்பெர்மேசி வண்ணப்படம்: 9

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — கிலோய, கிலோ |
| வங்காளி | — குலான்சோ |
| குஜராத்தி | — குல்வேல் |
| கன்னடம் | — அனேபுலே, அம்ருதபல்லி |
| மலையாளம் | — அம்ருத |
| மராத்தி | — குல்வேல் |
| தெலுங்கு | — குடுசி |
| சமஸ்கிருதம் | — அம்ருதவல்லி |
| (சென்னை | — திப்பதீகா) |

டிஞேஸ்போரா என்னும் வ்ணிகப் பெயர் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது. கிலோ என்பது பொதுவான இந்தியப் பெயராகும்.

**விளக்கம்:**

சாறு நிறைந்த தண்டுடன் கூடிய பெரிய கொடியாகும். ஆலமரத்தைப் போன்று விழுதுகளுடன் காணப்படும். தண்டும், கிளைகளும் வெண்சுரப்பிப் புள்ளிகளுடன் காணப்படும். இலைகள் 5-10 செ.மீ. நீளத்தில் முட்டை வடிவிலோ வட்டமாகவோ 7-9 நரம்புகளுடன் இருக்கும்; இலைகளைவிடச் சிறிது குட்டையான இலைக் காம்புகள்;

பூக்கள் நுண்ணிதாக, ஆண், பெண் பூக்கள் தனித்தனியாக காணப்படும்; ஆண் புக்கள் பூவடிச் செதில்களின் கவடுகளில் குழுவாகவும் பெண் பூக்கள் தனியாகவும் காணப்படும்; பழங்கள் சிவப்பாக, பட்டாணி அளவில் காணப்படும்.

**விளையும் இடம்:**

இந்தியாவின் வெப்ப மண்டலப் பிரதேசம் முழுவதும் காணப் படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

வேனிற் காலத்தில் சேகரிக்கப்பட்டு, பட்டைகளுடன் உலர்த்தப்பட்ட தண்டு மருத்துவப் பண்புடையது. இது முறைக்காய்ச்சலைத் தணிவிக்கவும், சத்து மருந்தாகவும், இணை விழைச்சினைத் தூண்டும் மருந்தாகவும் பயன்படுகிறது.

இதன் வேரிலிருந்தும் தண்டிலிருந்தும் கிடைக்கும் மாச்சத்து வயிற்றுக்கடுப்புக்கும் வயிற்றுப்போக்கிற்கும் பயன்படு வதுடன் சத்து உணவாகவும் பயன்படுகிறது.

## 79. சாறணை (Bishkhapra)

**விஞ்ஞானப் பெயர் :** டிரியான்தெமா போர்ட்டுலாகாஸ்ட்ரும் (Trianthema portulacastrum L.)

குடும்பம் : ஃபாய்காய்டி சித்திரம் - 24

**இந்தியப் பெயர்கள்:**

இந்தி — லால்ஸாபுனி
வங்காளி — ஸாபுனி
குஜராத்தி — ஸாட்டோடி
கன்னடம் — முச்சுஜோனி, கொம்மே
பஞ்சாபி — விஷ்கப்ரா
சமஸ்கிருதம் — புனர்நவி
தெலுங்கு — கலிஜேரு

**விளக்கம்:**

சாறு நிறைந்த, படரும் மூலிகை; தண்டு அதிகக் கிளைகளுடன் கோண வடிவில் காணப்படும். இலைகள்



சாறணை

அகலமாக நுனியை நோக்கி இருக்கும். பூக்கள் மிகவும் சிறியவையாக இலைக் காம்பின் அடியில் பெரிதும் மறைந்து காணப்படும். பழங்கள் சிறியவையாக, பூக்களைப் போன்று இலைக்காம்புகளின் அடியில் மறைந்து காணப்படும். கருப்பு நிறமுள்ள பல விதைகள் சிறுநீரக வடிவில், மெல்லிய மேல் மூடிய மயிரிழைகளுடன் காணப்படும்.

**விளையும் இடம்:**

இந்தியா முழுவதும் காணப்படுகிறது

**மருத்துவப் பண்புகள்:**

இலைகள் மருத்துவப் பண்புள்ளவை. இலைகளில் புனர்நவைன் என்னும் காரச்சத்து உள்ளது.' இது சிறுநீரை அதிகமாக வெளியேற்றக் கூடியது. எனவே இது மகோதர நோய்க்குப் பயன்படுகிறது. இது கல்லீரல், சிறுநீரகம் ஆகியவற்றின் கோளாறுகளால் வீங்கிப் போன உடம்புக்குப் பயனளிப்பது. மிகவும் முற்றிய நிலையிலும்கூட இது பலனளிக்கக் கூடியது; ஆனால் நிரந்தரமாகப் பலன் தரும் என்று சொல்வதற்கில்லை.

இதன் முழுப் பகுதியும் கருக்கலைவுக்கு உபயோகப்படுத்திப் பரிசோதித்ததில் இது ஓரளவு கருப்பையைச் சுருங்க வைப்பது தெரிய வந்தது.

**மற்ற வகைகள்:**

இதன் மற்றொரு வகையான டிரியான்தெமா டேகான்ட்ரா (Trianthema decandra) மருத்துவப் பண்புடையது. வேர்கள் மலமிளக்கியாகவும் மாதவிடாயைத் தடைப்படுத்தவும், விரை எரிச்சலைத் தணிவிக்கவும் பயன்படுகின்றன. இதன் கருக்கலைப்புத் தன்மையைப் பரிசோதித்ததில், இந்த இயல்பை இது பெற்றிருப்பதாய் முடிவாக நிரூபணமாகவில்லை.

## 80. நெருஞ்சி (Gokhru)

**விஞ்ஞானப் பெயர்** : டிரிபுலஸ் டெரஸ்டிரிஸ் (Tribulus terrestris L)

குடும்பம்: சைகோஃபிலேசி



நெருஞ்சி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — சோட்டோ கோக்குரு |
| பஞ்சாபி, வங்காளி | |
| குஜராத்தி, மராத்தி | — கோக்ரு |
| கன்னடம் | — நேகலு |
| மலையாளம் | — நெரிங்கில் |
| சமஸ்கிருதம் | — லகு கோக்ஷுர |
| தெலுங்கு | — பல்லேரு |

இதன் வணிகப் பெயர் இந்தியப் பொதுப் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

நிலத்தில் படிந்த நிலையில் பரவி வளரும் மூலிகையாகும். நுண்ணிய மயிரிழைகளால் அடர்த்தியாகச் சூழப்பட்டிருக்கும். இலைகள் எதிரெதிரில் இணை இணையாக 5-8 செ.மீ. நீளத்தில், கூட்டிலைகளாகக் காணப்படும். சிற்றிலைகள் 4-7 கிளைகளாக 8-13 மி.மீ. நீளத்தில் இருக்கும். பூக்கள் வெளிறிய-மஞ்சள் நிறத்தில் 1-1.5 செ.மீ. குறுக்கு வெட்டில் எதிரெதிராக, தனியாக, இலைகளுக்கு இணையாகக் காம்புக் கவடுகளில் காணப்படும். பழங்கள் குறிப்பிடத்தக்கவை. அதிகமான முட்களுடன் காணப்படும். பழங்கள் அடிக்கடி ஆடைகளில், மிருகங்களின் உடம்பில் மற்றும் வாகனங்களின் சக்கரங்களில் ஒட்டிக் கொள்ளும். சைக்கிள் ஓட்டுபவர்கள், சைக்கிள் ட்யூப் ஓட்டையாகி காற்று வெளியேறுவதற்கு இதைக் காரணம் காட்டுவார்கள். பழங்களில் 5 பகுதிகள், ஒவ்வொன்றிலும் அதிகமான விதைகள் காணப்படும்.

**விளையும் இடம்:**

இது இந்தியா முழுவதும் 3000 மீ. உயரமுள்ள இடங்கள் வரை காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

பழங்களிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. பழங்கள் சிறுநீரகக் கோளாறுகளுக்கும், இணைவிழைச்சுப் பலவீனத்திற்கும் ஏற்றவை. இது குளிர்ச்சியானது. இதன் வடிசாறு கீல்வாதத்திற்கும், சிறுநீரகக் குறைபாடுகளுக்கும் ஏற்றது. இது சிறுநீர்ப் போக்கை அதிகப்படுத்துகிறது. இச்செயல் பரிசோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

டிரிபுலஸ் டெரஸ்டிரிஸ், பொதுவாக, நெருஞ்சி என்று அழைக்கப்படுகிறது. 'படோ கோக்ரு' என்றழைக்கப்படும் பெடலியம் மியூரக்ஸ் (பெடலியேசி) நெருஞ்சி போன்ற குணங்களே படைத்தது, ஆயுர்வேதத்தில் அதிகமாக உபயோகிக்கப்படுகிறது.

## '81. காகித்தம் (Tylophora)

*(அந்தமூல்)*

**விஞ்ஞானப் பெயர் :** டைலோ ஃபாரா இண்டிகா அல்லது டைலோ ஃபாரா ஆஸ்த்மாட்டிகா (Tylophora indica syn. T. asthmatica)

குடும்பம் : ஆக்ஸ்லிபியேடேசி வண்ணப்படம்: 7

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி, வங்காளி | — *அந்தமூல்* |
| மலையாளம் | — *வள்ளிப்பலா* |
| மராத்தி | — *பிதகாரி* |
| ஒரியா | — *மேன்டி* |

டைலோ ஃபாரா என்னும் வணிகப் பெயர் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது. அந்தமூல் என்பது இத்தாவரத்தின் பொதுப் பெயராகும். ஆஸ்த்மாட்டிகா என்னும் சிறப்புப் பெயர் இது காசநோய்க்கு உபயோகப்படுவதை குறிக்கும்.

**விளக்கம்:**

பல நீண்ட, சதை நிறைந்த வேர்களுடன் கூடிய சுற்றி வளரும் தாவரமாகும். இலைகள் எதிரெதிர் இணைகளில் 5-10 செ.மீ. நீளத்தில் பெரும்பாலும் நுனியை நோக்கியிருக்கும். பூக்கள் பெரிதாக, வெளிறிய மஞ்சள் நிறத்துடன், உட்பக்கம் இளஞ்சிவப்பாக, குறுங்கொத்துக்களில் காணப்படும். பழங்கள் 5-10 செ.மீ. நீளத்தில் இணைகளாக, நுனியை நோக்கி நுண்ணிய பல விளிம்புக் கோடுகளுடன் காணப்படும்.

**விளையும் இடம்:**

இது கிழக்கு, மத்திய, தென் இந்தியாவில், பொதுவாக சமவெளிகளிலும் குன்றுகளில் 1000 மீ. உயரத்திலும் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

இதன் உலர்ந்த வேர்கள் மருத்துவப் பண்பு கொண்டவை. இது இபிகாக்கிற்கு (ipecac) சரியான மாற்றாக வயிற்றுப் போக்கிற்குச் சிகிச்சை செய்வதில் பயன்படுகிறது. இதன் வடிசாறு காசநோய் மற்றும் மூச்சுக் குழல் அழற்சிக்குத் தரப்படுகிறது. இது வாந்தியை வெளிக் கொணரக்கூடியது. இவ்வாறு காசத்தை (asthma) குறைக்க உதவுகிறது.

## 82. நரி வெங்காயம் (Indian Squill)

**விஞ்ஞானப் பெயர் :** *ஊர்ஜினியா இண்டிகா* (Urginea indica (Roxb.) kunth)

குடும்பம்: *லீலியேசி*

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — *ஜங்க்லி பியாஜ், பான் பியாஜ், கோலிகந்தா* |
| வங்காளி, குஜராத்தி | — *இந்தியைப் போல* |
| குஜராத்தி | — *ஜங்கிலி கந்தோ* |
| மராத்தி | — *ரான்காந்தா* |
| சமஸ்கிருதம் | — *கோலகந்த* |
| தெலுங்கு | — *நக்கவல்லிகட்ட* |

'ஸ்குவில்' என்னும் பெயர் இதன் ஐரோப்பிய வகைக்கு சூட்டப்பட்டுள்ளது. இதற்கு இணையாக இந்திய வகையும் கருதப்படுவதால் இது 'இந்தியன் ஸ்க்வில்' என அழைக்கப்படுகிறது.

**விளக்கம்:**

வேர்ப்பூண்டினை உடைய தாவரம். 5-10 செ.மீ. அளவுடைய பூண்டு மங்கிய வெண்மை அல்லது பழுப்பாக, நீள்வட்ட

வடிவில் காணப்படும். அடிமட்டக் கீழ் இலைகள் ஏறக்குறைய தட்டையாகவும் மிக நீண்டும், குறுகியும் கூர்மையாகவும் அமைந்திருக்கும். பூக்கும் தண்டு செங்குத்தாக, 45 செ.மீ. உயரமுடையது. பூக்கள் இளம் பழுப்பு நிறத்தில் மெல்லிய நீண்ட கொத்துக்களில் காணப்படும். பழங்கள் 1.5-2 செ.மீ. நீளத்தில், இரு பக்கங்களிலும் குறுகிக் காணப்படும். விதைகள் கருப்பானவை.

**விளையும் இடம்:**

இது வடமேற்கு இமயமலையில் 2000 மீ. உயரம் வரையிலும் தெற்கு நோக்கி தென்னிந்தியா வரையும், கிழக்குப் பகுதியில் பீகார் வரையும் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த மேல்தோல் நீக்கப்பட்டு, பூண்டு சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்டு உலர்த்தப்படுகிறது. இதிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது.

இது டிஜிட்டாலிசைப் (Digitalis) போன்று அதே குணங்களைக் கொண்டிருந்தாலும், அதிக அளவில் இதை உட்கொள்ள வேண்டும். ஏனெனில் இது மெதுவாகவே செயல் புரியும். டிஜிட்டாலிஸ் தேவைப்படும்போது மட்டுமே இது உபயோகப்படுகிறது. இது இதய நோய்களுக்கும், சளி, மூச்சுக் குழல் அழற்சி ஆகியவற்றிற்கும், சிறுநீர்ப்போக்கை அதிகப்படுத்தவும் பயன்படுகிறது.

இது ஐரோப்பிய வகைக்கு (ஊர்ஜினியா மாரிடிமா Urginea maritima) இணையானது. பரிசோதனைகள் மூலம் இது நாள்பட்ட மூச்சுக்குழல் அழற்சியையும், மூக்கடைப்பையும் குணமாக்குவது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆண்டுத் தேவை 120 குவிண்டால் ஆகும். இதை இந்தியாவின் சமவெளிப் பகுதிகளில் எங்கு வேண்டுமானாலும் பயிர் செய்யலாம்.

## 83. சடாவல்லி (Valerian)

**விஞ்ஞானப் பெயர் :** வாலெரியானு ஆஃபீசிநாலிஸ் (Valerina officinalis L)

குடும்பம் : வேலிரியனேசி

**இந்தியப் பெயர்கள்:**

இந்தி — *பில்லீலோட்டன், பதரங்க்போயா, ஜலாகன்*

மராத்தி — *காலாபலா*

இதன் வணிகப் பெயர் அறிவியல் பெயரை அடிப்படையாகக் கொண்டது.

**விளக்கம்:**

ஒரு மீ. உயரமுடைய ஆண்டுக் கணக்கில் வாழவல்ல தாவரம். வேர்த்தண்டுகள், தண்டை விடப் பருமனாகவும், உறிஞ்சிகளுடனும் காணப்படும். தண்டு குழிந்தும், கீழ்ப்பகுதியில் மயிரிழைகளுடனும் மேற்பகுதியில் மென்மையாகவும் இருக்கும். அடிப்பகுதி இலைகள் நீண்ட இலைக்காம்புடன், மேற்பகுதி சிறுத்து இருக்கும். பூக்கள் வெண்மையாகவோ, வெளிறியோ, சிறிதாக, கிளைகளின் மேற்பகுதியில் சிறு சிறு கொத்துக்களில் காணப்படும். பழங்கள் சிறியவையாக, வழவழப்பாக மயிரிழைகள் இன்றிக் காணப்படும்.

**விளையும் இடம்:**

2500மீ உயரத்தில் காஷ்மீரின் சில பகுதிகளில் மட்டும் காணப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

வேர்முண்டுகளும், வேர்களும் மருந்து தயாரிக்கப் பயன்படுகின்றன. இலையுதிர் காலத்தில் சேகரிக்கப்பட்டு மெல்ல உலர்த்தப்பட்டு மூலமருந்து தயாரிக்கப்படுகிறது.

சடாவல்லி மத்திய நரம்பு மண்டலத்தை அழுத்தும் வினையைக் கொண்டிருப்பதால் நரம்பிழுவைச் சிகிச்சைக்கும்

மற்ற நரம்புக் கோளாறுகளுக்கும், வயிற்று உப்புசத்திற்கும் பயன்படுகிறது. புதிய வேர்கள், வேர் முண்டுகளின் சாறு மிகுந்த பயனுள்ளது. இது காய்ந்துவிட்டால் சக்தி குறைந்துவிடும். புதிய சாறு மயக்கத் தன்மையுடைய தாகையால் தூக்கமின்மைக்கும். சிலவகை இதய நோய்களுக்கும் பயன்படுத்தப் படுகிறது.

**மற்ற வகைகள்:**

இதன் மற் ருரு வகையான வாலெரியான வாலிசி (Valeriana wallichi) புகைப்படம் 28 - மாற்றுப் பெயர்கள் ஜடாமான்ஸி (V.jatamansi) இந்தியன் வாலெரியன், முஷ்க்பாலா (இந்தி), தகர் (சமஸ்கிருதம்) . இமயமலையில் அதிகமாகவும், காஷ்மீர் முதல் அஸ்ஸாம் வரையிலும் கிடைக்கிறது. இது வாலெரியம் ஆஃபீசிநாலிஸ் போன்று அதே குணங்களைக் கொண்டுள்ளது. இதுவும் சில நோய்களுக்கு உபயோகப்படுத்தப் படுகிறது.

இது இந்தியாவில் மலைப் பிரதேசங்களில் பயிர் செய்யப்படுகிறது. ஏறத்தாழ ரூ. 5 லட்சம் மதிப்புள்ள 67 குவிண்டால் வேர்கள் 1974-75இல் ஏற்றுமதி செய்யப்பட்டன.

## 84. அசுவகந்தி (Ashvagandha)

**விஞ்ஞானப் பெயர் :** விதானியா ஸோம்னிஃபெரா
(Withania Somnifera Dunal)

சித்திரம்: 26

குடும்பம் : சோலனேசி

**இந்தியப் பெயர்கள்:**

| | |
|---|---|
| இந்தி | — *அஸ்வகந்த* |
| குஜராத்தி | — *ஆசன், கோடா ஆஸோட், ஸான்டியானு போப்டா* |
| கன்னடம் | — *ஹிரேமத்தினெகிடா* |
| மலையாளம் | — *அமுக்கிரம்* |

மற்ற இந்தியப் மொழிகள் : அசுவகந்தா

வணிகப் பெயர் இந்தியப் பெயரை அடிப்படையாகக் கொண்டது.




அசுவகந்தி

**விளக்கம்:**

சிறிய அல்லது நடுத்தர உயரமுடைய குத்துச் செடி; 1.7மீ. உயரமுடையது. தண்டும், கிளைகளும் நட்சத்திர வடிவான மயிரிழைகளால் சூழப்பட்டு இருக்கும். இலைகள் 10 செ.மீ. நீளத்தில் முட்டை வடிவில் கிளைகளில் மயிரிழைகளுடன் காணப்படும். பூக்கள் வெளிறிய பச்சையாகவும், சிறிதாகவும் 1 செ.மீ. நீளமுள்ளதாகவும் இருக்கும். சில பூக்கள் காம்புக் கவட்டுக் கொத்துக்களில் காணப்படும். பழங்கள் 6 மி.மீ. குறுக்களவில் உருண்டையாகவும், வழவழப்பாக மற்றும் சிவப்பாகவும் இருக்கும். புடைத்த, சவ்வுப்பிடிப்புள்ள புல்லிவட்டத்தினுள் பழங்கள் அடங்கியிருக்கும்.

**விளையும் இடம்:**

இந்தியாவில் வறண்ட பகுதிகளில் காணப்படுகிறது. சில இடங்களில் பயிர் செய்யப்படுகிறது.

**மருத்துவப் பண்புகள்:**

உலர்ந்த வேர்களிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. இது மலச்சிக்கலுக்கும், இணைவிழைச்சு மற்றும் பொதுவான பலவீனங்களுக்கும், வாதத்திற்கும் ஏற்றது. சிறுநீர்ப்போக்கிற்கு அதிக அளவில் உதவக்கூடியது. போதையூட்டும் மருந்தாகவும், உடல் இயக்கங்களில் ஏற்படும் தடைகளைப் போக்கவும், பயன்படுகிறது. இதன் வேர் பொடியாக்கப்பட்டு குடல்புண்களுக்கும், எரிச்சலைத் தணிவிக்கவும் வலியுள்ள இடத்தில் மேற்பூச்சாகவும் பயன்படுத்தப்படுகிறது.

இதன் சீழ்எதிர்ப்புத் தன்மையும், நுண்ணுயிர் எதிர்ப்புத் தன்மையும் சமீபத்தில் சில பரிசோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன.

**மற்ற வகைகள்:**

விதானியா கொவகுலன்ஸ் - (Withania coagulens Dunal)

(இந்தி - ஆக்ரி, பஞ்சாபி கம்ஜீரா) வடமேற்கு இந்தியாவில் கிடைக்கிறது. இதன் பழங்கள் செரிமானத்திற்கும், ஈரல் நோய்களுக்கும் பயன்படுகின்றன.

# BIBLIOGRAPHY


AGHARKAR, S. P. 1953. *Gazetteer of Bombay State. General-A,* Botany Pt. I — *Medicinal Plants,* Bombay.

B. P. C. 1963. *The British Pharmaceutical Codex,* London.

BHANDARI, CHANDRARAJ. 1951-1957. *Vanaushadhi Chandrodaya,* Varanasi, 10 parts (In Hindi).

BHATNAGAR, S. S., H. SANTAPAU, J. D. H. DESA, A. C. MANIAR, N. C. GHADEALLY M. J. SOLOMON, S. YELLORE AND T. N. S. RAO. 1961. Biological Activity of Indian Medicinal Plants, *Indian J. med. Res.* **49**(5): 799-813.

BHATNAGAR, S. S., H. SANTAPAU, F. FERNANDES, V. N. KAMAT, N. J. DASTOOR AND T. N. S. RAO. 1961. Physiological Activity of Indian Medicinal Plants. *J. sci. & industr. Res.* Suppl. **20A**: 1-24.

BISWAS, K. 1956. *Common Medicinal Plants of Darjeeling and the Sikkim Himalayas,* Calcutta.

BISWAS, K. AND E. GHOSH. 1950-1952. *Bharatiya Banaushadhi,* Calcutta, 2 Vols. (In Bengali).

CHOPRA, R. N. 1958. *Chopra's Indigenous Drugs of India.* Revised by R. N. Chopra, I. C. Chopra, K. L. Handa and L. D. Kapur, Calcutta.

CHOPRA, R. N., R. L. BADHWAR AND S. GHOSH. 1949. *Poisonous Plants of India,* New Delhi.

CHOPRA, R. N. AND I. C. CHOPRA, 1955. *A Review of Work of Indian Medicinal Plants,* New Delhi.

CHOPRA, R. N., I. C. CHOPRA AND B. S. VARMA. 1969 *Supplement to Glossary of Indian Medicinal Plants,* New Delhi.

CHOPRA, R. N., S. L. NAYAR & I. C. CHOPRA, 1956. *Glossary of Indian Medicinal Plants,* New Delhi.

DASTUR, J. F. 1951. *Medicinal Plants of India and Pakistan,* Bombay.

DUTT, U. C. 1877. *The Materia Medica of the Hindus,* Calcutta.

GUPTA, R. 1972. "Vital drugs and essential oil bearing plants as future cash crops in India", *Indian Farming,* p. 33.

SUNDERRAJ, D. AND G. BALASUBRAMANYAM, 1959. *Guide to Economic Plants of South India*, Madras.

THAKAR, JAIKRISHNA INDRAJI, 1926. *Plants of Cutch and their Utility*, Bombay (in Gujarati).

TRIVEDI, PANDIT KRISHNA PRASAD. .1961-67. *Dhanvantari, Vanaushadhi Visheshank*, Aligarh, Parts 1-4 (in Hindi).

U. S. D. 1955. *The Unites States Dispensatory*, Philadelphia.

UPHOLF, J. C. Th. 1956. *Dictionary of Economic Plants*, New York.

VIRMANI, O. P., P. SINGH AND A. HUSAIN, 1980. Current status of medicinal plant industry in India, Indian Drugs. 17(10): 318-340.

WATT, G. 1889-1893. *A Dictionary of Economic Products of India*, 6 vols., Calcutta.

WREN, R. C. 1950. *Potter's Cyclopaedia of Botanical Drugs and Preparations*. Revised by R. W. Wren, London.

Anonymous 1948-66. *Wealth of India, Raw Materials*, 7 Vols., New Delhi.

Several journals on general science, economic botany, pharmacology, pharmacy and medicine, particularly the following:

*Indian Journal of Pharmacy: Indian Journal of Medical Research and Journal of Scientific and Industrial Research.*

Printed at Kapoor Art Press, A38/3 Mayapuri Industrial Area, Phase-I, New Delhi 110 064

நமது மூலிகைகளின் மருத்துவ குணம் பற்றிப் பல பழைய நூல்களும், வாய்மொழி இலக்கியங்களும் செய்திகள் பலவற்றைத் தந்தாலும், இவற்றை அறிவியல் பூர்வமாக ஆராயும் முயற்சி சமீபகாலம் வரை மேற்கொள்ளப் படவில்லை. இந்தியாவில் நோயைக் குணமாக்கப் பயன்படுத்தப்படும் மருந்துகளில் முக்கால்வாசி, தாவரங்களிலிருந்து தயாரிக்கப்படுபவை என்று அண்மைக்கால ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இத்துறையில் பல்லாண்டுகளாகத் தானும், தனது சக ஆய்வாளர்களும் செய்த ஆய்வுகளின் அடிப்படையில் இப்புத்தகத்தை எழுதியுள்ளார் டாக்டர் ஜெயின். நமது நாட்டில் காணப்படும் சுமார் நூறுவகை மூலிகைகள் பற்றி விளக்கியுள்ளார்.

டாகடர் எஸ்.கே. ஜெயின் கல்கத்தாவிலுள்ள இந்திய தாவர அளவீட்டுக் கழகத்தின் இயக்குநராகப் பணியாற்றியவர். நம் நாட்டில் உணவாகவும், மருந்தாகவும் பயன்படுத்தப்படும் தாவரங்களைப் பற்றி அறிவதற்காக, இந்தியப்பழங்குடியினர் பலரிடையே தங்கி களப்பணி செய்துள்ளார். மூலிகைகள், தாவர அளவீட்டியல், தாவரப்பாதுகாப்பு, தாவரப்பெயரீட்டியல் போன்ற துறைகளில் பல அரிய கட்டுரைகள் எழுதியுள்ளார்.

ராஜஸ்தானின் தாவரங்கள், உயர் கங்கைச் சமவெளி புற்கள், அழிவுக்கு இலக்காகியுள்ள இந்தியத் தாவரங்கள், இந்தியப் புலி வாழிடங்களின் தாவரவியல் ஆகியவை உள்ளிட்ட பல ஆங்கில நூல்களையும், வனஸ்பதி கோஷ், தாவரப்பெயரீட்டியல் போன்ற இந்தி நூல்களையும் எழுதியுள்ளார்.

ரூ. 38.00

एकः सूते सकलम्

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா